உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 15 } துன்முகி௵ ஆனி௴ 10—7—56 { இதழ் 8

உ

திருச்சிற்றம்பலம்

போன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

உடல்

'உடல்' என்னும் பெயரின் பொருள் யாது? உடன்றான் உடற்றினுன் என்னும் வினைச் சொற்களின் பொருள் வருந்தினுன் வருத்தினுன் என்பது. உடல் + பு = உடம்பு, உயிர்க்கு வருத்தம் விளைக்கும் இடம் ஆதல்பற்றி உடல், உடம்பு எனப்பட்டது. உடலின் பரியாயப் பெயர் பல உள. அவற்றின் பொருள் வெவ்வேறுகும். 'யாக்கை' எழுவகைத் தாதுக்களால் கட்டப்பட்டது. "மெய்" பொய்யாயழிந்தும் மெய்யாய்த் தோன்றுவது. "தேஹம்" வளர்வது, "சரீரம்"-குறைவது. இவ்விரண்டும் வடமொழிப் பெயர்.

உடம்புகளுள்ளே மக்களுடம்பு சிறந்தது. ஏன்? பெறுதற்கு அரியது. 'எண்ணரிய பிறவிதனில் மானிடப்

சுரோணிதமும் சுக்கிலமும் சமமானல் அலிப்பிறப்பு. சுரோணிதம் மிகுந்தால் பேண் பிறப்பு. சுக்கிலம் மிகுந்தால் ஆண் பிறப்பு.

'தாயைப்போலச் சேய்,' 'மகன் அறிவு தந்தை யறிவு'. பேற்றவர் பண்பு பிறந்தவர்க்கு உண்டாம். புரியட்டக தேகத்துடன், பேற்ருேர் உண்ணும் சுவைபற்றி உட்சேன்று சுக்கிலத்தில் சார்ந்து தாய்க்கருவில் சட்டகமாய் நிலத்தில் விழும் உயிர்.

ஒரு வேண்டுகோள்

'சிவஞான சித்தியார்க்கு' 'ஞானவரண விளக்கம்' என்று, முதனூலைப்போலச் செய்யுளுருவில் ஓர் உரை உண்டு. அதைச் செய்தருளியவர் தருமை முதற்குரவர். அதற்கு மாபாடியமும் உண்டு. அதனை இயற்றியருளியவர் தருமை ஆதீனத்தின் அடியவரினத்தில் மிகச் சிறந்து விளங்கிய ஸ்ரீ வேள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்.

ஞானவரண விளக்கமும் அதன் மாபாடியமும் விரைவில் வேளிவரும். நீலகண்டமாபாடியப் பதிப்பு, சித்தியார் பரபக்கவுரை முதலியவற்றில் ஞானவரண விளக்கப் பகுதிகள் மேற்கோள்ளப் பட்டிருக்கின்றன. அதனல், அது நாட்டில் பயில வழங்கியதாகத் தேரிகின்றது. எவரிடத்திலேனும் எந்நூலகத்திலேனும் ஏடுகள் இருப்பின், இவ்வேளியீட்டிற்குப் பயன்படுத்தச் செய்யலாம்,

இவ்வுதவியைப் புரிவோர்க்கு 'இருமைப்பயனும்' எய்தும், அன்பர்கள் இதனை உளங்கோள்க.

துணையாசிரியர்.

முப்பொருள் விளக்கம்

வித்துவான், திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள்
தமிழாசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்.

முன்தொடர்ச்சி மலர் 15, இதழ் 7, பக்கம் 537.

3, இறையியல்

இறையுண்மை

ஆசிரியர் :

முப்பொருள்களுள் இறை உண்டென்பது காட்சியளவை யான் ஒருவாறு உணர்தல் கூடாதாயினும், கருதலளவையான் ஒருவாறு உணர்தல் கூடும். அஃது எங்ஙனமெனின், கூறுதும்.

காணப்பட்ட உலகத்தைக் கொண்டு காணப்படாத கடவுளுண்மையை உணர்தல் கூடும் எனல்

"காணப்பட்ட இவ்வுலகம் செயற்கைப் பொருளாய் இருத்தலின், இதற்குச் செய்வான் ஒருவன் இருத்தல், இன்றியமையாதது; அதனுன், அத்தகைய செய்வோனுகிய இறைவன் ஒருவன் உளன்" என்று இவ்வாறுணரப்படும் என்க.

மாணுக்கன் :

அற்றேல், குடம் முதலியவற்றைக் குலாலன் முதலியோர் செயற்படுத்தக் காண்டலின் அவை செயற்கைப் பொருளாம்; உலகத்தை அங்ஙனம் செயற்படுத்துவோர் காணப்படாமையின் அது செயற்கைப் பொருளாதல் செல்லாது. அதனுன், உலகத்தைச் செய்வோனுகிய இறைவன் உண்டென்பதும் பெறப்படாது; என்னையெனின், 'இறைவன் உண்டோ? இல்லையோ' என்றற்கு, 'உலகம் செயற்கைப் பொருள், இறைவனுற் செயற்படுத்தப் படுதலின்' எனவும் 'ஒன்றனை யொன்று பற்றுதல்' என்னும் குற்றம் பட விடுக்க வேண்டுதலின்.

உலகம் செயற்கைப் பொருள் எனல்

ஆசிரியர் :

அறியாது வினயினய்! என்னை யெனின், செயற்கைப் பொருட்டன்மை இதுவென் றுணர்ந்தாயாயின் இங்ஙனம்பிணங்கு வாயல்லை, எவ்வாறெனின் பொருளுணர்வு பெறுதல் இருமுது குரவரவரும் பிறரும் பொருளைக் காட்டி 'இஃது இன்னது' என்று உணர்த்துதலானே உளதாவதாம். அங்ஙனம் உணர்த்து கின்றுழி, ஒரு குடத்தைக்காட்டி 'இது குடம்' என்றுணர்த்திய வழி, அவ்வாறுணர்த்தப்பட்டான், 'இது குடம்' என்னுந் துணையே உணர்ந்தொழியாது,' குடத்தன்மையையும் உடனு ணர்ந்து 'இத்தன்மை யுடையனவெல்லாம் குடம்' என உணர் தலும், பின்னர்க் குடங் கண்டவழி யெல்லாம் 'இது குடம்' என்றுணர்தலும் வேண்டும்; அவ்வாறின்றி, ஒரு குடத்தை 'இது குடம்' என்றுணர்தலும் வேண்டும்; அவ்வாறின்றி, ஒரு குடத்தை 'இது குடம்' என்றுணர்த்த உணர்ந்த பின்னரும் பிறிதோரு குடத்தைக் கண்டு, 'இஃ துஇன்னது என்றுணர்த்தப் படாமையின், இஃது யாதோ!' என மலைவனயின் அவன் பொருளுணர்வு பெறும் ஆற்றலில்லாத மடவோனவன்? அங்ஙனமே ஒரு செயற்கைப் பொருளை ஒருவன் ஓரிடத்துச் செயற்படுத்தக் கண்டவழி, 'இது செயற்கைப் பொருள்' என்னுந் துணையே உணர்ந்தொழியாது, செயற்கைப் பொருட்டன்மை யையும் உடனுணர்ந்து, இத்தன்மையுடையன வெல்லாம் செயற் கைப் பொருள் என உணர்தலும், பின்னர்ச் செயற்கைப் பொரு ளைக்கண்டவழி யெல்லாம் 'இது செயற்கைப் பொருள்' என் றுணர்தலும் வேண்டும். அவ்வாறின்றி ஒரு செயற்கைப் பொருளை ஒருவன் செயற்படுத்தக்கண்டு உணர்ந்த பின்னரும் பிறிதோரு செயற்கைப் பொருளைக் கண்டு 'இதனைச் செயற் படுத்துவோனைக் காணுமையின் இது செயற்கைப் பொருளோ, அன்ருே!' என ஒருவன் மலைவெய்துவனயின், அவனும் பொரு ளுணர்வு பெறும் ஆற்றலில்லாதவனேயாவன் அவரோடொப்ப நீயும் பல விடத்தும் பல செயற்கைப் பொருள்களைப் பலர் செயற்படுத்தக் கண்டு வைத்தும் அவற்றைச் செயற்கைப் பொருள் என்னுந்துணையே உணர்ந்து செயற்கைப்பொருட்டன்மை இதுவென உணரா தொழிந்தமையின், உலகத்தைச் செயற் படுத்துவோன் காணப்படாமையின் அது செயற்கைப் பொரு ளன்று போலும் என மலைவாயாயினையென்க.

மாணுக்கன் :

அஃதேல், செய்வானேடு உடன் காணப்படுலினும் வேருய்ச் செயற்கைப் பொருட்கு உள்ள தன்மை யாது ?

ஆசிரியர் :

குடம் முதலிய செயற்கைப் பொருள்கள் பலவும் கால வரையறைக் குட்பட்டு முதலும் நடுவும் முடிவும் உடையவாய்த் தோன்றல், நிற்றல், அழிதல் என்னும் முத்தொழில் உடைய வாதலைக் காண்கின்ருமன்றே! அதனுன் அம்முத்தொழில்களை உடைமையே செயற்கைப் பொருட்டன்மை என்பது பெறப்படும். படவே, 'ஒருவன்' என்றும், 'ஒருத்தி' என்றும், 'ஒன்று' என்றும் சொல்லப்படும் பகுப்பினையுடைய உலகம் தோன்றல், நிற்றல், அழிதல் என்னும் முத்தொழிலுடைமையால், செயற்கைப் பொருளாய்ச் செய்வோனை உடைத்தாதல் இனிது துணியப்படும் என்க. ஈண்டுக் கூறிய செயற்கைப் பொருட் டன்மையானே, 'காலத்தோடு பட்டுக் கணந்தோறும் மாறுதல் செயற்கை' என்பதும், 'அவ்வாறன்றி எஞ்ஞான்றும் ஒருபடித்தாய்நிற்றல் இயற்கை' என்பதும் போந்தவாறுணர்க.

“அவனவ ளதுவேனு மவைமூ வினைமையின்
தோற்றிய திதியே”

எனச் சிவஞான போதத்தினும்,

“ஒருவனே டொருத்தி ஒன்றேன் றுரைத்திடு முலக மெல்லாம்
வருமுறை வந்து நின்று போவது மாத லாலே
தருபவ னெருவன் வேண்டும்”

எனச் சிவஞான சித்தியினும் கூறப்பட்டமை காண்க.

மாணுக்கன்

அற்றேல், உலகமாகிய இடத்தின்கண் இடத்து நிகழ் பொருளாயுள்ளனவே தோன்றல், நிற்றல், அழிதல் என்னும் முத்தொழிலுடையராதல் காண்கின்ருமன்றி உலகம் தோன்றவும்

அழியவும் கண்டிலமாதலின் உலகப் பொருள்களன்றி உலகம் முத்தொழிலுடைத்தாகாது நிலைத் தொழில் ஒன்றே உடையது போலும்!

உலகம் முத்தொழில் உடைத்து எனல்

ஆசிரியர்:

அற்றன்று; முதலும் முடிவுமாகிய கால எல்லை அவ்வப் பொருட்டன்மைக் கேற்பப் பெருகியும் சுருங்கியும் நிற்குமாகலின் எண்ணிறந்த பொருள்களது தோற்றக் கேடுகட்கு நிலைக்களனும் மிகப்பெரிய உலகத்திற்கு அவ்வெல்லை கழியப் பெரிதாம். ஆகவே, அது சில் வாழ்நாளுடைய நம்முன்னோர்க்குக் காட்சி யளவையாற் காண்டல் கூடாது. அன்னதாயினும், தோற்றக் கேடுகளையுடைய பொருள்களது தன்மைபற்றிக் கருதலளவை யின் வைத்து உய்த்துணருங்கால், உலகம் முத்தொழிலுடைத் தென்பது நன்கு துணியப்படும் என்றுணர்வாயாக.

மாணாக்கன்:

அங்ஙனமாயின், உலகம் முத்தொழில் உடைத்து என்பத னைக் கருதலளவையின் வைத்து உணருமாறு யாங்ஙனம்?

ஆசிரியர்:

குடம். ஆடை முதலிய தோன்றி நின்றழியும் பொருள்கள் எல்லாம் உடைத்தல், அறுத்தல் முதலியவற்றாற் றனித்தனி வேறுவேறாகக் கூறுபடுக்கப்படும் தன்மையுடைமை காண்கின்றா மாதலின், அங்ஙனம் தனித்தனி வேறுவேறாகக் கூறுபடுக்கப் படும் பொருள் தோன்றி நின்றழியும் என்பது பெறப்படும். படவே, உலகமும் நிலம், நீர் முதலியனவாகத் தனித்தனி வேறு வேறாகக் கூறுபடுக்கப்படும் தன்மையுடைத்தாய் நிற்றலின் அது தோன்றி நின்று அழிதலாகிய முத்தொழில் உடைத்தென்றுணர் தலாகும் என்க. இங்ஙனம் தனித்தனி பிரிக்கப்படும் கூறு களை 'அவயவப் பகுப்பு' என்பர். பொழப்படுதல் முகக்கப்படு தல் முதலியவாற்றான் நிலம் நீர் முதலியனவும் பிரிக்கப்படுதலின் அவையும் கூறுபடுக்கப் படுவனவாமென்க.

அவயவப் பகுப்புடைமை பற்றி உலகம் முத்தொழில் உடைத்தெனத் துணியப்படும் என்பதுணர்த்தற் பொருட்டே சிவஞான போதத்துள், உலகத்தை உலகம் என்னுது, ''அவன் அவள் அது எனும் அவை'' எனவும், (அவை = தொகுதி) சிவ ஞானசித்தியுள் வாளா உலகம் என்னுது ''ஒருவனேடொருத்தி ஒன்றென்றுரைத்திடும் உலகம்'' எனவும் பகுத்தோதியதென்க.

எனவே, ''உலகம் தோன்றி நின்றழிதலாகிய முத்தொழில்களை யுடையது, கூறுபடுக்கப்படும் தன்மை யுடைமையால், ஆடைபோல'' எனக் கருதலளவை கூறப்படுமாறு உணர்ந்து கொள்க.

இனித் தருக்க நூலார், 'உலகம் அணுக்கூட்டத்தான் ஆவது' எனவும், 'அணுக்கள் கூறுபடுக்கப் படுதலும் தோன்றி அழிதலும் இல' எனவும் கூறுவர். அதனுன், அணுக்களும் தோன்றியழிவனவேயாம்' என்பதுணர்த்துதற்கு, அவையும் கூறுபடுக்கப்படும் தன்மையுடையனவாயினும், அஃது அவர்க்கு உடம்பாடன்மையின், உடம்பாடாவதாகிய வேறும் ஓர் ஏதுக் கூறப்படும்.

அஃதாவது : குடம், ஆடை முதலிய முத்தொழில் உடைய பொருள்கள் அறிவில் பொருளாயும், ஒன்ருகாது பலவாயும் இருத்தல் காண்கின்ரு மாகலின், 'அறில் பொருளுமாய்ப் பலவு மாய் உள்ள பொருள் தோன்றி நின்றழியும்' என்பது பெறப்படும். படவே, உலகமும் அறிவில் பொருளாயும் ஒன்ருகாது ஆண், பெண், அலி எனவும், நிலம், நீர், தீ, வளி எனவும் இவ்வாறு பலவாயும் இருத்தலின் முத்தொழில் உடைத்தென்று துணியப் படும்.

சிவ சிவ என்மினே

திரு. சு. அ. இராமசாமிப்புலவர் அவர்கள்,
கருப்பக்கிளர், திருத்துறைப்பூண்டி.

ஐந்தெழுத்து

சிவ சிவ என்பது இரட்டைக் கிளவி எல்லாம்வல்ல முழு முதற் பொருளாகிய இறைவனுக்குப் பெரியோர்களால் அமைக்கப்பெற்ற நூற்றுக்கணக்கான திருப்பெயர்கள் எல்லாவற்றிற்கும் தலைமை பெற்று விளங்குவது சிவம் என்னும் திருப்பெயரேயாகும். சிவம் எனினும் சிவன் எனினும் ஒன்றே. இறைவன் ஒளி வடிவினன். ஒளி செந்நிறவொளியாகவும் வெண்ணிறவொளியாகவும் விளங்கும். இறைவன் செந்நிற ஒளி வடிவினன். அதனை உட்கொண்டே சிவன் என்னும் பெயர் அமைக்கப்பெற்றிருக்கின்றது. சைவத்திற்கு உயிர் நாடியாகிய ஐந்தெழுத்துத் திருமறை சிவன் என்னும் பெயரைத் தன்னகத்துக்கொண்டு விளங்குகிறது. அவ் ஐந்தெழுத் தருமறை நமசிவய என்பது. நமசிவய எனினும் சிவயநம எனினும் ஒன்றே. இவற்றைத் தூலபஞ்சாக்கரம் என்றும் சூக்குமபஞ்சாக்கரம் என்றும் வழங்குவர். “ சிவபரம் பொருளே உனக்கு வணக்கம் ” என்பது இவ்வருமறையின் பொருளாகும்.

சிவ சிவ

‘ சிவ ’ என்னுஞ்சொல் வணக்கம் எனப் பொருள்படும். நம என்பதை விட்டுச் சிவ சிவ என்று இரட்டைக்கிளவியாக மாறும்போது நம என்பது இவற்றுள் தோக்குநின்று விளங்குகின்றது. சிவ சிவ என்பதன் பொருள், சிவபெருமானே! வணக்கம். சிவபெருமானே! வணக்கம் என்றுதான் விரியும். மேலும் இச்சொல், சிவபெருமானே அடியேன் உமக்கு அடைக்கலம். சிவபெருமானே அடியேனைக் காப்பாற்றி அருள்க. சிவபெருமானே அடியேனுடைய குற்றங்குறைகளை எல்லாம் தீர்த்தருள்க என்று பலவாறு விரிந்து, சிவ சிவ என்பாரது அப்பொழுதைய மன நிலைக்கு ஏற்றவாறு வேண்டுகோள் வணக்கமாக அமையும். ஆகவே இது ஐந்தெழுத்து மறையினும் அரிய

கருத்துக்களை எல்லாம் தன்னகத்துக்கொண்டு விளங்குதலை நாம் இனிது உணரலாம். சிவ சிவ என்னும் இச் சொற்களின் பெருமைகளை வேதாகமங்கள்கூட விரித்துரைக்க முடியாமல் தடுமாறுகின்றன.

பலன்

சிவ சிவ என்று செப்புவதன் பலன் இவ்வளவு அவ்வளவு என்று விரித்துரைப்பதற்கு அரியது. ஒருமுறை, சிவ சிவ என்று கூறுகிறவன், எண்ணற்ற பிறவிகளில் செய்த தீவினைகள் எல்லாமும் தீயில் அகப்பட்ட பஞ்சுபோல அழிந்தொழியும். அவன்வழி முறையினரும் தமது தீவினை நீங்கப்பெற்று மேலான நற்கதியை அடைகின்றார்கள். மெய்ஞ்ஞானச் செல்வர்களாகி விளங்கிய பெரியோர்கள் எல்லாரும் தமக்குற்ற அல்லல்களைச், ‘ சிவ சிவ ’ என்னுந் திருமறையைச் செப்பியே போக்கிக்கொண்டனர். திருநாவுக்கரசர் தமக்குச் சமணர்கள் செய்த கொடுமைகளுக்கெல்லாம் எத்தகைய மந்திர தந்திரங்களையும் கையாளவில்லை. எல்லாவற்றிற்கும் ‘ சிவ சிவ ’ என்று கூறிக்கொண்டிருந்தே துன்பம் நீங்கப்பெற்றார். கருங்கல்லில் கட்டிக் கடலில் இட்டபோது பஞ்சாக்கரத் திருப்பதிகத்தைப் பாடிக் கல்லே தெப்பமாக மிதக்கப்பெற்றார். மற்றும் பல பெரியோர் தமக்குற்ற இடுக்கண்களை எல்லாம் சிவ சிவ என்னும் திருமறைகொண்டே போக்கிக்கொண்டனர். இக்காலத்தினுங்கூடப் பலர் நச்சுப் பாம்பு முதலிய தீய உயிர்த்தொகைகளால் தாக்கப்பெறும்போது சிவ சிவ என்று கூறி, நச்சுக்குச் சிறிதும் அச்சம் அற்றவர்களாய், யாதோர் இடையூறும் இன்றி இனிதே வாழ்ந்திருத்தலைக் கண்கூடாகக் காண்கின்றோம் அல்லமோ? இவர்கள் இத் திருமறையைத் தவிர வேறு மணி மந்திரங்களை நாடுவதே இல்லை.

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்(கு)
அவாயம் ஒருநாளும் இல்லை—உவாயம்
இதுவே மதியாகும் இல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்.

என்னும் ஔவைப்பிராட்டியாருடைய பொன்மொழி ஈண்டு பொன்னேனப் போற்றத்தக்கதொன்றன்றோ? மற்றும் திருமூலநாயனார்;

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

சிவசிவ என்றே தெளிகிலர் ஊமர்
சிவசிவ வாயுவும் தேர்ந்துள் அடங்கச்
சிவசிவ வாய தெளிவினுள் ளார்கள்
சிவசிவ வாகும் திருவரு ளாமே,

என்று கூறியிருப்பதும் ஈண்டு எண்ணி மகிழத்தக்கதொன்றும். சிவ சிவ என்னும்மந்திரம் பிறவித் துன்பங்களை எல்லாம் மாய்த் தொழிக்கும் பேற்றிவாய்ந்ததாக இருக்க, இவ்வுலகத் துன்பங் களை ஒழிப்பது ஒரு பெரு வியப்பாகுமோ? சிவ என்னும் இரண் டெழுத்தை மட்டும் ஒருதரஞ் சொன்னால் அவர்கள் அடையும் பெருமைகட்கு எல்லையே இல்லை. மலைகளினும் காடுகளினும் சென்று தங்கிக் காய்கனிகளைப்புசித்துக்கொண்டு தவஞ்செய்வது கூடச் சிவநாமத்தைச் செப்புவதற்கு ஈடாகமாட்டாது. கோடிக் கணக்கான பிறவிகளையும் போக்கி வீடுபேற்றை எளிதில் அடை யலாம்.

மூவுலகும் சிவநாமம் தனக்கு நேரா
மொழிவதனுக் கொன்றுண்டோ வரையின்சாரல்
மேவியிருந் தருந்தவங்கள் புரியும் பேறு
மிக்கவிதற் கிணையாக விளம்ப லாமோ?.

சம்புவின்தன் பெயராகும் இரண்டே ழுத்தும்
ஒருதரஞ்சாற் றிடிற்கோடி பவந்தாம் நீங்கி
உம்பருஞ்சேர் வரியமுத்தி சேர்வர்.

என்று சிவரகசியமுங் கூறுகின்றது.

பெருமை

துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் சிவ சிவ என்பதன் பெருமையை நன்கு உணர்ந்து உலகோர்க்கும் அறிவுறுத்தினர். “ இழிவு பொருந்திய தீய செயல்களைச் செய்வானாக இருப்பினும், கொலைத் தொழில் புரியும் வேடனாயினும், பொல்லாப்பழியுடைய பாதகன் எனினும், இழிவுபட்டவனாயினும் பேசுகிற பேச்சுக்

களின் இடையே தன்னை மறந்தாயினும் சிவ சிவ என்று ஒரு முறை கூறுவானாயின் அவனுடைய கால்களின் அடியில் பொருந்திய அடித்துகளே எங்கள் குலதெய்வமாகும்" என்னும் பொருளை அமைத்து,

இழிவுறுபுன் கருமநெறி யினனெனினுங்
கொலைவேடன் எனினும் பொல்லாப்
பழிமருவு பதகனெனி னும்பதித
னெனினுமிகப் பகரா நின்ற
மொழியவற்றுள் அவசனாய்ச் சிவசிவஎன்
றொருமுறைதான் மொழியில் அன்னோன்
செழியநறு மலரடியின் துகளன்றே
எங்கள்குல தெய்வம் என்ப.

என்னும் பாடலை இயற்றியருளினார். மற்றும் இப்பெரியார் சிவ நாமப் பெருமைகளை ஒருவாறு சிறிது கூறத்தொடங்கி; "உலகத் தவர்களே! வேதம் ஆகமம் முதலிய பலவாய கலைகளையும் தீவினைநீக்கத்தின் பொருட்டு ஓதி மனத்தடுமாற்றத்தை அடையா தீர்கள். தொலைதற்கரிய தீமைகளை எல்லாம் கதிரவனைக்கண்ட இருளைப்போலத் தொலைந்துபோதலை விரும்பினீர்களாயின், சிவ சிவ என்று சொல்லுங்கள்.

வேதம் ஆகமம் வேறும் பலப்பல
ஓதி நாளும் உளந்தடு மாறன்மின்
சோதி காணிருள் போலத் தொலைந்திடும்
தீதெ லாமும் சிவசிவ என்மினே. 1

இழிந்தவராயினும் உயர்ந்தவராயினும் நாவினாற் சொன்னால் சுருதியாற் கூறப்பெறும் நல்லன எல்லாம் உண்டாகும். துன் பங்கள் எல்லாம் தீரும். ஆகையால், சிவ சிவ என்று சொல் லுங்கள்.

புல்லர் ஆயினும் பொதகர் ஆயினும்
சொல்லில் நாவில் சுருதி விதித்திடும்
நல்ல ஆகும் நனவஎன் றகற்றிய
செல்லல் தீரும் சிவசிவ என்மினே. 2

மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளானும் உண்டாகிய தீவினைகளை எளிதாகத் தீர்த்துக்கொள்ளவேண்டு மாயின், சிவ சிவ என்று சொல்லுங்கள்.

நாக்கி னுனும் நயனங்க ளானுமிவ்
வாக்கை யானும் அருஞ்சேவி யானுநம்
மூக்கி ஞனும் முயங்கிய தீவினை
தீர்க்கல் ஆகும் சிவசிவ என்மினே. 3

சாந்திராயண முதலிய தவச் சேயல்களால் உடலை வருத்தி வாட்டியபோதும் அழியாது தோடரும் தீவினையாக இருந்தாலும் திடீரேன்று அழித்தோழிக்கவல்லது சிவ சிவ என்னும் திருமறை. ஆகவே நீங்கள் சிவ சிவ என்று சோல்லுங்கள்.

சாந்தி ராயணம் ஆதி தவத்திஞல்
வாய்ந்த மேனி வருந்த இறந்திடாப்
போந்த பாதக மேனும் போருக்கேனத்
தீந்து போகும் சிவசிவ என்மினே, 4

வில்லைப்போல விளங்கும் அழகிய நேற்றியையுடைய உமையம்மையைப் பாகத்தில் கோண்ட சிவபேருமானது திரு வடியைக் காண்டற்கு ஏதுவாகிய கல்வியறிவையுஞ் சிந்தை மகிழ்தற்கு ஏதுவாகிய சேல்வத்தையும் நீங்கள் பேற விரும்பி ஞல், சிவ சிவ என்று சோல்லுங்கள்.

வில்லி தேன்ன விளங்குந் திருநுதல்
வல்லி பங்கன் மலரடி காணிய
கல்வி நல்கும் கருத்து மகிழ்வுறும்
சேல்வ நல்கும் சிவசிவ என்மினே. 5

தீமையுடையனவாகிய உடுக்களோடு ஒன்பான்வகைக் கோள் களின் தீமையும் நீங்கும். பிறவிப் பிணி முதலிய எல்லாவகை நோய்களும் நீங்கும். நூருண்டளவு வாழுமாறு வாஞள் பேருகும். அறம் வளரும். மற்றைத் தீமைகள் எல்லாம் ஒழிந்துபோகும். ஆகவே சிவ சிவ என்று சோல்லுங்கள்.

தீய நாளோடு கோளின் சேயிர்தபும்
நோய கன்றிடும் நூறேனக் கூறிய
ஆயுள் பல்கும் அறம்வளர்ந் தோங்குறும்
தீய தீரும் சிவசிவ என்மினே. 6

மிக முயன்று உண்டாக்கி வளர்த்த கதிர்களைத் தலையிற் கோண்ட பயிரை வறியவர்கள் அகலாது பாதுகாத்தலைப்போலச்

சிவ சிவ என்று கூறுபவர்களைச், சிவபெருமான் அவர்கள் பின்னே திரிந்து காப்பாற்றுவான். ஆதலால் சிவ சிவ என்று சொல்லுங்கள்.

வருந்தி யாற்றி வளர்த்த கதிர்த்தலை
பொருந்து வான்பயிர் போற்றுநர் போலவே
விரிந்த வேணியில் வெண்மதி சூடிபின்
திரிந்து காப்பன் சிவசிவ என்மினே. 7

முன்னே சிவன் என்னும் பெயரைச் சொல்லிப் பின்னர் அச் சிவபெருமானை இகழ்ந்தாலும், அப்பெயருக்குரிய அப்பெருமான் தம் பெயர் சொல்லியவனது தீவினையை ஒழித்தருளுவார். ஆதலால் மன ஒருமையோடு சிவ சிவ என்று சொல்லுங்கள்.

முந்தை யோர்சொல் மொழிந்து சிவனெனச்
சிந்தை தானச் சிவனை நிகழ்த்தினும்
வந்த தீவினை மாற்றுவன் ஆதலால்
சிந்தை யோடு சிவசிவ என்மினே. 8

சிவபெருமானது திருப்பெயரைச் சொல்லுவோர் புலையர் களாக இருந்தாலும் தேவர்களாவார்கள். தேவர்களாகவே இருந் தாலும் சிவபெருமானது திருப்பெயரைச் சொல்லாதவர்கள் புலை யர்களேயாவார்கள் என்று மெய்யறிவு நூல்கள் கூறும். ஆதலால் சிவ சிவ என்று சொல்லுங்கள்.

நீச ரேனும்வா னீசர் நிகழ்த்தில்வான்
ஈச ரேனும் சிவசிவ என்கிலார்
நீச ரேஎன் றியம்புறும் நின்றுப
தேச நூல்கள் சிவசிவ என்மினே. 9

சிவபெருமானது திருப்பெயரைச் சொல்லுபவர்களுடைய திருவடிகளை நெருங்கி வணங்குதற்கும் இயமனுனவன் மனம் நடுங்குவன். இஃது உறுதியாகும். ஆதலால் சிவ சிவ என்று சொல்லுங்கள் என்னும் பொருள்களை அடக்கி,

எண்ணி நெஞ்சில் சிவசிவ என்பவர்
வண்ண மென்பதம் கிட்டி வணங்கவும்
உண்ண டுங்குவன் ஒண்திறல் கூற்றுவன்
திண்ணம் ஈது சிவசிவ என்மினே. 10

என்னுஞ் சிவநாம மகிமையைப் பாடியுள்ளார். சிவநாமப் பெருமையை விளக்குதற்கு வேறு எடுத்துக்காட்டுகளும் வேண்டுமோ?

சிவ சிவப் பணி

சிவ சிவ என்பதன் இத்தகைய அருமை பெருமைகளை எல்லாம் நன்குணர்ந்தே பனசைக் காசிமடத்துப் பெரிய அடிகளாரும், தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களும் திருக்கோயில் முதலிய பல இடங்களினும் சிவ சிவ என்னும் திருமறையை எழுதியும் ஒளிவிளக்குகளால் விளக்கியும் அரும்பெருஞ் சிவப்பணி புரிந்தருள்கின்றனர். இச் சிவ புண்ணியத் திருப்பணியால் எண்ணற்றமக்கள் தீவினை நீங்கப்பெற்றுப் பெரும்பேறு பெறுவர் என்பது திண்ணம்.

தருமை யம்பதி தழைக்க நீடிய
அருமை அடிகளும் அரிய பனசையார்
பெருமை மேவிய பெரிய அடிகளும்
ஒருமை யாக உவந்து நாட்டிலே,

சிவசிவ என்னும் திருமறை பரப்பிச்
சிவசிவ என்று சீவர்கள் செப்பச்
சிவசிவ வள்ளலாய்ச் சிறந்து வாழ்ந்திட
சிவசிவ ஈச சீரருள் செய்வையே.

நிந்தாஸ் துதிகள்

களமூர்.

பெருநாவலர், திரு. க. செ. செல்வப்ப முதலியார் பாடியது.

அறுசீராசிரியம்

1. வன்னிவிர தத்தினுக்கோர் வின்னம்வரா வேனநினைந்தோ வாழையாதி, பன்னுகனி கன்னலதி ரசந்தோசை வடையதிகம் படைப்பாரேன்றே, போன்னூலே யெழுதவழைப் போர்க்குவரப் போகரிது போமேன்றற்கோ, பின்னேதேற்கோ பெருவயிறு கோண்டதுசோல் யானைமுகப் பிள்ளையாரே.

நாவுக்கரசும் திருவள்ளுவரும்

பேராசிரியர்,
திரு. ஸ்ரீ. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் எம். ஏ., பி. எல்.,
தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.

அவ்விதம் விருப்பு வெறுப்பற்றிருப்பவன் சிவபெருமான் என்றும், அவன் அருச்சுனனை வேடன் உருவிற் சென்று சோதித்தான் என்றும், அவன் அரும் பெருஞ் சோதி என்றும், சூலத்தைக் கொண்டவன் என்றும், காலனைக் காலாற் கடிந்தவன் என்றும், மண்ணுள்ளார்க்கும் விண்ணுள்ளார்க்கும் ஆண்டவன் என்றும், அவன் திருவடியையே தாம் அடைந்து இடும்பை நீங்கி உய்ந்ததாகவும் அப்பர் அருளியுள்ளார் :-

"வேண்டாமை வேண்டுவதும் இல்லான் தன்னை
விசயனைமுன் னசைவித்த வேடன் தன்னைத்
தூண்டாமைச் சுடர்விடுநற் சோதி தன்னைச்
சூலப் படையானைக் காலன் வாழ்நாள்
மாண்டோட வுதைசெய்த மைந்தன் தன்னை
மண்ணவரும் விண்ணவரும் வணங்கி யேத்தும்
ஆண்டானை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே."

விருப்பு வெறுப்பற்றிருத்தற்குப் பொறி புலன்களை வென்றிருக்கவேண்டும். மேலும், பொறிப் புலன்களை வென்றவர்களே இறைவனை அடைய முடியும் என்றிருத்தலாலே, அவ்இறைவனும் பொறி புலன்களை வென்றவனாகவே இருக்க வேண்டும். சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்கின்ற ஐம் புலன்களையும் நுகர்தற்கு வழிக் கருவியாகிய வாய் கண் மெய் செவி மூக்கு என்கின்ற ஐம்பொறிகளையும் அவித்தவன் எவனோ அவனே இறைவன். அவன் வகுத்துள்ள நெறியே பொய்யில்லாத மெய்யான ஒழுக்க நெறி. அந்தப் பொய்தீர் ஒழுக்க நெறியைக் கடைப்பிடிப்பவர்களே அவ்விறைவனை அடையலாம் என்றார் திருவள்ளுவர் :-

" போறிவாயில் ஐந்தவித்தான் போய்தீர் ஒழுக்க
நேறிநின்ருர் நீடுவாழ் வார். "

போறிவாயில் ஐந்தவித்தான் எவனே அவனே தீவினே தீர்க்க வல்லவன். அவ்விறைவன் ஓதிய நேறியே மேய்ந்நேறி. அவ் ஒழுக்கப் பாதையிலே ஒழுகி அவனே வணங்கிஞலே சித்தம் சேம்மைப்பட்டுச் சிவமாகும். அந்நிலேயே சிவஞானம் சித்திக் கும். அந்த ஞானமயமாய் இருக்கும் இறைவனே என் உள்ளம் கண்டுகோண்டது என்று பாடுகிருர் அப்பர் அடிகள் :-

" வேலவ லான்புல னேந்தோடு வேதமும், சோலவலான். "

" வேன்ரு னேப்புல னேந்துமேன் தீவினே
கோன்ரு னேக்குணத் தாலே வணங்கிட
நன்ரு நன்மனம் வைத்திடு ஞானமாம்
ஒன்ரு னேக்கண்டு கோண்டதே னுள்ளமே, "

உள்ளத்தினுள்ளிருக்கும் கள்ளத்தைத் தள்ளிஞல் மேள்ளவே இறைவன் அங்கு வேளிப்படுவான் என்க.

தான் போறி புலன்களே வேன்று இவ்வாறு வேண்டுதல் வேண்டாமையற்று, உயிர்களின் வினேயைத் தீர்க்கவல்ல ஞானப் போருளாய் இருக்கும் இறைவனே இத்தகையவன் என்று நம்மால் எடுத்துச் சோல்லமுடியுமா? அவனுக்கு நேரான ஒப்புவமை எங்கேனும் உண்டா? இல்லே. இறைவனே ஒப்பாரும் மிக்காரும் இவ்வுலகில் இருத்தல் முடியாது. அப்படியிருந்தால் அவன் இறைவனுய் இருக்கமுடியாது. இரண்டு கடவுளர்கள் ஒரே உலகில் ஆட்சி சேலுத்த முடியாது. இறைவனேப்போல மற் ருேரு போருள் உலகில் உண்டாயின் அல்லவா நாம் இறை வனுக்கு ஓர் எடுத்துக்காட்டுக் கோடுக்கமுடியும்? ஆகவே இவ்வாறு ஒப்புவமை இல்லாதிருப்பதும் இறைவனுக்கு ஓர் இன்றியமையாத இலக்கணம் ஆகிறது. இதனேத் திருவள்ளுவர் கூறுகிருர் :-

" தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலே மாற்றல் அரிது. "

அப்பர் சுவாமிகள் தனக்குவமையில்லாதிருப்பவன் ஈசன் ஒருவனே என்பதைக் கண்டார். அவனுக்கு ஒரு போருளே எடுத்து

உவமையாகச் சொல்லவும் முடியாது. அவனும் மற்றொரு பொருளுக்கு உவமையாகமாட்டான். அப்படிப்பட்ட இறைவனை எவ்வுவமை கூறி விளக்கமுடியும்? எச்சொல்லைக்கொண்டு பேச முடியும்? எவ்வெழுத்தால் எழுதிக் காட்டமுடியும்? அவன் திருவருளைக் கண்ணாகக்கொண்டே அவனைக் காணமுடியும். வேண்டுமானால் அவனை மாதொருபாகன், சடைவிரித்த சங்கரன், கச்சிமயானத்துக் கடவுளான் என்றெல்லாம் சொல்லிக்கொள்ள லாம் என்று இவ்வாறு அப்பர் பாடுகிறார் :-

"மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னி னல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன்
ஒரூர னல்லன் ஒருவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
அவனருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவன்இறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே."

மனவருத்தங்களைத் தீர்த்துவைக்க மருந்தே கிடையாது. உள்ளத்து வேரூன்றி முளையிலே தளிர்விடுகின்ற வாட்டங்களைத் தீர்த்துவைக்க வாகடநூல் உதவாது. நெஞ்சிலே கிழங்குவிடும் கவலைகளை அகழ்ந்தெடுக்க மருத்துவனால் முடியாது. மனக் கவலையை மாற்றியமைக்க மாத்திரை கிடையாது. கவலையை ஒழித்து அமைதியடைய இறைவன் தாளையே நாம் பற்ற வேண்டும். இறைவனைத் தொழுது நாம் மனக்கவலையைப் போக்கவேண்டுமே தவிர வேறு வழியில்லை. அதுவன்றி நாம் மனக்கவலையை மாற்றல் அரிது என்று திருவள்ளுவர் கூறினார். நம் வாட்டத்தையும் மனக்கோட்டத்தையும் தீர்த்துவைப்பவன் நாம் நாட்டத்துக்கொள்ளும் நம்பன் இறைவனே என்பதை நாவுக்கரசரும் நலமுறக் கிளர்ந்துள்ளார். மனவருத்தங்களும் அவலக்கவலைக் கையாறுகளும் இறைவனைக்கொண்டே நாம் போக்கவேண்டியவையாயுள்ளன. மனத்தில் நிம்மதி நிலவவும், சாந்தம் சாரவும், அமைதியடையவும், நாம் ஆண்டவன் திருவடி யையே கதியாகக் கொள்ளவேண்டும். இந்த உயிர் உடம்பில் உள்ளபொழுதே இறைவனுக்கு நாம் ஆளாகி, அவனுடைய திருவடிகளை நம்முடைய மனத்திருத்தி, மலர்தூவித் துதித்து வலஞ்செய்து வழுத்தினால், நமது வாட்டங்களையெல்லாம்

இறைவன் தீர்த்துவைப்பான். அரிச்சிராப்பகல் ஐவராலாட்டுண்டு சுரிச்சுக்கிடக்கும் நமது நெஞ்சம் நேர்பட்டு, அங்கே அமைதி பிறக்கும் என்று பாடுகிறார் அப்பர் அடிகள் :-

"ஒட்டை மாடத்தி லொன்பது வாசலும்
காட்டில் வேவதன் முன்னங் கழலடி
நாட்டி நாண்மலர் தூவி வலஞ்செயில்
வாட்டம் தீர்த்திடும் வான்மியூர் ஈசனே."

கவலையில்லாதவர்கள் உலகத்திற்கிடையாது. அதிலும் ஆசை அதிகமாக வளர வளர உள்ளக் கவலைகளும் வெள்ளத் தனையவாய் மேன்மேலும் பெருகிவரும். அதிலும், கள்ளத்தன மாகிய வஞ்சகமும், இறைவன் உண்டோ இல்லையோ என்ற சந்தேகமும் இருக்கும் வரை கவலைகளும் இருந்துகொண்டே வரும். இவற்றைப் போக்குவதற்கு இறைவழிபாடும், தியான மும், தொழுகையும், முக்கரண சுத்தியோடு முக்கணனைப் பூசித் தலுமே சிறந்த வழிகளாகும். கவலைகள் நிரம்பிய உள்ளத்தில் சிவம் விளங்கிப் பேரின்ப உணர்வு உண்டாகாது. சமணர் களோடு கூடித் திரிந்த காலத்தில், திருநாவுக்கரசருக்கும் கவலை கள் கடல்போல் மண்டிக்கிடந்தன. வஞ்சகமும் ஐயமும் அவரை வாட்டியெடுத்தன. குடல் நோயும் குத்திக்கொண்டு கூடியெழுந்தது. அவர் தம் அக்கையாரான திலகவதியார் தெள்ளத்தேறினார். தெளிந்தார். திருவதிகைவீரட்டானத்தை அடைந்தார். ஆண்டவனை அஞ்சலித்து அலறி விழுந்து அடிதொழுதார். ஆடினார். பாடினார் :-

"துன்பே கவலை பிணியென் றிவற்றை
நணுகாமல் துரந்து கரந் துமிழ்
என்போலிக ளும்மை யினித் தெளியார்
அடியார் படுவ திதுவே யாகில்."

என்று வேண்டினார். இறைவன் அவரை ஆட்கொண்டார். அவருடைய உள்ளம் குற்றங்கள் நீங்கிச் செம்மையடைந்தது. அவர் தூயவுள்ளத்திலே பேரறிவு விளக்கமும் அதனோடு உட னிகழ்கின்ற பேரின்பவுணர்வும் உண்டாயின. கள்ளமும் ஐயமும் நிறைந்த தமது உள்ளத்துக் கவலை வெள்ளம் இன்பக் கடலாக எங்ஙனம் மாறிவிட்டது என்று விம்மிதம்கொண்டு பாடினார் அப்பர் :-

"தெள்ளத் தேறித் தெளிந்து தித்திப்பதோர்
உள்ளத் தேறல் அமுத வொளிவெளி
கள்ளத் தேன்கடி யேன்கவ லைக்கடல்
வெள்ளத் தேனுக் கெவ்வாறு விளைந்ததே."

(கடி - ஐயம்.) தெள்ள என்பதனால் ஞானத்தில் சரியையாகிய கேட்டல் அறிவு நிலையும், தேறி என்பதனால் ஞானத்தில் கிரியை யாகிய சிந்தித்தல் அறிவு நிலையும், தெளிந்து என்பதனால் ஞானத்தில் யோகம் ஆகிய தெளிதல் அறிவு நிலையும், தித்திப்ப தோர் உள்ளத்தேறலமுதவெளி ஒளி என்பதனால் பேரின்பம் உணரப்பெறும் ஞானத்தில் ஞானமாகிய நிட்டை அறிவு நிலையும் கூறப்பெற்றன. இந்த நான்கு அறிவு நிலைகளும், முறையே ஒன்றன்பின்னொன்று ஏதுவும் பயனுமாய் அமைந்து, ஒவ்வொரு நிலையிலும் அருட்சத்தி பதிதல் மிகுந்து மிகுந்து நான்காவது நிலையில் நிறைவு அடைவதாயினும், சிவன் திருவருளால் திரு நாவுக்கரசருக்கு ஒருசேர உடனே வந்து கூடுவதாயிற்று. அதற்கு ஏது அவர் முன்னமே முனியாகிச் சிவம் அடையத் தவ முயன்றிருந்தார் என்பதும் ஈண்டு உணரப்படும். அந்நிலையில் அவர் ஆன்மாவின் உள்ளமும் சிவகரணமாய் மாறி அறிவாற் சிவனேயாகி நின்றார். ஆகவே அவர் சிவனுடைய வியாபக அறிவுடன் இரண்டறக் கலந்து, சிவனுடைய எண்குணங்களும் பதியப்பெற்று, யாதோரு குறையும் இல்லாதவராய்த் திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்டவராய்ப் பேரின்பப் பெரு வாழ்வு உடையவராய்ச் சீவன்முத்தராய்த் திகழ்ந்தார். பசுகரணம் நீங்கிச் சிவமாய்த் திகழ்ந்த அவருடைய உள்ளத்தில் பேரின்பம் ஊறிப் பெருகியது. அது தெள்ளுதலினாலும் தேறுதலினாலும் தெளிதலினாலும் தித்திப்பதோர் உள்ளத்தேறலமுதவெளி ஒளி யாய்ச் சுடர்விட்டு இலங்கியது. நோய் நீக்க மருந்தாய் உதவு கின்ற தேன், மலநோய் நீக்கத்தால் உண்டாகும் அறிவு விளக் கத்தைக் குறிப்பதாகும். இறப்பைத் தவிர்க்கின்ற அமுதம் நிலையான நித்தியமாயுள்ள இன்ப விளக்கத்தைக் குறிப்பதாகும். அப்பர் உள்ளத்தில் இவ்வாறு பேரறிவு விளக்கமும் பேரின்பப் பெருக்கமும் உண்டானவுடன் வஞ்ச ஆறுகளும் கவலைக் கடல் களும் வற்றி இல்லையாய்ப் போய்விட்டன. தாம் அடைந்த அனுபூதி நிலையை வெகு அழகாக எடுத்துக் கூறிவிட்டார் அப்பர் அடிகள். இவ்வாறு வஞ்சம் தீர்ந்து செம்மைபெறும் நெஞ்சிலே

இன்பத்தேறல் ஊறிப் பெருகுமாம். அதைப் பதம் அறிந்து பற்ற வேண்டுமாம். பற்றிப் பருகவேண்டுமாம். பருகி உருகவேண்டு மாம். உருகி நையவேண்டுமாம். அப்போழுது ஆண்டவன் அருகிலேயே வந்து நின்றுவிடுவானும் :-

“ திருகு சிந்தையைத் தீர்த்துச்செம் மைசெய்து
பருகி யூறலைப் பற்றிப் பதமறிந்
துருகி நைபவர்க் கூனமோன் றின்றியே
அருகு நின்றிடும் ஆனைக்கா வண்ணலே.”

(தொடரும்)

நிந்தாஸ்துதி

2. பத்தினியை நீங்கியேழிற் பலபெண்கள் கரந்தோட்டுப் பார்ப்பதற்கோ, நத்திநம தில்வாரும்வாருமென வழைப்பதற்கோ நாண மச்சஞ், சித்தமதிற் கோள்ளாதேல் லாவீடும் நுழைவதற்கோ திருவார்கூடற், கத்தனேனுஞ் சோக்காநீ வளையல்விற்க வந்தவிர கறைந்திடாயே.

3. ஆறுதலை யடைந்தானுன் றனையீன்ற தந்தையுமை யம்மை கேள்வன், ஆறுதலை யடைந்தான் விநாயகனு மாறுதலை யடைந் தான் வேளும், ஆறுதலை யடைந்தா னல்லயனேநீ யோருமூர்த்தி யாயிருந்தும், ஆறுதலை யடையாது நாலுதலை யடைந்து தளி யகன் றிட்டாயே.

4. அளகைநகர்க் கிறைவனினை யகலாக்கூட் டாளியேன வறிவித் தற்கோ, வளமருவு மேப்போருட்கு மிறையிவனே யேன வுலகம் வழுத்து தற்கோ, வுளமயங்கிச் சிலர்பலியேற் றுழன்ருயேன் றிகழும்வசை யோழிப்பதற்கோ, பளகறுசேற் கணிவரனே வணிக ஞய் மணிகோணர்ந்து பகர்ந்த தேன்னே.

5. எழில்கோண்ட வம்பலத்திற் கூத்தாடும் பித்தன்றன் னேளிமை யான, தோழில்கண்டு மனைவியுட லரையானு ளேதிரே மைத் துனன்மா லானுன், விழைகின்ற மூத்தமகன் முகமாறு பட்டு தாம் வீங்கி னுன்சீர், தழைகின்ற குகன்கண்ணீ ராருனு னயனுலு தலை யானுனே,

திருப்பாசுரப் பேருரை விளக்கம்

மதுரைத் தியாகராசர் கல்லூரிப் பேராசிரியர்,

திரு. ஔவை, சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் சொற்பொழிவு,

திருக்கயிலாய பரம்பரைத் திருத் தருமையாதீன குரு முதல்வர் அவர்கள் திருவடிகளை வணங்கி எனக்கு அளித்த திருப்பாசுரப் பேருரை விளக்கம் என்ற சொற்பொழிவைத் தொடங்குகின்றேன்.

தலைவர் அவர்களே! தாய்மார்களே! பெருமக்களே!

மதுரையில் திருஞானசம்பந்தர் என்ற தலைப்பில் நிகழ்ந்த இனிய சொற்பொழிவைக் கேட்டீர்கள். மதுரை நகர்க்கண் திரு ஞானசம்பந்தர் எழுந்தருளியிருக்கின்றார். மதுரை நகர் மன்னன் உடல் நலமின்றியிருந்து தேறியுள்ளான். சமண முனிவர் பலர் கூடிக்கொண்டு ஞானசம்பந்தரோடு வாதுபுரிகின்றார்கள். வேந்தனுடைய வெப்புநோய் நீக்கத்தில் தோல்வியுற்ற சமண் முனிவர் அனல்வாதத்தில் அவ்வாறே வெற்றிபெறு தொழிந்தனர். இறுதியாகப் புனல் வாதம் உண்டாயிற்று. அக்காலை, திருஞான சம்பந்தர் பாடியருளிய பாசுரம் எழுதிய ஏடு வையையாற்றில் எதிரேறிச் சென்று ஏடகப்பதியில் கரையடைந்து இயற்கை நெறியாகிய சைவத்துக்கு வெற்றி தந்தது என்ற வரலாற்றைக் கேட்டோம்.

வையைப் பெருக்கில் எதிரேறிச்சென்ற ஏட்டில் எழுதப் பெற்ற பாசுரம்தான் இங்கு நாம் பொருளாகக் கொண்ட திருப் பாசுரம். அப் பாசுரத்தின் முதல் திருப்பாட்டு "வாழ்க அந்தணர்" என்று தொடங்குவதாகும்.

ஞானசம்பந்தர் அருளிய திருப்பாட்டுக்களைப் பொதுவாகத் திருப்பதிகம் என்று நூல்களிலும் திருப்பதியம் என உலகியல் வழக்கிலும் சொல்லுவது மரபு. திருப்பதிகம் ஓதுவதெனவும் திருப்பதியம் விண்ணப்பம் செய்வதெனவும் சான்றோர் நெறிப் படுத்துரைப்பது சைவநெறி. இத் திருப்பதிகங்களின் வகையுள் இப்பாசுரமும் சேர்ந்ததாயினும், இதனைத் திருப்பதிகம் என்றோ திருப்பதிய மென்றோ குறிக்காமல் "திருப்பாசுரம்" என்று சொல்வதுதான் முறையும் வழக்கமுமாக இருந்துவருகிறது.

பாசுரம் என்ற பெயர் திருஞானசம்பந்தராலேயே வழங்கப் பெற்றது. சம்பந்தன் தமிழ், சம்பந்தன் பாடல், சம்பந்தன் சொல், சம்பந்தன் உரை, சம்பந்தன்பத்து என்றெல்லாம் தம் பாடல்களைப் பெயர்குறித்துவந்த ஞானசம்பந்தப்பெருமான் இதன் திருக்கடைக்காப்பில் "பல்லார்களும் மதிக்கப் பாசுரம் சொன்னபத்து" என்று குறித்திருக்கின்றார். அவர்க்குப்பின் வந்த சான்றோர் பலரும் இத்திருப்பதிகத்தைப் பாசுரம் என்ற பெயராலே உரைக்கலாயினர். நம்பியாண்டார் நம்பிகள் "நோக் கரிய பாசுரம் பல்லத்து" என்று சிறப்பித்தார்; சேக்கிழார் சுவாமிகள், பாசுரம் பாடலுற்றார் பரசமயங்கள் பாற" என்று புகழ்ந்தோதினார். இன்றும் திருப்பாசுரம் என்ற சிறப்பே இருந்து வருகிறது.

பாசுரம் என்பதன் பொருள் பலரும் நன்குமதித்து ஓதும் பாடல் என்பது; "ஈசனை ஏத்துபாடல், பல்லார்களும் மதிக்கப் பாசுரம் சொன்னபத்தும்" என்பதனால் இப்பொருள் உணரப் படுகிறது. பாசுரம் என்ற தொடரில் பா என்பது தமிழ்ச் சொல்; சுரம் என்பது வடசொல்; இரண்டையும் ஒரு தொடர்ப் படுத்திப் பொருள் காணுமிடத்துத் தெளிவான பொருள் ஒன்றும் புலனாவ தில்லை; புலனாகும் பொருள்தானும் மேலேகண்ட மெய்ம்மைப் பொருள் நிலையில் நின்று இன்பம் செய்வதாக இல்லை. திருமா லடியார்கள் பரவிய திவ்ய பரபந்தத் திருப்பாட்டுக்களை அவர்கள் பாசுரம் என்று வழங்குவதுண்டு. ஆயினும் அவருள்ளும் இதன் தெளிபொருளை விளக்கிச்சொன்ன குறிப்பு இதுவரையில் கிடைக்கவில்லை. பாசுரம் என்ற சொல்வழக்கே முதற்கண் ஞானசம்பந்தர் திருமுறையில்தான் காணப்படுகிறது. பின்னரே பிறநூல்களிலும் வழக்கிலும் வழங்குவதாயிற்று.

இத் திருப்பாசுரத்துள் திருக்கடைக்காப்பும் உடன் கூட்டிய வழி பன்னிரண்டு திருப்பாட்டுக்கள் உள்ளன. ஞானசம்பந்தப் பெருமான் அருளிய திருப்பதிகங்கள் வழக்கம்போல் திருக் கடைக்காப்பு நீங்கலாகப் பப்பத்துத் திருப்பாட்டுக்களே உடை யவையாயினும், திருப்பாசுரத்துள் திருக்கடைக்காப்பு நீங்க லாகப் பதினொரு பாட்டுக்கள் உள்ளன. பாசுரம் சொன்ன பத்தும்" என்று அருளியிருப்பதால் "அரியகாட்சியராய்" எனத் தொடங்கும் திருப்பாட்டுமுதலாகவுள்ள பத்தும் "பாசுரம் சொன்ன" பத்து என அடங்குவது காணப்படும்; படவே,

முதற்கண் நின்ற "வாழ்க அந்தணர்" எனத் தொடங்கும் திருப்பாட்டு இத் திருப்பாசுரத்துக்கு நூன்முகமாகிய மங்கல வாழ்த்து என நிற்பது துணியப்படும். நூன்முகப்பில் மங்கல வாழ்த்தும், இறுதியில் திருக்கடைக்காப்பும் பெற்று இடையில் "எல்லார்களும் பரவும் ஈசனை ஏத்துபாடல்" ஆகிய "பல்லார் களும் மதிக்கச்" சொன்ன "பாசுரம் பத்தும் நிற்பது அறிஞர் கண்டு இன்புறத் தகுவதொன்று."

இங்ஙனம், "வாழ்க அந்தணர்" என்பது மங்கல வாழ்த் தாக நின்று மாண்புறுப்பது இடைக்காலச் சான்றோர் உள்ளத்தில் நன்குதோன்றியிருக்கிறது. கோவிந்தபுத்தூர் என இந்நாளில் வழங்கும் ஊர், முன்னாளில் திருவிசயமங்கை என்ற பெயருடன் விளங்கிற்று. சோழவேந்தர் நாளில் கல்வெட்டொன்று அங்கே பொறிக்கப்படவேண்டி யிருக்கையில் சான்றோர் அதற்கு மங்கல மாக "வாழ்க அந்தணர்" என்ற இத் திருப்பாசுர மங்கல வாழ்த்தையே பொறித்திருக்கின்றனர் (A. R. No. 192 of 1928-29) பின்னர், மெய்கண்டதேவர் அருளிய சிவஞானபோதத் துக்குப் பேருரை காணத்தொடங்கியபோது மாதவச் சிவஞான முனிவர், பேருரையின் மங்கலமாக இதனையே எழுதிக் கொண்டது சைவவுலகு நன்கு அறிந்தது. சைவத் திருமுறை களை ஓதத்தொடங்கும்போது, "திருச்சிற்றம்பலம்" சொன்ன தும், "வாழ்க அந்தணர்" எனத் தொடங்கும் திருப்பாசுர மங்கலத்தைச் சுத்தாங்கமாக ஓதிப் பின்பு திருமுறை ஓதுக என்பது "தொண்டைநாட்டுத் திருவிடையூர் மரபு" என்று வரும் வழக்காறும் நாடறிந்த செய்தியாகும். இவ்வாற்றால், புறச்சமயப் புயலால் காய்ந்திருந்த சைவத்தை நேர்பட நிறுத்திய திருஞானசம்பந்தப்பெருமான் வழங்கியருளிய சிவ ஞானத் திருப்பாசுரத்தின் பெருமை எத்துணை உயர்ந்தமுறையில் சைவ நன்மக்களால் போற்றப்பட்டு வந்துளது என்பது இனிது விளங்கும்.

சைவத் திருமுறைகளையும் அவற்றின் வரலாறு காட்டும் திருத்தொண்டர் புராணத்தின் நலத்தையும் கண்ட வைணவப் பெரும்புலவர் ஒருவர் ஒரு சொற்பொழிவின்கண், "இவை எங்கள் சமயப்பெரியார் கைப்பட்டிருக்குமாயின், எவ்வளவோ சிறந்த முறையில் பேருரைகண்டு உலக முள்ளளவும் வற்றாத பேரின்பம் நுகரச்செய்திருப்பார்கள்" என்றார். இடைக்காலச்

சைவரிடையே அவை "நாய்பெற்ற தேங்கம்பழம்" போலாய் விட்டன; அவர் தானும் உண்ணுராய், பிறரையும் உண்ண விடாராய்ச் சீர்குலைந்தனர். இன்றுதான் சைவவுலகு திருவாசகத் துக்கும் திருத்தொண்டர்புராணத்துக்கும் சீர்த்த உரைகாணும் முயற்சியைத் தொடங்கியுளது.

திருமுறைகட்கு உரைகாண்பவர் வேறுங்கலையறிவுமட்டும் நிரம்பியிருத்தல் அமையாது; சைவத்திருவருட் கலையறிவு நிரம்பப்பெற்றிருத்தல் வேண்டும் என்பது சைவவுலகு மேற் கொண்டகருத்து. கலையறிவுபோல அருட்கலையறிவு பிறர் அளந்துகாணும் தகுதியதன்று; அருட்கலையுடையவரைத் திரு வருள்தான் அறிந்து நமக்கு அறிவிக்கவேண்டுமேயன்றி வேறு வழியில்லை; ஆகவே அருணூல்கட்கு உரைகாண்பது நமக்கு அடாது என்று அஞ்சியே இடைக்காலச் சைவர்கள் ஒடுங்கினர்; அதனுல் சைவத்திருமுறைகள் எழுத்துப்பிழைக்கும் ஏடெழுது வோரும் எடுத்தோதுவோரும் செய்த பிழைக்கும் இரையாய் இருந்து வருவனவாயின. திருமுறைகள் பலவற்றின் கருத் தையும் பொருளையும் சேக்கிழார் பெருமான் பன்னெடு நாட் களுக்கு முன்பே உரைத்துக்காட்டியும், சைவவுலகு ஏனை சைவப்பெருமக்களைப் போல நலம் செய்துகொள்ளும் நல் லருளும் நற்பேறும் இன்றி ஒளி குன்றி நிற்பது பெரிதும் வருந்தத்தக்கது.

இடைக்காலச் சைவவுலகு பெருந்தவம் புரிந்த பெருமை யுடையது. அப்பெருமையால் சேக்கிழார் பெருமான் தோன்றி திருமுறைச் செல்வங்களை வழங்கிய திருத்தொண்டர்களின் உண்மை வரலாறுகளை வரலாற்றுநெறி நின்று வடித்துத் தந்து அருளினுர்கள்; திருமுறைகள் பலவற்றின் கருத்துக்களையும் பொருளையும் ஆங்காங்கு உரைத்துச் சென்றுர்கள். அவர் காட்டியவற்றுள் திருப்பாசுரத்துக்குக் காட்டியருளிய பேருரை அறிவுடையோர் என்றும் போற்றி இன்புறுதற்குரியதாகும். "நகுபாசுர முதல் உரைசெயுமதனுல் நவிலுரையாசிரியன்" என்று சைவத்திரு. மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள் பாடி மகிழ்ந்துள்ளார்கள்.

இத் திருப்பாசுரப் பேருரைக்குச் சுருங்கிய விளக்கம் தர வேண்டுமென அடியேனை எங்கள் தருமையாதீன குருமுதல்வர் பணித்தமையின் முதற்றிருப்பாட்டின் பேருரையை மட்டில்

சேக்கிழார் பெருமான் காட்டிய நெறியில் நின்று விளக்கு கின்றேன். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் தூத்துக்குடி சைவ சித்தாந்தப் பேரவையில் இத் திருப்பாசுரப் பேருரையைப் பற்றிப் பேசுமாறு காலஞ்சென்ற பேராசிரியர் சைவத் திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்கள் எனக்குக் கட்டளையிட்டார்கள். அவர்களும் வேறு பிற சான்றோர்களும் அப்பேருரை பற்றிய கருத்துக்கள்சில வழங்கினார்கள். அவர்களால் அன்று உண்டாக் கப்பட்ட துணிவினால் இன்று சிறிது பேச முற்படுகின்றேன்.

இத் திருப்பாசுரத்திற்கண்ட திருப்பாட்டுக்களைச் சேக்கிழார் பெருமான் தொகுத்துச் சுட்டல், வகுத்து மெய்ந்நிறுத்தல் என்ற உத்திவகையில் சிறுசிறு அதிகரணங்களாக வகுத்து உரைக் கின்றார். சேக்கிழார் பெருமான் வகுத்த பிரிவுகள் சிவஞான போதப்பேருரையிற் காணப்படும் அதிகரணங்களையும் சூர்ணிகை களையும் நினைவுறுத்துகின்றன. திருப்பாசுரத்துள் சேக்கிழார் வகுப்பனவற்றை அதிகரணங்களைக்கொண்டு தருக்க முறையில் ஆராய்தல் திருவருட் செல்வம் பெருக ஒடையார்க்கு ஒப்பது; "ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா" எனவரும் திருப்பாசுரத்தொடர். அம் முறையின் உண்மையை வற்புறுத்திக்கொண்டு உளது.

சேக்கிழார் பெருமான், தாம் மேற்கொண்ட பேருரையின் தொடக்கத்தில் பாசுரம் நுதலியபொருள் கூறுவாராய். உலகில் நிலவும் சமய நெறிகள் பலவற்றுள்ளும் மெய்ந்நெறியாவது சிவ நெறியே என்று மொழிகின்றார். சிவநெறியோடு அந்நாளில் வேதநெறியென ஒன்று நாட்டில் நிலவிற்று. அந்நாளில் வேத நெறியோடு மாறுபட்டு எழுந்த பௌத்தம் ஆருகதமாகிய சமணம் என்ற இரண்டும், அவ்வேத நெறியைத் தகர்த்தெறியும் நோக்கத் துடனே இருந்தன. வேதநெறியிற்கண்ட பல தெய்வக் கொள் கையும் கொலை வேள்விகளும் அந்தப் பௌத்த சமணங்களின் எதிர்ப்புக்கு இலக்காயின; ஆயினும் வினையுணர்வும் மறுபிறப் பும் அருள் ஒழுக்கமும் இயல்பிலேகொண்ட சைவ நெறியின் முன் பௌத்த சமணங்களின் மறுப்புப் பயன்படாது போயிற்று, மழை, நீர், நெருப்பு, காற்று, காடு, மலை முதலியன யாவும் உலகியல் வாழ்வுக்கு வேண்டுவன வாதலால், அவற்றை வழி படும் வேத நெறி உலகியல் ஒழுக்கத்துக்கு ஒத்ததாகத் தோன்றினமையின், சைவம் வைதிக நெறியைத் தழுவிக் கொண்டு சென்றது. வைதிகம் உலகியல் ஒழுக்கத்துக்கும்,

சைவம் வீடுபேற்றின்பத்துக்கும் படிமுறையில் அமைந்திருப்பதை அச்சமணர்கள் காணவில்லை; அவரைப்பின்பற்றிய பாண்டி வேந்தனும் அறியவில்லை, அதனால் ஞானசம்பந்தப்பெருமான் திருப்பாசுரத்தின் வாயிலாக அவர்கட்கு அறிவுறுத்துகின்றார்.

> "உலகியல் வேதநூல் ஒழுக்க மென்பதும்
> இலகு மெய்ந்நெறி சிவநெறிய தென்பதும்
> கலதிவாய் அமணர் காண்கிலார்களாயினும்
> பலர்புகழ் தென்னவன் அறியும் பான்மையால்"

என்று எடுத்து மொழிகின்றார்.

இனி, திருப்பாசுரத்தின் மங்கல வாழ்த்தாக நிற்கும் 'வாழ்க அந்தணர்' என்ற திருப்பாட்டை, 6 அதிகாரங்களாக வகுத்துக் கொண்டு ஒவ்வொன்றுக்கும் முறையே பேருரை வகுக்கின்றார்.

(க) "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என்பது முதலதிகாரணம். "அந்தணர், தேவர், ஆனினங்கள் வாழ்க" என்பது இதன் பொருள்; இஃது எடுத்தோத்து; இதனை மேற்கோள் என்னும் பிரதிஞ்ஞை கூறுவர், இதனை வற்புறுத்தும் ஏது:

"உலகம் இன்புற, சந்த வேள்விகள் முதல் சங்கரர்க்கு முன் வந்த அர்ச்சனை வழிபாடு மன்ன" ஆகலான், என்பது.

மங்கலமொழியால் வாழ்த்துதற்குரியவர் நிறைமொழி மாந்தராகலின், அருளிக்கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயனைப் பயக்கும் பெருமொழி வேந்தராகலின், ஞானசம்பந்தர் வழங்கிய இந்த வாழ்த்திதனைச் சேக்கிழார் பெருமான், இந்த "மெய்ம்மொழி" என்று குறித்தருளுகின்றார். அறமுதலிய உறுதிப்பொருள் கூறி மழை முதலியன வேண்டி வேள்விகளை முன்னின்று நடத்தலால் அந்தணர்களால் உலகம் வேண்டுவன பெற்று இன்புறுவது ஒருதலை; அதனால் "உலகம் இன்புற" என்றார். அந்தணர் எடுக்கும் வேள்விக்குரிய ஆவுதியை ஏற்று விழையும் பொருளை நல்குவதால் தேவர்களையும் வாழ்த்துவது முறையாயிற்று. இதுகாறும் வைதிகம். இனி நெய்யும் பாலும் தயிருமாகிய பொருள்கள் சிவநெறிக்கண் சிவ பரம்பொருட்கு அருச்சனை புரியவேண்டியிருத்தலால், ஆனினங்களை வாழ்த்துதல் இன்றியமையாததாயிற்று. இவ்வண்ணம், அந்தணர் தேவர் ஆனினங்களின் வாழ்த்து வேள்வியாதி உலகியலாகிய வைதிகத்துக்கும் சிவார்ச்சனையாகிய சைவத்துக்கும் பொதுப்பட வேண்டியிருப்பதைத் தொகுத்த மொழியால், "சந்த வேள்விகள்

முதல் சங்கரர்க்கு முன்வந்த அர்ச்சனை வழிபாடு மன்னவாம்'' என்று ஆசிரியர் உரைத்தருளுகின்ருர்.

(உ) வீழ்க தண்புனல் — இரண்டாவது அதிகரணம். தண் புனல் 'பொழிக' என்னது, 'வீழ்க' என்றது, உலகில் வாழும் உயிர்வகையாவுமேயன்றி, தேவரோடு ஒப்ப நிலவும் முனிவர் களும் தேவர்களும் விரும்பும் மேன்மையுடைமையால் என்றற்கு; 'வீழ்புனல்' என்று ஆசிரியர் இக் கருத்தைச் சுட்டிக் காட்டு கின்ருர். அந்தணர் முதலியோரை வாழ்த்திய பின் மழையைக் கூறியது, வேள்வியால் விளையும் நற்பயன் மழை என்பது பற்றி, மழை கூறியது உலகியலாகிய வைதிகம்; அது விளங்க, 'வேள்வி நற்பயன் வீழ்புனலாவது' என்ருர். சைவ நெறிக் குரிய இயைபு காட்டுதற்கு 'நாளும் அர்ச்சனை நல்லுறுப்பாத லால்' என்று ஆசிரியர் உரைக்கின்ருர். சிவார்ச்சனைக்கு நீர் இன்றியமையாது சிறந்த பொருள் என்றற்கு 'நல்லுறுப்பு' என்பது காண்க.

(ங) "வேந்தனும் ஓங்குக" — மூன்ருவது அதிகரணம் வேந்தனும் என்றது உம்மை வேந்தனேடு கூடிய சுற்றமும் மனையும் நாடும் நன்மக்களும் உளப்படுத்துவதற்கு. ஆளும் மன்னன் என்ருர், சமணரோடு கூடிநின்று நாடாண்ட பொழுதும் சைவ மங்கையர்க்கரசியாரின் கணவனுய் மீண்டும் சிவநெறி காவலனுகும் சிறப்புப்பற்றி, பாண்டியன் பின்பு தானும் சிவநெறி மேற்கொண்டு சிவார்ச்சனை புரிந்தொழுகியதோடு பிறரும் இதனை மேற்கொண்டு ஒழுகுங்கால் அவர்களுக்குக் காவல்புரிந்த சிவத் தொண்டை வியந்து, 'இவைகாக்கும் முறைமையால்' என்ருர். 'இவை' யென்றது வைதிகம், சைவம் என்ற இரண்டையும் அடக்கிநிற்பது குறிக்கத்தக்கது.

(ச) "ஆழ்க தீயது" — நான்காவது அதிகரணம். தீயது என்றது வேற்றுச் சமயங்களான பர சமயங்களின் நெறியை. வைதிக சைவங்களின் அயலாய் அவற்றிற்குத் தீமையொழுக்கம் கொண்டதுபற்றித் தீயது என்று குறிக்கப்படுகிறது.

(ரு) எல்லாம் அரன்நாமமே சூழ்க — ஐந்தாவது அதிகரணம் எல்லாம் என்றது தீ நெறிப்பட்டவற்றின் 'வேருகிய' எல்லாம்; அதனுல் ஆசிரியர் வேறு எல்லாம் என்று குறிக்கின்ருர். எல்லாம் என்றது "தொல்லுயிர் யாவையும்" குறிக்கும். உயிர்கள் யாவும் உணரும் தன்மையுடையவையாகலின், அரன்

திருநாமத்தை உன்னுதற்கு உரியவை. மக்களுயிர் யாவும் அரன் திருப்பேயரை ஓதி உய்தல் வேண்டும் என்பதற்கு 'அரன் நாமம் சூழ்க' எனத் திருஞானசம்பந்தர் அருளினர் என்பது. எண்ணிறந்த திருநாமங்களையுடையவனகலின் அரன் நாமம் என்றது, நமச்சிவாய என்ற திருநாமம் என்பதற்காக, 'அஞ்சேழுத்து' என்ருர். பிற பேயர்கள் திருவைந்தெழுத்தை உறுப்பாகவுடைய வல்ல என்பது தோன்ற ஞானசம்பந்தர் நாம'மே' எனப்பிறிதின் இயைபு நீக்கிய ஏகாரம் பெய்து கூறியருளினமை காண்க. 'வாழி' அஞ்சேழுத்து என்றது, ஆசிரியர் மனத்தால் எண்ணி நாவாற் சோல்லிக் கையால் எழுதிப் பரவுகின்ருராகலின், சூழ்தல் நினைத்தலும் தமர் சூழ வளர்தலுமாகலின், அஞ்சேழுத்து ஓதி என்றதோடு நில்லாது "வாழி அஞ்சேழுத்து ஓதி வளர்கவே" என்ருர்.

(சு) "வையகமும் துயர் தீர்க" — ஆருவது அதிகரணம். வையகம் என்றது, இகமும் பரமும் ஆகிய வாழ்விடம்; 'துயர் தீர்க' என்றதனல், இகத்திலும் பரத்திலும் மக்கள் துயரத்தில் ஆழ்ந்து கிடப்பதும், அவர்களை அத்துயரத்திலிருந்து மாற்றி இறவாப் பேரின்பத்தில் இருத்துதல் ஞானசிரியர்களின் சிவ ஞானத்திருப்பணி என்பதும் உணரப்படுவதால் 'இகபரத்தில் துயர்மன்னிவாழ் உலகத்தவர் மாற்றிட' என்று ஆசிரியர் பேருரை வகுக்கின்ருர். "ஞானசம்பந்தர் 'முன்னர்' மொழிந்தனர்" என்றதனல், திருப்பாசுரத்தின் நூன்முகமான மங்கல வாழ்த்தில் இவற்றை உரைத்தருளுகின்ருர் என்பது பேறப்படுகிறது.

இவ்வாறு சோல்லும் திருப்பாசுரத்திற்குச் சேக்கிழார் பெருமான் உரைத்த பேருரை இது; இதுபற்றி யான் இதுகாறும் கூறிவந்தவை விளக்கம்.

ஞானசம்பந்தப் பெருமான் அருளிய திருப்பாசுரத்துக்குச் சேக்கிழார் பெருமான் அருளிய பேருரையைப்பற்றி நினைக்கவும், நினைத்தவற்றை இப்பேரவையில் சோல்லுதற்கும் உரிய வாய்ப்பினை வழங்கியருளிய எங்கள் தருமையாதீன குருமுதல்வர் அவர்கட்கு மனமார்ந்த வணக்கத்தைத் தேரிவித்து இதுகாறும் அன்புடன் கேட்டுச் சிறப்பித்த பெருமக்களாகிய உங்கட்கு என் நன்றியைக்கூறி என் சோற்போழிவை முடித்துக்கோள்ளுகின்றேன். வணக்கம்.

ஜெர்மானியர் கண்ட மாணிக்கவாசகர்

திரு. சி. இராமலிங்கம் எம். ஏ., அவர்கள்,
மெய்ப்பொருளியல் விரிவுரையாளர், அண்ணுமலைப்பல்கலைக்கழகம்,
அண்ணுமலைநகர்.

வாதவூரடிகள் அருளிச்செய்த திருவாசகத்திற்கு உருகாதார் நெஞ்சம் கருங்கல்லிற்கொப்பாகும். நெஞ்சக்கன கல்லையும் நெகிழ்ந்துருகச் செய்யும் பக்திப் பனுவல் திருவாசகமாகும். வெளிநாடுகளினின்று நம் தமிழகம் போந்து சமயப்பணி ஆற்றியவருள் "போப்" துரைமகனுர் தலைசிறந்தவராவர். வெள்ளையருள் இவரைத் தலைசிறந்தவராகக் கொள்ளுதற்குக் காரணங்கள் பல உள. அவற்றுள் தலையாய காரணம், அவர் தம் திருக்குறள் திருவாசக மொழிபெயர்ப்புக்களேயாகும். இப் பெருமகனுர் தந்த திருவாசக மொழிபெயர்ப்பினைப் பயின்று திருவாசகத்தின் உயிர்நாடியை ஓர்ந்து உணர்ந்தவர் "ஃப்ரேடிரிக் ஹைய்லர்" (Friedrich heiler) என்னும் ஜெர்மானியப் பெருந்தகையாவார் இப் பெரியார் "பிரார்த்தனை" (Preyer) என்னும் நூல் ஒன்றினை முதல் உலகப்போர் மூண்ட காலத்திலே தமது தாய் மொழியிலே எழுதினுர். ஆனுல் இருபது ஆண்டுகள் கழிந்த பின்னர்தான் அது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. இப்பெரு நூலில் சமயத்துறையில் இறையுணர்வு நலஞ்சான்ற பெரியவர்களைப் (Mystics) பற்றிய குறிப்புக்கள் பற்பல காணலாம். அந்நூலில் மூவிடங்களில் திருவாசகத்தினின்று மேற்கோள் தரப்பெறுகின்றது. ஏனைய மூவிடங்களில் மணிவாசகர் குறிக்கப் பெறுகின்றுர்.

ஜெர்மானியப் பெரியார் மணிவாசகப் பெருந்தகையை அறியவும், அவர்தம் திருவாசகத்தினின்று நுண்ணிய பல உண்மைகளைத் தேறவும், வாய்ப்பாக அமைந்தது "போப்" பெரியாரின் மொழிபெயர்ப்பேயாகும். போப் பெரியார் அவர்கட்குத் தமிழ் உலகம் சிறப்பாக சைவ உலகம் மிகுந்த கடப்பாடுடையது. ஃப்ரேடிரிக் ஹைய்லர் "மார்பர்க்" (Marburg) பல்கலைக் கழகத்தில் பல்வேறு சமயங்களையும் ஆய்ந்து ஒப்புமைகண்டு, பயிற்றும் பேராசிரியராவர் (Comparative religion) "பிரார்த்தனை" என்னும் நூலிலும், அவரதுபிறிதொரு வெளியீட்டிலும் அவரதுள்ளம்

நன்கு புலனுகின்றது. மொழி பெயர்ப்பின் வாயிலாக வாதவூரரது உட்கிடையை உணர்ந்த பெருமை ஹைய்லர்க்கே உள்ள ஒரு தனிப்பெருஞ் சிறப்பாகும்.

ஹைய்லர் (Heiler) அவர்களின் கருத்தில், மணிவாசகர் இறையுணர்வு சான்ற பெரியவர்களுள் ஒரு தனி வகையினைச் சேர்ந்தவர் என்பதாகும். (a particulars class of mystics saints) பக்தி நெறியில் நிற்பவருள் இறையுணர்வு மிக்கவராய், உணர்வு நலம் கனிந்தவராய், இடையருது இறைநினைவோடு வாழ்பவ ராய்த்திகழ்பவர்களுள் தனி நிலை வாதவூர் அண்ணல் பெறுதற் குரியர். இது ஒரு குறிப்பாகும்.

ஓவாது இறை நினைவோடு வாழ்பவர் மணிவாசகர் என்ற கருத்து ஹைய்லர் அவர்களுக்குத்தெள்ளிதின் புலனுய் உள்ளது. இறையின் இன்னருள் வேட்டு நின்ற சமயச் சான்ருேருள், பிரார் தனையில் ஊறி முழுகிய (Men of Prayer) பெரியவர் தம்முள் பக்திப் பெருக்கில் "ஒருமை நலம்" (Communion) உற்றவர் தம்முள் ஒருவராய் மணிமொழியார் கருதப்பெறுகிருர்.

பக்தி நெறியில் வழிபாட்டின் நோக்கம் ஒரு சிறந்த கூறு ஆகும். ஆலயங்களில் ஆவாகனம் செய்யப்பட்டுள்ள, ஆண்ட வனது உருவத்திருமேனி, காலமும் இடமும் கடந்து விளங்கு கின்ற கண்ணுதற் பெருமானைக் கண்முன் நிறுத்துவதால் பக்தன் பேருவகை பூத்து மகிழ்ச்சிக்கடலில் ஆழ்கின்ருன். (mystical adration) விளக்குகள் ஆண்டவனின் திருமுன் அமைந்து காலும் சிறுவொளியும், ஊட்டப்பெறும் நறும்புகையும் பக்தனை இறையருளை இடையருது இறைஞ்சும் ஓர் உணர்வு நிலையில் (mystical state) உய்த்துவிடுகிறது. பக்தியின் இலக்கா கிய பெருமை, அழகு, அருட்பெருக்கு ஆகியவை பருமையாக உருவத் திருமேனிகொண்டு எழுந்தருளியுள்ள பாங்கினை, பக்தன் பல்காலும் கண்டு எல்லையற்ற இன்பப்பெருக்கினை உறு கின்ருன். "His image is an "avathara" i. e. a Personification and incarnation of the God beyond time and space"

இறையின் இன்னருளை இறைஞ்சி நிற்கும் மணி மொழியாரது பக்திச் சுவை நனி சொட்டும் பாடல்கள் எங்ஙனம் எழுந்தன? இறையின் இன்னருளுருவினை இடையருது எண்ணி எண்ணி

அவ்வேண்ணத்துள் ஊறி மூழ்கியதன் உணர்வில் முகிழ்த்தவையே அவர்தம் பாடல்களாம். (... the Psalms of the great Tamil mystic, Manikkavachager were all written or conceived in the temples of Siva and were produced bv the Contemplation of the God's sacred image)

மேற்கண்ட ஆங்கில மோழிபேயர்ப்பின் வாயிலாக (ஜெர் மானிய மோழியினின்றும் மோழிபேயர்த்தது) நாம் அறிகின்ற உண்மைகள் பலவாகும். அவற்றுள் தலையாயது, ஹைய்லர் அவர்களது 'நுண்மாணுழைபுலம்' ஆகும். அவர்தம் கூர்த்த மதி "போப்" அவர்களின் மோழிபேயர்ப்பின் துணைக்கோண்டே சைவ சமயத்தின் உட்போருளை உணர்வதாயின் இந்நாடு போந்து, நம்மிடைப்பழகி நமது சமயச் செல்வங்களை (கோயில்களாகிய கருவூலங்களைக் காணநேரின் அவரால் நமது சமயம் பேரும் விளக்கம் பேறும் என்பதில் ஐயமில்லை.

மனிதன் மேற்கோள்ளும் முயற்சிகளுள், தலை சிறந்ததாய் அறம், அறிவு, அழகு ஆகிய துறைகளிலும், ஒருங்கே போற்றிப் பேணுதற்குரியதாய், எல்லா இந்நலங்களும் அமையப்பேற்ற தாய், ஒப்பிலதாய், உயர்விலதாய், என்றும், எங்கும், எப்போழுதும் நமது நினைவில் நீங்காது, நிறைந்து நிற்பது இறையாகும். இக்கருத்து இறையுணர்வு மிக்கவர் வாழ்வில் சிறந்த இடம் பேறும் என்பதனை முடிவாக "ஹைய்லர்" கூறுகிறார். இறை நினைவு எப்போழுதும் அகலப்பேறுதாராய் ஒழுகிய அருள் நேறிப் பேரியவருள் மணிமோழியார் ஒருவர். இடையறாத இறை நினைவு அமையப்பேற்ற ஆன்றோர் இறையருளை ஒரு கணமும் மறவாது இறைஞ்சி நிற்பர். இத்தகைய அருள் வேட்கை அல்லது வேட்கையின் உருவாகிய பிரார்த்தனை நம்மாட்டு நம் முயற்சியால் அரும்புவதன்றி. அருள் நேறி நின்று ஒழுகிய பேரியவர்கள் தமது வாழ்நாளில் இறையருள் நனிசுரக்கப் பேறாத நிலையை எண்ணி எண்ணித் தம் ஆற்றாமையைப் புலப்படுத்துவர். ஆற்றாமை மிக்க நிலையில் உணர்வு எழுகிறது. அவ்வுணர்வு இறைஞ்சுதலாகின்றது. இவ்வேட்கை மனிதனின் எளிய உள்ளத்தில் தானே முளைத்து எழுவது ஒன்று அன்று. இந்த நினைவும் நினைவால் ஊறும் பிரார்த்தனையும் இறையின் இன்னருள் இவனைத் தம் வயப்படுத்தி தன்பால் ஈர்க்கும் முயற்சியின் விளைவாகும். இக்கருத்து ஹைய்லர் அவர்களால் சிறந்த விளக்கம்

பெறுகிறது. அவர் கூறுவதாவது; ஆழ நோக்கில், கனிந்த உள்ளத்தின் வேட்கையும், இறைஞ்சுதலும் இறையின் இறைஞ்சுதலேயாகும். எல்லாம் கடந்த பரம் பொருள், மனிதனின் எளிய உள்ளத்தின் வாயிலாகவும் எளிய நாவின் வாயிலாகவும் தனது பிரார்த்தனையை நிகழ்த்துவிக்கின்றது. "ஹைய்லர்" அவர்கள் தான் கொள்ளும் கருத்தினை மணிமொழியாரின் திரு வார்த்தையின் துணைக்கொண்டு நிறுவுகின்ற நெறி நமது உள்ளத்தை அள்ளுகின்றது. அவர்தம் பேருள்ளம் அவர் வதியும் நாடு நோக்கி, நம்மை வணங்கச் செய்கின்றது.

திருவாசகம் - குழைத்தபத்து - "கூறுநாவே முதலாகக் கூறும் கரணம் எல்லாம் நீ தேற்றவேண்டாவோ." இதுவே அவர் தரும் திருவாசக மேற்கோளாகும். மேற்கண்ட கருத்தின் ஆங்கில ஆக்கம் வருமாறு. "In the deepest sense, therefore, the prayer of the devout soul if God's own prayer; it is the great God praying through the small heart and weak mouth of man, "the tongue itself' says Manikkavachagar, which cries to Thee, may all the powers of my being which cry to Thee all are Thine"- (Page 110)

ஹைய்லர் அவர்கள் கொள்ளுகின்ற கருத்திற்கு நாம் பிறி தொரு அகச்சான்றும் கொள்ளுதல் கூடும். திருவாசகம் - சிவ புராணம் "அவன் அருளாலே அவன்றாள் வணங்கி" என்னும் வரி நமக்கு ஹைய்லர் உள்ளுவனயாவையும் ஒருவரியில் உரு வாக்கித் தருகிறது. ஹைய்லர் அவர்கள், மணிவாசகர், தம் மாட்டு முகிழ்க்கும் பிரார்த்தனையும் பிறவும் இறையின் இன்னரு ளால் உற்றவை என்று கொள்பவர் என்று, தெள்ளிதின் விளக்கு கின்றார்.

தமது சமயத்தினைப் பரப்ப வந்த 'போப்' அவர்கள் நமது சமயத்தினையும், மொழியினையும் முட்டற உணர்ந்தாலன்றி அச்சமயத்தைப் பரப்புதல் ஒல்லாது என்று ஒல்லையில் உணர்ந் தார். இவ்வுணர்வினை நமக்குத், தமது திருக்குறள் மொழி பெயர்ப்பில் வெளிப்படுத்துகின்றார். இங்ஙனம் உணர்ந்த 'போப்' அவர்கள் நமது சமயத்தினைப் பயின்றதோடல்லாது நமது சமயத்திற்கும் மொழிக்கும் நிலையான தொண்டு செய்து போந்தார். தமிழால் தான் ஈர்க்கப்பெற்றநிலையினைத் தம்நாட்டில்

வழிவழி வருவாரனைவரும் உணரும் வகையில் தமது 'கல்லறையில்' ஈண்டு (கல்லறை) உள்ளான் ஒரு தமிழ் மாணவன் என்று பொறிக்க வேண்டி மறைந்தார். தமிழ்த்தேன் மாந்தித் திளைத்த 'போப்' அவர்கள் தந்த திருவாசக மொழிபெயர்ப்பு நமக்கு ஒரு ஜெர்மானியப் பெரியாரை அறிமுகம் செய்து வைத்துள்ளது. ஹைய்லர் அவர்கள் இன்று நம்மிடை வாழ்கின்ற பெரியாராவார். தனது சமயத்தால் கட்டுருது, காய்தல், உவத்தல் அகற்றி பிற சமய உண்மைகளை நுண்ணணிதின் உணரும் நுழைபுலம் சான்ற ஹைய்லர் அவர்களை அறிந்தோம். அவர் மணிவாசகரைப் போற்றிப்பரவுகின்ற நிலை ஆங்கில மொழிபெயர்ப்பின் வாயிலாக பிற நாடுகளையும் கவர்வதாக இத்தகைப் பெரியவர்களை யெல்லாம் நமக்கு அறிமுகம் செய்து வைக்கின்ற நமது செந்தமிழ்ச் செழுமறை நம் அனைவரது உள்ளத்திலும், உரையிலும், செயலிலும் நீங்காது ஒளிர "ஆளுடைய அடிகளையும்" (மணிவாசகர்) "ஆடவல்லானையும்" வழுத்துகின்றேன்.

நிந்தாஸ்துதி

6. வேட்டுவர்தங் குலப்பெண்ணை வேட்டுமணந் திட்டான் சேவ் வேளென்றேத. கேட்டுமறைக் குரியசிவ னஞ்சுண்டான் அவமானங் கிடைத்த தென்று, வாட்டுமக வுமைகஞ்சி குடியாளாளு ளணங்கு வாய்க்கா தென்று. மோட்டுமத கயமுகவன் கலியாணஞ் செய்துகொள முயன்றி லானே.

7. ஒருமனைவிக் கிருமனைவி யுளமென்றே மணம்விரும்பா தொழித்தா னேனும், பெருவயிற்றோன் சப்பாணி முதற்பிள்ளை யென்றேவிளைய பிள்ளையுன் போலீ, ரருமனைவி யுளனென்றே குடையெடுப்போன் பசியெடுத்தா லாற்றற் கென்றே. இருநிலைக்குப் படியளித்தற் கென்றேநீர் கூத்தாட லியம்பு வீரே.

8. பெறற்கரிய வறக்கோடியே பெண்சாதி யாகவந்த பெரும் பூரிப்போ, திறற்கலைகற் றறத்தெளிந்தார் சிறுவரிரு வருமென்னுஞ் செழும் பூரிப்போ, வறத்தவறு நிதித்தலைவன் மறக்கருநட் புளத்த னெனவரும் பூரிப்போ, சிறக்குமற் றெப்பூரிப்போ தில்லையினீ குதித்தாடல் செப்பு வாயே.

'பழமை' எழுதியது

வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள்,
ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், தருமபுரம்.

அன்புள்ள புதுமை,

ஆம்; நீ அன்புள்ளவன்தான். உன்னை அன்புள்ளவன் என்றே என் நாவும், கருத்தும் கூறுகின்றன. அன்பு உன்பால் உள்ளது. அன்பிலே நீ உள்ளாய். உனது போக்கு, அடிப்படை, உட்கிடை எங்கும் நான் அன்பையே காண்கிறேன். நீ ஒரோரு கால் அன்புப் பாதையில் வழுவிச் செல்லும் சமயம் நேர்கிறபோ தெல்லாம் உன் நிலைக்கு இரங்குகிறேன். நீமட்டுமென்ன, நேர்மைப் பாதையில் நீளச் செல்லும் நேர்மையாளர்களும் சில சமயங்களில் நேர்மைகெட்டுவிடுகிறார்கள்; 'சீர்மை சிறப்போடு நீங்கும்' என்கிறதே திருவள்ளுவம்; அந்தநிலைக்கு ஆளாகி விடுகிறார்கள். நீயும் அப்படி அல்லற்பட்டுவிடுகிறாய். உன்பால் என் கருத்துக்கள் சிலவற்றை ஒளிவுமறைவின்றி உரைக்க வேண்டும்; உள்ளத்தோடோன்றிப் பேசவேண்டும்; என்று பல்கா லும் எண்ணிவந்தேன். அவ்வெண்ணமே இந்தக் கடிதம்.

தம்பி, புதுமை! நான் உனக்கு அண்ணன். உனக்கு முன்பு உலகையாளும் அரசுரிமை பெற்றிருந்தவன். எனக்குப் பின்பு நீ இப்போது உலகாளும் செல்வத்தை உவந்து பெற்றிருக் கிறாய். 'என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ' என்று இராமன் பரதனை எண்ணி இதயம் பூரித்தது போலவே நானும் பூரிக்கிறேன். ஆனால் இந்த உலகப்போக்கில் நாம் நடைமுறையில் நடந்துகொள்ளவேண்டிய முறைகளும் சில உள்ளன என்பதை மறவாதே!

மக்கட் சமுதாயம் இப்போது பிளவுபட்டிருக்கிறது. இந்தப் பிளவு மனப்பான்மைகள் மன்பதையின் ஒற்றுமையைக்குலைக்கும் மாபெரும் கருவிகள். என்னையே ஏத்தி வழிபட்டுப் 'பழமை விரும்பி' என்ற பட்டம் பெறுவோர் பலர்; உன்னையே உருகித் துதித்து 'புதுமைப் போற்றி' என்று போலிவுறுவோர் பலர். இவையே இப் பிளவுகள். இந்நிலை நீட்டித்தல் ஏலாது, பழமை யின் அடிப்படையில் புதுமை, புதுமையின் அடிப்படையில்

பழமை – ஆம்; இவையே வேண்டுவன. இந்த உணர்வின்றேல் போர்தான் மிகும்; பூசலே பெருகும். மனித குலம் ஏனே இவற்றைப் புறக்கணித்திருக்கிறது.

தமிழகம் என்றுதான் இப்பூசல்கள் இல்லாமல் இருந்திருக்கிறது? நமது முன்னுள் வரலாறு நமது ஒற்றுமையில்லாமையைத் தேற்றேன விளக்குகிறது. மூவேந்தர்கள் ஆளும் முப்பெரும் பகுதிகள். அவர்களுக்குள்ளும் மூண்டெழும் போர்ச் செய்திகள். அப்பப்பா! இப்போது நினைத்தாலும் என் நெஞ்சு நோகிறது. இவையெல்லாம் என் ஆட்சிக் காலத்தில் தமிழகம் கண்டவை. வடநாட்டிலேதான் என்ன? அங்கும் இதே குழப்பமே. இராஜபுத்திரர்கள் இணைந்தஅரசமைப்புக் கோள்ளாது பிரிந்திருந்த காரணத்தால் வேற்றுநாட்டான் விரைந்து புகுந்தான்; முறியடித்தான்; முகலாய மரபுச் சரித்திரம் படலம் படலமாக விரிந்தது. இந்தியர் செல்வங்கள் இந்தியர்க்குப் பயன் படாமைக்கு உற்ற பெருங்காரணம் இதுவே. வேற்றுநாட்டார் வரவால் இந்தியர் 'விழுச் செல்வம்' மடிந்தது; ஒற்றுமை உணர்வு ஒடிந்தது; கலப்பு புகுந்தது; தூய்மை அழிந்தது. இவை நான் கண்ட அவலநிலைமையின் நற்சான்றுகள்.

காலம் மாறியது. ஆட்சி என் கையிடமிருந்து உன்கைக்கு வந்தது. 'இனித் தமிழகமும், பிற பகுதிகளும் பொலிவுபெறும்; புதுமைச் செல்வன் புகுந்துவிட்டான்' என்று பூரித்திருந்தேன். ஆனுல் என் அகவானில் இடி இடிக்கிறது; மின்னல் மின்னுகிறது; பெருமழை பெய்கிறது. எனது பூரிப்பு கரைந்துவிட்டது. என்செய்வேன்? தமிழரிடை ஒற்றுமையைக்காணேன்; வெறியின் கோரச்சிரிப்புடைய அநீதிகள் ஆழ்ந்து சமத்துவநீதி முழக்கமிடும் அருங்காட்சியையும் காணேன்; இலக்கியத்திடை எழுந்து முழங்கும் அறப்புரட்சியையும் காணேன். ஆட்சி யரியணையில் உன் காலத்திலாவது அன்னைத் தமிழ் முன்னைத் தமிழ் போல முடிசூடி இருக்கும் கோலத்தைக்கண்டு களிகூரலாம் என்று கருதியிருந்த நான் ஏமாந்து போனேன்.

தம்பி! புதுமை! புதுமை வேகம் 'சாதிகள் இல்லையடி பாப்பா!' என்ற பாரதியின் பாடலை உண்மையாக்கும் பணியில் ஈடுபடுமா? செயலாற்றும் திறம் உடையவன் நீ; இளைஞன்; புரட்சி காணவேண்டும் என்ற புது ஆர்வம் உனக்கிருக்கிறது;

விஞ்ஞான உண்மைகளை விரைந்து வியனுலகுக்குக் காட்டி 'மண்ணை விண்ணு'க்குவேண்டுமென்ற மனப்பாங்கு உன்பால் இருக்கிறது. கலை உலகக் காட்சிகளைக் காசினியெலாம் காட்ட வேண்டும் என்ற கருத்து உனக்கிருக்கிறது. இந்த ஆர்வத் தைச் செயலாக்கவேண்டிய இன்றியமையாமையே இப்போது உன் முன் இருக்கும் ஒப்பற்ற பொறுப்பு. 'வித்தகம் பேச வேண்டாம் பணிசெய வேண்டும்' என்ற எனது பழமைக் குரலைப் புதிய முறையில் ஒலித்துவிடவேண்டும் நீ. அணுகுண்டு, ஐட்ரசன்குண்டு – இவற்றை ஆக்கவேலைக்குப் பயன்படுத்து. இல்லையேல் இவற்றை ஏழு கடல்களில் எறிந்துவிடு. இவை அடக்கியாளப் பிறந்தவையே தவிர வேறொன்றாலும் விளைந்தன வல்ல. அருளும் அன்பும் அடிப்படையாக உண்டானவையல்ல. 'அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கமாயின் அவற் றைப் புல்லார் புரளவிடல்' என்பது வள்ளுவம். உலகமே இந்த அச்சத்திலேயே ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த அச்சம் அகன்று உலக நாடுகள் ஒற்றுமையோடு வாழவேண்டுமானால் அது உன் கையில்தான் இருக்கிறது. தம்பி! உன் ஆட்சிக் காலம் உண்மையிலேயே பொற்காலம்.

தமிழ்நாட்டுத் தொண்டுபற்றி ஒரு வார்த்தை. மேடைகள், பத்திரிகைகள், மேலிடங்களில் இருந்துகொண்டு தொண்டர்கள் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள். ஆனால் செயலாற்றும் செயல் வீரர்கள் இங்கு நிரம்ப இல்லை. இதுவே ஒரு பெருங்குறை. இதைக் குறித்து நம் தமிழகத்துத் தலைவர்கள் மறைமலையடிகள், திரு. வி. க. அடிக்கடி கூறியிருக்கிறார்கள். இப்போது நம் மிடையே உள்ள நாவலர் முனைவர். வரதராசனார், அறிஞர் அ. சிதம்பரநாதனார் போன்ற பேராசிரியர்களும் பேசியும் எழுதி யும் வருகின்றார்கள். எனவே, 'சொல்லிய வண்ணம் செய் கின்ற' புதுமைச் செல்வர்களை நீ விரிவாக்க வேண்டும் என்பது என் வேண்டுகோள்.

என்காலத்தில் இந்தக் குறையே இல்லை. 'சொல்லிய வண்ணமே சோர்வின்றிச்' செய்து முடிக்கும் நல்லவர்கள் வாழ்ந்தார்கள். திருவள்ளுவர், இளங்கோ போன்றாரை எண்ணிப் பார். 'வினை செயல் வகை' அங்கே விளங்கக் காணலாம்; 'வினைத் தூய்மை' அங்கே காணலாம். அந்தக் காரணத்தால்

தான் அந்த அறிஞர்கள், கவிஞர்கள் அளித்துச்சென்ற அருளோவியங்கள் இன்றும் தமிழர் அகங்களை அழகுசெய்கின்றன. எங்கே உண்மை உண்டோ, எங்கே நிறைவு உண்டோ, எங்கே வாய்மை உண்டோ அதற்கு சிதைவு, அழிவு, சீர்கேடு என்றுமே இல்லை என்பது எல்லாம் கற்ற உனக்குப் புரியாததா தம்பி ?

நான் பழைய காலத்தவன். எனக்கு மோனையும் எதுகையும் முட்டில்லாமல் நடத்தி எழுதப் பிடிக்காது. என்கால இலக்கியங்களைப் பார் ! அங்கே சொல்லடுக்கு இருக்காது. ஆனால் பொருளாழம் இருக்கும். 'நவில் தொறும் நூல்நயம் போல' என்று வள்ளுவர் கூறியது அக்கால அறிவுச் செல்வங்களை அல்லவா ? ஆகவே என்னுடைய எழுத்தில் நீ உன்கால வேகத்தை எதிர் பார்க்க முடியாது. ஆனால் பொருளிருக்கிறதா என்று சிந்தித்துப் பார் ! 'ஆழங்கால் பட்டு' அகத்தே துருவிப்பார்.

நான் கட்டை வண்டிக் காலத்தவன். நீயோ வானிடை மிதக்கும் கப்பல் காரன். நான் இந்திர விழாக் காலத்தவன்; நீயோ 'பொன் விழாக்' காலத்தவன். நான் பட்டமில்லாத பாவலர்களோடு அரசவை அரசவையாகச் சுற்றியவன். நீயோ பட்டம் பெற்ற பாவலரை முன்நோக்கி அழைத்துச் செல்பவன். நான் மணி மகுடம் தரித்த மன்னர்களின் குடை நிழலில் வாழ்ந்தவன். நீயோ 'எல்லோரும் அவ்வந்நாட்டு மன்னர்' என்கின்ற இன்பக் குடியரசுப் பூங்காவில் உலா வருபவன். எனவே பழமையின் பேச்சு பழங் கதை என்று ஒதுக்கிவிடாதே; 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' என்று நன்னூலார் பாடியிருப்பது என்னைப் புறக்கணித்துவிடவேண்டும் என்ற கருத்தில் அல்ல; உன்னைப் போற்றிக் கொள்ளவேண்டும் என்ற கருத்தில் தான்.

எனது இதயத்திற் பட்டவற்றை எழுதியுள்ளேன்; இன்னும் எழுதுவேன். எண்ணிப்பார்! பிறகு அண்ணன் சொல்வது எப்படி என்று தெரிந்துகொள்வாய். 'எண்ணித் துணிக கருமம்' என்பது நம்முடைய தமிழ்மறை.

உன் அண்ணன்,

பழமை.

நயன பாஷை

புலவர்மணி, வித்துவான், திரு. மு. இரத்தின தேசிகர் அவர்கள்,
தமிழாசிரியர், போர்டு உயர்பள்ளி, திருவாரூர்.

உலகில் வாழும் உயிரினங்களில் மக்களுயிர் மேம்பட்டு இருப்பது அதன் பகுத்தறிவால்தான். பகுத்தறிவின் துணைக் கொண்டு மக்களுயிர் சாதிக்கும் சாதனைகள் மிகப்பல. அவற்றுள் ஒன்று மொழி. கழறிற்றறிவார் நாயனார் என்பவரைப்பற்றி சைவ உலகம் அறியாதிருக்கமுடியாது. மக்களுயிர் தவிர்ந்த ஏனைய உயிரினங்கள் வாய்ப்பேச்சுப் பேசுவதில்லை. ஆனால் அவை தம் உள்ளக்கிடையினைப் பிறர்க்கு எப்படியோ உணர்த்தித்தான் வருகின்றன. இந்த மர்மத்தை அறிந்தார் கழறிற்றறிவார். அனைத்துயிரோடும் பேசும் வித்தையை உணர்ந்தார்.

இப்படியே மக்களினமும் ஆதியில் வாயொலி கொண்டு கருத்தைப் பிறருக்கு அறிவிக்க முடியாத நிலையில் இருந்தது என்பது மொழிநூலார் கூறும் உண்மை.

> "வைய மீன்ற தொன் மக்களுளத்தினைக்
> கையினு லுரை கால மிரிந்திடப்
> பைய நாவை அசைத்த பசுந்தமிழ்
> ஐயை தாள்தலைக் கொண்டு பணிகுவாம்"

என்ற இக்காலப் புலவர் பாட்டொன்று இக்கருத்தை வலியுறுத்துகின்றது. மக்களினம் வாயொலிகொண்டு பேசித் தன் கருத்தை பிறருக்குப் புலப்படுத்தும் நாகரீக முதிர்ச்சியிலும் பேசாது பேசும் பேச்சிற்கு ஆற்றல் அதிகம்தான் இருக்கிறது. கை ஓச்சுதலாலும், உதட்டின் அசைவாலும் முகத்தில் புலப்படுத்தும் எத்தனையோ விதமான அசைவுகளாலும் மக்கள் தம் கருத்துக்களைப் பிறர்க்குத் தெள்ளத்தெளியப் புலப்படுத்த முடிகிறது. இப்படியே கண்ணசைவால் கருத்துக்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளும் வித்தை ஒரு மாய வித்தைதான்.

உடம்பில் எத்தனையோ உறுப்புகள் அமைந்திருப்பினும் கண்ணிற்குள்ள பெருமை மற்றவற்றிற்கில்லை. "கண்ணிற் சிறந்த உறுப்பில்லை" என்ற வாக்கும் இதனை வலியுறுத்தும்.

வாழ்க்கை நெறியைக் காணும்போது கண்ணிற்கு இருக்கும் பேச்சாற்றல் வாய்க்கும் இல்லை என்றே சொல்லிவிடலாம்.

இளங் காதலர்கள் ஒருவரை ஒருவர் காணும்பொழுதெல்லாம் நடக்கும் பேச்சு, கண்களால்தான் நிகழும். ஆயம் நீங்கித் தனித்து நின்ற மங்கைப்பருவம் உடையாளை, ஓர் பொழிலின் நடுவே அவளுக்கு ஒத்த நிலையையுடைய காளைப்பருவம் உடையான் நோக்குகின்றான். தன் நோக்கத்தால் உள்ளக் காதலை அவளுக்குப் புலப்படுத்தி விடுகின்றான். அவளும் அவனை அவ்வண்ணமே நோக்கித் தன் காதலைப் புலப்படுத்தி விடுகின்றாள். ஆனால் இந்தப் பேச்சுக்கள் வாய்ப் பேச்சுக்கள் அல்ல; கண் பேச்சுக்களே. இதனைத்தான் வள்ளுவர் பெருந்தகை:-

"யான் நோக்குங்காலை நிலநோக்கும் நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்"

என்று கூறிப் போந்தார்.

அப்படி நோக்கிய தலைவியின் பார்வையில் இருவகைக் கருத்துக்களைத் தலைவன் உணர்கின்றான். முன்னே நாணம் மறைப்ப, உடன்படாமைக் குறிப்புத் தோன்ற தலைவி பார்க்கின்ற பார்வை தலைவனுக்கு நஞ்சுபோல் மன வேதனையைக் கொடுக்கின்றது. பின்னே அவன் உள்ளத்தெழுந்த காதல் கட்டுக் கடங்காதுபோகவே அன்புக் குறிப்புடன் நோக்குகின்றான். இப் பார்வை அவனுக்கு அமுதம்போல் உயிரைத் தழைக்கச் செய்கின்றது. இந்தக் காட்சியை அப்படியே:-

"இருநோக்கு இவளுண் கண்உள்ள தொருநோக்கு
நோய் நோக்கொன்றந் நோய் மருந்து"

என்று படிப்பித்துக் காட்டுகின்றார் பொய்யில் புலவர். இப்படிக் கண்கள் கலந்து பேசிய பேச்சின் முடிவு யாதாய் இருக்கமுடியும் அன்புடை நெஞ்சங்கள் தாம் கலந்து விட்டன. வாய் பேசாமலே காரியம் முடிந்து விட்டது. எல்லாம் கண்பேச்சில்தான். இருவரும் தத்தம் குறிப்பினை அறிவித்துக்கொண்டவுடன் வாய்ச் சொற்கள் பயனற்றனவாயின. இந்நிகழ்ச்சியைத்தான்:-

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில"

என்ற அருமைத் திருக்குறள் படம் பிடித்துக் காட்டுகின்றது.

மிதிலைமாநகரின் அரசவீதியிலே விசுவாமித்திர முனிவருடன் சென்றுகொண்டிருந்த இராமனின் தலை நிமிர்ந்தது. மேன் மாடத்தில் உலாவிக்கொண்டிருந்த சீதையை நோக்கின அவன் கண்கள்; அப்படியே சீதையின் கண்களும் இராமனை நோக்கி விட்டன. பின்னர் வாய்ப்பேச்சிற்கு இடம் ஏது? கண்களே தமக்குள் பேசிக்கொண்டன என்கின்றார் கம்பர். அண்ணலாகிய இராமனின் வேற்கண்கள் தாக்கணங்கனைய சீதையின் தனங்களில் தைத்தன. சீதையின் வேற்கண்களோ இராமனின் தோள்களில் தைத்தன என்கின்றார்பின்னரும். இப்படி எல்லாம் காதலர்களது பேச்சு கண்களாலேயே நிகழ்ந்துவிடுகிறது.

மக்கள் வாழ்வில் அறநெறி நிற்றற் கண்ணும் கண்களால் நிகழும் பேச்சுக்கள் சிறப்புடையனவாகவே காணப்படுகின்றன. உலகில் மிக மிக மெல்லிய பொருள் அனிச்சமலர் என்பது வள்ளுவர் கருத்து. ஏனெனில் அதனை மூக்கின்பக்கம் வைத்து முகர்ந்துபார்த்தாலும் குழைந்துவிடுமாம். அதனினும் மெல்லிய பொருள் ஒன்றைக் காண்கின்றார் வள்ளுவர். அதுதான் விருந்தினரது உள்ளம். அறநெறி நில்லா வன்னெஞ்சன் ஒருவனது வாய்தலில் செல்லும் பொழுதே அக் கொடியவனது கண்பார்வை விருந்தினருக்கு அவனது உள்ளக் குறிப்பை உணர்த்தி வருகின்றது. உடனே அவரது உள்ளம் வாடி விடுகின்றது. இக்கொடிய நிகழ்ச்சி கண் பேச்சால் நிகழ்ந்ததன்றே?

> "மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
> நோக்கக் குழையும் விருந்து."

என்பது குறள் மொழி.

மண்ணுள் வேந்தனுக்கும் வாய்ப்பேச்சினும் கண்பேச்சே வாய்ப்புடையதாகத் தோன்றுகின்றது.

> "செவியிற்கண்டு கண்ணிற்கூறி - இருநிலம்
> புரக்கும் ஒரு பெருவேந்தன்."

என்கின்றார் குமரகுருபர அடிகளார். குறிப்பிற் குறிப்புணர்வாரை உறுப்பினுள் யாதுகொடுத்தும் கொள்ளவேண்டுவது அரசன் கடமை என்கிறார் வள்ளுவரும். மனிதப் பண்புகளில் தலையாயது கண்ணோட்டம். இக் கண்ணோட்டம் கண்ணின் குறிப்பால் நிகழ்வதன்றே? உலகம் நிலைத்திருப்பதே கண்ணோட்டத்தால்தான் என்பது வள்ளுவர் கருத்து.

மனித வாழ்வின் கடைநிலையாய் வருவது மறுமை இன்பம் பெறும் வழியே ஆகும். இந்நேறியில் இறைவனே மானிடச் சட்டை தாங்கி, குருவாய்க் காட்சி அளித்துத் திருவருள் பாலி பான் என்பது சைவநேறியில்காணப்படும் உயர்ந்ததோர் உண்மை ஆகும். அப்படி குருவாய்வரும் இறைவன் பக்குவான்மாக் களுக்குப் பேசும் பேச்சுக்கூட கண்ணுல்தான் நடக்கின்றது.

"குருபரன் என்ருேர் திருப்பேர் கோண்டு திருநோக்கால்
ஊழ் வினையை மாற்றி"

என்கின்ருர் குமரகுருபர அடிகளார். குரு தீக்ஷை புரியும் முறையை விளக்கவந்த விடத்தும் அருணந்தி சிவாச்சாரிய சுவாமிகள்,

'பலவிதம்ஆ சான்பாச மோசனந்தான் பண்ணும்
படி நயனத் தருள்பரிசம் வாசகம் மானதமும்"

என்று கூறும் இடத்தும் நயனதீக்ஷையே முதற்கண் வைத்துப் பேசப்படுவது. நயனபாஷை மனித வாழ்வில் எவ்வளவு உயர்ந்த இடத்தைப் பேற்றிருக்கின்றது என்பதை மேற்கண்ட செய்திகள் புலப்படுத்துகின்றன.

நிந்தாஸ்துதி

9. முன்மகற்குப் பேண்கேட்க பேருவயிற்றன் கோடோமேன் ருர் மோழிந்திட்டாரோ, பின்மகற்கு வேடர்குலப் பேண்கோண்டா யேன்றிகழ்ந்தார் பேசினரோ, நின்மனைவி மலைப்பேதை நீயாண் பேண் ணலனேன்ருர் நிகழ்த்தி ஞரோ, நன்மதி சூடியவரனே யவமான மேன்னினைந்தோ நஞ்சுண்டாயே.

10. பேண்டிரண்டு கோண்டவர்க்குப் பேருநேருப்பேன் றுரைக்குமோழி பிசகா தேன்ருே, அண்டியுறுங் கரிமுகவன் பேரு வயிற்றுக் கிரையளித்தற் கமையா தேன்ருே, மண்டிவருங் குகன் றகப்பன் சாமியா யினனினிமேன் மதியானேன்ருே, விண்டுவயன் புகழோற்றித் தியாகையா நீயிரக்க வேளிப்பட் டாயே,

தமிழ் மொழி ஒலி மாண்பு

வித்துவான், திரு. சொ. முத்தையா தேசிகர் அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், த. சு. லூ. தி. உயர்பள்ளி, தரங்கம்பாடி.

தோற்றுவாய் :

மொழிவாயிலாகவே நாம் நமது எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிக்கவும், பிறர் கூறுவனவற்றை செவிமடுக்கவும், காலங் கடந்த கற்பனைக் களஞ்சியங்களைக் கண்ணுறவும், பின்னவரும் முன்னவரின் சிறப்பியல்புகளைப் படித்துணர்ந்து நல்வாழ்வு நடாத்தவுமியல்கிறது. மொழியின் வாயிலாகவே நாகரீகம் வளருகிறது. ஒலி வடிவில் மொழியினைப் பேசலுற்ற காலமே நாகரிகத்தில் நனிசிறந்த காலமெனலாம். இதுகாறும் மக்க ளிடைப் பேசப்படும் மொழிகள் மூவாயிரமாகலாம் என அறிஞர் கள் வரையறை செய்து கூறியுள்ளனர். இவற்றுள் ஒலி வடிவில் மட்டும் நிற்பனவும், வரிவடிவிலும் இடம் பெற்றனவும் உண்டு. பண்டு இருவழியும் செல்வாக்குப் பெற்றவை சில இற்றை நாளிலே ஏட்டு வழக்கில் மட்டும் உள்ளன. காரணம் பரந்து வரும் காலப் போக்குக்கு ஏற்ப அவை மாருததேயாம். இவ்வா றிலாது காலங்கடந்து, காலத்தால் ஏற்பட்ட மாறுதல்கட்கு உட்பட்டு, இன்றும் நன்னிலையில் இருக்கும் மொழிகளுள் அமிழ் தினுமினிய நந்தாய்மொழியாம் தமிழும் ஒன்ருகும். நம்மொழி பண்டுதொட்டு வந்த மொழி. தொன்மைவாய்ந்தது. இன்பம் பயப்பது. தெளிவுபெற்றது. வளம் உள்ளது. கற்பனைக் கருவூலமாம் இலக்கியங்கள் நிறைந்த இன்பச்சோலை. தனித்து இயங்கும் தன்மையுள்ளது. இவ்வாறு திகழ்வதற்குக் காரணம் இதனது அமைப்பு முறையேயென்க. இதனை ஆய்வதே எமது நோக்கம்.

மொழிகளை ஒலித்தே பிறர் அறியச் செய்யப்படுகிறது என்பது முன்னரே கூறப்பட்டது. ஆனல் ஒலிப்பு முறையில் மொழிக்கு மொழி வேறுபாடு காணப்படுகின்றது. இதற்குக் காரணம் அவர்களது இருப்பிடமும், தட்பவெப்பநிலையும், உடை உணவு முதலிய மற்றயனவுமாம். காட்டாக, மலைவாழ் மக்கள் உரத்துப் பேசும் வன்மையையும், கடற்கரையிலும் நகரங்களிலு

முள்ள மக்கள் மேல்லோலிகள் இயப்பும் வன்மையையும் பேற்று இருத்தலைக் காண்க. மலையாள மோழி மூக்கின் ஒலிகள் அதிகம் பேற்றிருத்தலையும், தேலுங்கு உயிரோலி இயைபு என்னும் திரிபு (Rarmonic Sequence of Vowels) பயின்று வருதலையும், கன்னடம் 'ப' குறைந்து 'ஹ' மிகுந்து வருவதையும் காண்க. ஆனால் தமிழ்மோழியில் அவ்வாறு எந்த இன ஒலியும் பயின்று வருதலின்று. ஒலியுறுப்புக்கள் அனைத்தும் பயிற்சி பேறத் தக்க வாறு நமது முன்னோர்கள் அமைத்துள்ளனர். அதனாலேயே தமிழ்மோழியினைக் கற்றோர் ஏனைய மோழிகளை வேகு எளிதில் கற்றுத் தேர்ந்தவராகிவிடுகின்றனர். தமிழ் மோழியின் ஒலி மாண்பில் தலையாயது இதுவன்றோ ?

நுரையீரலிலிருந்து எழும் காற்றை வன்மையுடன் வேளிப் படுத்தலே ஒலியழுத்தத்திற்குக் காரணமாகும். ஓர் உறுப்பின் வன்மையான முயற்சியால் மட்டுமல்லாமல் ஒலியுறுப்புக்கள் அனைத்துமே வன்மையுடன் சேய்யும் முயற்சியே அதற்குக் காரணம் என்பதை "யேஸ்பர்ஸன்" என்ற அறிஞர் விளக்கு கிறார். ஆங்கிலம் போன்ற மோழிகளில் ஒரு சோல்லில் பல அசை இருந்தால் அவற்றுள் ஒன்றை எடுத்தும் மற்றவற்றைப் படுத்தும் நலிந்தும் ஒலிப்பர். ஐரோப்பிய மோழிகளில் உள்ள வாறு அவ்வளவு மிகுதியாக ஒலியழுத்தம் (Stress) தமிழ் மோழியில் இல்லையேன்பர். ஓரளவுண்டேன்பதை,

"எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பின்
திரிபும் தத்தமில் சிறிதுள வாகும்." (நன்னூல்)

என்பதனால் காண்க. பல அசைகள் உடைய ஒருசோல் அழுத்த மின்றி உச்சரிக்கப்படும் உயிரோலிகள் காலப்போக்கில் மேன் மையாக ஒலிக்கப்பட்டு நாளடைவில் ஒலிக்கப்படாது போதலும் உண்டு. இவ்வாறு உயிரோலிகள் மறையும்போது அவற்றைச் சார்ந்த மேய்யேழுத்துக்களும் ஒலிக்கப்படாமல் மறைந்துபோ கின்றன. ஆங்கில மோழியில் இவ்வாறு ஒலிக்கப்படும் ஓரசைச் சோற்கள் மிகுதிக்குக் காரணம் இதுவே. Strife, hinfe, Streugth, Weallh என்ற சோற்களை நோக்குக. ஆனால் தமிழ்மோழியில் நேடுங்காலமாக வழங்கிவந்த ஒலி முறை உள்ளது. பண்டு தோட்டுப் பாங்காய் அமைந்த ஒலி முறை வண்ணம் ஆக்கப் பட்ட எழுத்து முறையுமுளது. எடுத்தல் படுத்தல் நலிதல் ஆகியவைகள் நுட்பமாய் அமைந்து அளவுகடந்து பேருகாமல்

உள்ளன. ஆதலாலேயே ஆங்கிலம்போல் பலவகைச் சொற்கள் குறுகி ஓரசைச்சொற்களாக மாறும் மாறுதல்கள் தமிழில் காணப் பெறவில்லை. ஒரு சில இருப்பினும் அவை பேச்சுவழக்கிலுள்ள கொச்சை மொழியேயாகும் என்பதில் ஐயமுமுண்டோ ?

தமிழ் நெடுங்கணக்குமுறை கற்பதற்கெளிது. முயற்சிக் குறைவு. பயிற்சிவேண்டுவதின்று. நுண்ணிய வேறுபாடுகளே உள. அவற்றின் வரிசை முறையை ஆயின் யார் உள்ளந்தான் முன்னோர் பேரறிவினை வியக்காது. ஒரு குறில். உடன் அதனை அடுத்து நெடில். ஒரு குறுகிய ஓசையை ஒலித்தவுடன் நீண்ட ஓசையை ஒலித்தல் எவ்வளவு சுலபமும், பயிற்சிக் குறைவும் காலச் சிக்கனமுள்ளது. (அ ஆ இ ஈ உ ஊ) என்பனவற்றைக் காண்க. இப்பாகுபாடு வேற்று மொழிகளில் சிலவற்றில் காண வில்லை. பிரேஞ்சு மொழியில் முற்றிலுமில்லையேன்பர். ஆங் கிலத்திலும் இவ்வரையறை காணப்படவில்லை. தமிழ் மொழி யின் ஒலி மாண்பினுக்கு இதனினும் சான்று தேவையோ ?

எழுத்துக்கள் பல சேர்ந்து சொற்களாக அமைகின்றன. இவ்வாறு சொற்கள் அமையும் முறையிலும் எளிமை தோன்ற வேண்டும். ஒலிக்கக்கூடாத கூட்டொலிகளையும், ஒலியமைப் பிற்குக்கூடாத ஒலிகளையும் தமிழ் மொழி என்றும் ஒதுக்கியே வந்துளது. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் யாவை ? இறுதியில் வரும் எழுத்துக்கள் யாவை? உடனிலை மயக்க எழுத்துக்கள்யா? வேற்றுநிலை மயக்க எழுத்துக்கள்யாவென வரையறைசெய்து வைக்கப்பட்டுள்ளது. ஆங்கில மொழியில் இதனைக் கண்ணுறல் இயலாததே. சொல்லின் முதலில் தமிழ் மொழியில் உள்ள பன்னிரேண்டுயிரும் வரலாம். மெய்களில் க ச த ந ப ம வ ய ஞ என்பவை வரலாம்.

"பன்னீ ருயிரும் மொழி முதலாகும்" (தொல்)

என்பதைக் காண்க. மெய்களும் உயிருடன் சேர்ந்தன்றி முதலில் வராது.

"உயிர் மெய் அல்லன மொழிமுதல்ஆகா" (தொல்)

ஆனல் ஆங்கிலத்தில் இதுபோன்ற கட்டுப்பாடின்றி விருப்பப்படி வருதலை கீழ்வரும் காட்டுக்களால் அறிக. Shape, thrill, இவற் றில் இருமெய்யும் மூன்றுமெய்யும் மொழி முதலில் வந்துளதைக்

காண்க. மொழியிறுதியில் வருவன ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்பனவும் உயிரெழுத்துக்களுமாம். ஒலிப்பதற்கு குறைந்த முயற்சியுடையவை இவையே. தெலுங்கு, கன்னடம், துளு போன்ற மொழிகள் உயிர் ஈருக எல்லாச் சொற்களையும் முடித்தலைக் காண்க. (மண்ணு, தானிகி, ஆவுனு) வெடியின வல்லெழுத்துக்களை சொல்லிறுதியில் உச்சரிப்பது கடினமல்லவா (பாக்) ஒலித்தறிக. ஆகவே ஒலிப்பதற்கு சுலபம் கருதியே இம் முறையை வகுத்துள்ளனர்.

ஒலி நூலார் மெய்யெழுத்துக்களைப் பிரிக்கும்போது ஒலி யுறுப்புக்களாகிய இதழ், பல், அண்ணம் முதலியவற்றைக் கொண்டு பிரிப்பர்.

1. இதழினம் (Labials) ப, ம, வ.

2. பல்லினம் (Dental) த, ந.

3. முன்னண்ணவினம் (Palatals) ச, ஞ, ய.

4. பின்னண்ணவினம் (Velar Sounds) க, ங.

5. உண்ணாக்கினம் (Uvular sounds) ர, ழ.

6. வளைநாவினம் (Cacumuials) ட, ண, ள. இவற்றினுள்ளும் பிறப்பு முயற்சியைக்கொண்டு, க, ச, ட, த, ப என்பனவற்றை வெடியினம் (Plosives) என்பர். இது மூச்சுத் தடைபட்டு வெடிபோல் வெளியாதலால் பிறக்கிறது. இவற்றினை மொழியிறுதியில் உச்சரிப்பது அரிதன்று. ஆதலால் அவற்றை உச்சரிக்க முற்படும் பொழுது உயிரெழுத்தினை இயைத்து ஒலிக்கின்றனர். வல்லின மெய்கள் உகரம் என்ற உயிரூர்ந்தே மொழியின் இறுதியில் வருகின்றது.

"நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி யீற்றும்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே." (தொல்)

இவ்விறுதியுகரம் ஐரோப்பிய மொழிகளில் இல்லாத ஒன்ருகும். வடமொழியமைப்பிலும் காணமுடியாதது. 'வாக்' என்ற வட சொல் தமிழில் எடுத்தாளப்படும்போது வாக்கு என்ருவதைக் காண்க. இது முயற்சி எளிமையைநோக்கி (Economy of effort) உபயோகப்படுத்தப்படுகிறது. காட், பாக், நாட், தட் என்பவற்றைவிட காடு, பாக்கு, நாடு, கட்டு என்பன உச்சரிப்பதற்கு எளிமையன்ரே?

சொற்கள் எழுத்துலகத்தும் பேச்சுலுகத்தும் மாறுபடுகிறது. சொற்பொழிவில் பேசியவண்ணம் குழந்தையோடு ஒருவர் கொஞ்சுவதின்று. இருக்கிறது என்ற சொல் திரிந்து இக்குது என்ருகிறது. பல அசை ஆங்கிலச் சொற்கள் நாளடைவில் குறைந்து ஓரசைச்சொற்களாகியுள. Habaidedeima என்ற சொல்லே Had என்று இப்பொழுது வழங்கப்படுகிறதாம். சொல்லில் சிக்கனம் கருதி இம் முறை கையாளப்படுகிறது. ஆனுல் தமிழ் மொழியில் பல சொற்களும் ஈரசை மூவசைச் சொற்களாகவேயுள. இவ்வாருன பெரும் மாற்றத்திற்குள்ளாகவில்லே. இத்தகைய குறைவால் சொல்லின் அழகு வளர்ச்சி, பிறப்பு முதலியன குன்றுகின்றன. நல்ல சிற்பம் ஆற்று வெள்ளத்தில் அகப்பட்டு சிதைந்துவிடுமேயானுல் கலேஞனுல் போற்றப்படுமா? இல்லே. திரிந்த சொற்களும் இவ்வாறே. அது வெறும் உருளேயே. உருளே பாதையைத்தான் செம்மைப்படுத்தும். மக்களில் பெரும்பாலர் பேச்சு மொழியை மாற்றிய போதிலும் எழுத்தாளர்கள் சிற்பத்தைப் போல கால அழிவுக்குட்படாது கட்டிக் காத்து வருகின்றனர். இத்தாலி, ஜெர்மன் முதலிய மொழிகளில் இம் மாறுதலின்று. ஒன்றில் பழையவேடமும் ஒன்றில் புதியகோலமும் புனேவதில்லே. இரண்டிடத்தும் இயற்கையாகவே உள்ளது. இங்நிலேயே தமிழிலும் உள்ளது. சில சொற்கள் ஆச்சுது, போச்சுது போன்றன கொச்சையாய் பேசப்பட்டபோதிலும் அவற்றிலுள்ள ஆகு, போ என்ற பகுதிகள் சிதையாது முன்பு வழங்கியது போலவே பேசப்படுதலே உன்னி ஓர்ந்து, பேச்சும் எழுத்தும் திரியாது தமிழில் வழங்குகின்றது என்பதையே கொள்ளவேண்டும்.

இதுகாறும் கூறியவற்ருல் தமிழ் மொழி ஒலிப்பு முறை எல்லா உறுப்புகட்கும் வேலேதருவதென்றும், ஒலித்தற்கெளிதாய வரையறையுடையதென்பதும், தமிழ் நெடுங் கணக்கு முறை ஒலி இயல் ஆய்வாளர் கருத்துக்கேற்ற குறில் நெடில் என்ற அழகுபெற்றதாயும், எழுத்துக்கள் எல்லாம் ஒலித்தற்கேற்றவாறு சொற்களாகப் பெற்றமையும், வெடியினமெய்களும் மொழியிறுதியில் வந்துள சிறப்புப்பற்றியும், திரிசொற்கள் ஏற்படாவாறு அறிஞர்களால் கட்டிப் பாதுகாக்கப்படுகிறது. மக்களும் முக்கிய பகுதிகளே சிதைத்துவிடுதலில்லே என்பதையும் கண்டோம். மொழி ஆய்வாளருக்கும் வியப்புண்டாக, தமிழ் மொழி பெற்ற ஒலி மாண்புதான் என்னே !

திருவண்ணுமலே

திரு. கை. முருகையாப் பிள்ளே பி. ஏ., எல். டி., அவர்கள்,

தலேமை ஆசிரியர், ஓரியண்டல் ஹைஸ்கூல், தருமபுரம்.

திருவண்ணுமலே தமிழ்நாட்டில் உள்ள ஒரு பெரிய சிவத் தலம். பஞ்சபூதத்தலங்களுள் அது ஒன்று. இறைவன் அங்கு அங்கி வடிவத்தில் இருந்ததாகப் புராண வரலாறு கூறுகின்றது. அந்த தலத்தின் பெருமை அன்றும், இன்றும் ஒன்றுபோல் நிலவி வருகின்றது. "அண்ணுமலே தொழுவார் வினே அறுமே" என்று உறுதிமொழி கொடுத்தவர் ஆளுடையபிள்ளேயார். அந்த உறுதிப்பாட்டுடன் இன்றும் மக்கள் திரள் திரளாக வந்து 'அண்ணுமலேக்கு அரோகரா' என்று ஆரவாரிப்பதை எல்லா நாட்களிலும் காணலாம். சிறப்பாக விழாக் காலங்களில் மிக அதிகம். 'வேண்டுதலேக்காக' மொட்டையடித்துக்கொள்ளும் பழக்கமும் உண்டு. வினே அன்றுடன் அற்றுத் தொலேந்தது என்பதைக் காட்டுகிறது போலும் அது! கார்த்திகை மாதத்தில் விழா மிகச் சிறப்பு.

தலத்தின் இருப்பிடம்

திருவண்ணுமலே வட ஆர்க்காடு ஜில்லாவைச் சேர்ந்தது. அது ஒரு தாலூகாவுக்குத் தலேமையான இடம். இத்தாலூகா 1911 ஆம் வருடம் வரையில் தென் ஆர்க்காடு ஜில்லாவுடன் இணேக்கப்பட்டிருந்தது. திருவண்ணுமலே விழுப்புரத்திலிருந்து காட்டுப்பாடிக்குச் செல்லும் புகைவண்டி கிளேப்பாதையில் இரண்டு இடங்களுக்கும் இடையேயுள்ளது. விழுப்புரத்திலிருந் தும் காட்டுப்பாடியிலிருந்தும் அது சமமான தொலேவில்தான் உள்ளது. இரயில்பாதையன்றி மோட்டார் வழியாகவும் காஞ்சி புரம், வேலூர், திண்டிவனம், செய்யாறு, வந்தவாசி, செங்கம், சென்னே முதலிய இடங்களிலிருந்து எளிதில் வருதல் கூடும். திருவண்ணுமலே பெரிய ஊர். நகரமென்றே சொல்லவேண்டும். நகராண்மைக்கழகம் (முனிஸிபாலிடி) உண்டு. (டிபுடிகலேக்டர்) துணேத் தண்டல் தலேவர் உள்ள இடம். துணேக் காவலரும் (Deputy Superintendent of Police) இருக்கிருர்.

பழைமையில் ஆட்சி

பழையகாலத்தில் இந்த நகரம் சோழ மன்னர்களால் ஆளப் பட்டுவந்தது. கி. பி. பதினான்காம் நூற்றாண்டில் ஹோய்சள அரசர்களில் ஒரு குடும்பத்தினர் திருவண்ணாமலையைத் தலைநக ராகக்கொண்டு ஆட்சிபுரிந்திருக்கின்றனர். பிறகு விஜயநகரத்து அரசர்களும், தஞ்சை நாயக்கர்களும் ஆண்டுவந்திருக்கின்றனர். பதினேழாம்நூற்றாண்டில் கர்நாடக நவாப்பினுடைய ஆட்சிக்குக் கைமாறிவிட்டது. 1753 இல் மிகுந்த குழப்பம். தடியெடுத் தவன் தண்டல்காரன். 1760 வரை இப்பகுதியில் முராரிராயர், கிருஷ்ணராயர், மிருத்திஸ் ஆலிகான், பார்க்கத் உல்லாகான், பிரேஞ்சு சூப்ரே, சாபினே, ஆங்கில காப்டன் ஸ்டீபன்ஸ்மித் முதலியோர் இவ்வூரை முற்றுகை செய்து மாறி மாறி வெற்றியும் தோல்வியும் அடைந்துள்ளனர். முடிவில் திப்புசுல்தான் கைப் பற்றியுள்ளான். பத்தொன்பதாவது நூற்றாண்டின் முற்பகுதியில் தான் ஆங்கில ஆளுகைக்கு உட்பட்டதாயிற்று.

அமைப்பும் தோற்றமும்

திருவண்ணாமலையில் மூன்று மலைகள் உள்ளன. மலைகள் உள்ள காரணத்தாலேயே அதற்கு அப்பெயர் வந்துள்ளது. மலையினுச்சி கடல்மட்டத்துக்குமேல் 2668 அடி உயரமுள்ளது. அண்ணாமலையார் திருக்கோயில் தமிழ்நாட்டிலுள்ள மிகப் பெரிய கோயில்களுள் ஒன்று. இக்கோயில் 25 ஏகர் பரப்பளவுள்ள நிலத்தில் கட்டப்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. இதன் வெளிச்சுற்றின் சுவர்கள் கோட்டைச் சுவர்கள் போல் மிக உயர மாகவும், கனமாகவும் உள்ளன. கீழ்ப்புறம் மேல்ப்புறம் சுவர்கள் ஒரே அளவுள்ளவை. அவைகளின் நீளம் 700 அடி. தென்புறம் வடபுறம் சுவர்களின் நீளம் 1479 அடி, 1590 அடி ஆகும்.

இக்கோயில் மலையடிவாரத்தில் உள்ளது. இரயில்வண்டி யில் போகும்போதே, இரண்டு மூன்று மைல் தொலைவிலேயே கோபுரங்கள் வானளாவியுள்ளதைக் காணலாம். ஒன்பது கோபுரங்களும் பக்கத்திலுள்ள மலைகளுடன் போட்டிபோடும் தோற்றம் பார்க்கப்பார்க்க மனதைக் கலங்கச்செய்யும். இயற்கை யும் செயற்கையும் ஒன்றுக்கொன்று எழிலூட்டித் தழுவிக்கொண் டிருப்பதைக் காணக் கண்கள் ஆயிரம் வேண்டும். எழும்பி எழும்பிப் பார்த்தாலும் என்னுடன் இணையாக முடியுமா என்று மலைகள் கோபுரங்களை விளித்துக் கூறுதல் காதுகளுக்குக்

கேட்காது; கண்களுக்குத்தான் புலப்படும். புகைவண்டி அண்மையில் செல்லச்செல்ல நம்மை நோக்கி வரவேற்க வந்து கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது. இயற்கை வனப்பின் பின்னணியில் செயற்கையழகும் திறனும் கலந்து காட்சியளித்தல் பார்க்கத்தகுந்தது ! பார்க்கத்தகுந்தது !!

திருக்கோயில்

கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. முதற்கோபுரம் 11 நிலை உள்ளது. உயரம் 217 அடி. அடிநிலை 135 அடி நீளமும் 98 அடி அகலமும் உள்ளது. இக்கோயில் அழகான ஒன்பது கோபுரங்களால் மிகவும் அழகுசெய்யப்பெற்றிருக்கின்றது. அவற்றுள் ஒன்று வல்லாளன் கோபுரம். அது கிழக்குப்பக்கலில் உள்ள இரண்டாவது கோபுரம். இக்கோபுரத்திலிருந்து அருணகிரிநாதர் கீழே விழும் வேளையில் அவரை முருகப்பெருமான் காப்பாற்றியதாக வரலாறு. அந்த முருகனே இக்கோபுரத்திற்கு வடபால் கோயில்கொண்டுள்ளார். இரண்டு கோபுரங்களுக்குமிடையே வடபால் ஆயிரக்கால் மண்டபமும், தென்பால் அதற்கெதிரில் சிவகங்கைத் தீர்த்தமும் உள்ளன.

வல்லாளன் கோபுரத்தின் வழியாக உள்ளே செல்லவேண்டும். அங்கு பிரம்மதீர்த்தம் உள்ளது. சொற்பொழிவுகள் நடைபெறும் ‘ சக்தி விலாச ’ சபையும் வடபால் உள்ளது. அடுத்தபடியாக உள்ளது கிளிக்கோபுரம். கிளி ஒன்று அதன் மீது உள்ளது. அருணகிரிநாதர் கிளி வடிவமாக இருந்து கந்தரனுபூதி பாடினுர் என்பது புராண வரலாறு. பிரம்மதீர்த்தத்திற்கு மேற்கில் உள்ளது ‘ மகிழமர ’மாகிய தல விருட்சம்.

கிளிக் கோபுரத்தின் வழியாகக் கோயிலுக்குள் சென்றுல் முதலில் அண்ணுமலைநாதர் பஞ்சமூர்த்தி வடிவமாக மேற்கு முகமாக நின்று கார்த்திகை தீபத்தன்று தரிசனம் கொடுக்கும் மண்டபம் உளது. இடதுபக்கத்தில் கிழக்கு முகமாக விநாயகர் சந்நிதி. சிவந்த மேனியுடையவர். தினமும் மாலையில் நடக்கும் பூஜை மிகவும் சிறப்புடையது. இங்கிருந்தபடி அண்ணுமலையார் சந்நிதிக்குச் செல்லலாம். இறைவனுக்கு அருணுசலேசுவரர் என்னும் பெயருண்டு. தேவிபார்பேயர் உண்ணுமுலையம்மையார்.

(தொடரும்)

பழங்காலப் பெண்டிர்

திரு. ப. முத்துக்குமாரசாமி அவர்கள்,
பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பின் நாற்பெயர் எல்லை யகத்தவர் வழங்கும் தென்மொழியாம் தேன்மொழி வைத்து உலகாண்ட நெடியோன் குன்றமும், தொடியோன் பௌவமும் தமிழ் வரம்பு அடுத்த தமிழ் கூறும் நல்லுலகத்தில் வாழ்ந்த சங்ககாலப் பெண்டிரை உணர்த்துவது இக்கட்டுரை.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த பெண்களைப் பற்றியது. பண்டைக்காலத்தில் பெண்கள் நிலை என்? எவ் வாறு நடத்தப்பெற்றனர்? அகத்திணை இலக்கணம் வகுத்த ஒல்காப்புகழ் தொல்காப்பியனார் முதல் இறையனார் ஈருனர் பெண்மை அறத்தையே பேணிப் பேணிப் போற்றியுள்ளனர். பண்டைய இலக்கியங்கள் யாவும் கவிஞன் கண்டு, அறிவால் உணர்ந்து எழுதிய உயரிய பண்பின் செல்வங்களே. இஃது யாவரும் ஒப்ப முடிந்த உண்மை. கவிஞனுடைய இலக்கணத் தைப் பேசமுனைந்த William wordsworth என்ற ஆங்கிலப் புலவன் தான் எழுதிய Lyrical Ballads என்ற ஆங்கிலத் திறனய்வுநூலில் இதேகருத்தை திறம்பட விளக்கியிருக்கின்றான். பண்டைத் தமிழ் மக்களின் நித்தல் வாழ்க்கையைத் திறம்படப் பேசுவதே நமது இலக்கியத்தின் பண்பு. அக நானூற்றுப் பாக்கள் அனைத்தும் அகத்திணை ஆயினும் ஒவ்வொரு பாட்டிலும் ஒவ்வொரு செல்வத்தைக் காணுகின்றோம். அகத்திணை ஏழு என்பதும் அவற்றுள் நடுவணவாய ஐந்திணையே போற்றப்பட்டன என்பதும் அகத்திணைகட்குரிய முதல், உரி, கருப்பொருள்களை யும் தமிழ் இலக்கணங்கள் காட்டுகின்றன. திணைக்குரிய கருப் பொருளைக்கூற முனைந்த தொல்காப்பியனார்,

"புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குறிப் பொருளே"

— தொல், பொருள், அகத், 14

என்றார்.

இவ்வாறெல்லாம் விரிந்த முறையில் தமிழ்ப் புலவர்கள் இலக்கணம் வகுத்திருக்கின்றார்கள். இதனை அறியாதவர்கள் "தமிழ்ச் சங்க இலக்கியங்கள் யாவும் தலைவன், தலைவி, தோழி இந்த மும்மூர்த்திகளின் மோகன நாடகமே முக்காலேவீசம்" என்று திராவிட இயக்கங்களும் கத்தோலிக்கர்களும் என்ற நூலில் ஆசிரியர் கூறுகின்றார். பழங்காலத்துப் புலவர் பெருமக்கள் பாடிய பாக்களெல்லாம் வெறுங் காதலை மட்டும் குறிப்பவை அல்ல. அவற்றின் உரிப்பொருள் ஒன்றாக இருக்க அதன் மூலம் புலவர்கள் வாழ்க்கையின் பல திறப்பட்ட உண்மைகளையே விளக்கினார்கள்.

"நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
பறை யறைந்தல்லது செல்லற்க வென்னா
இறையே தவறுடை யான்" — கலி. 56

எனவரும் அகத்துறை இலக்கியத்தில் காதலா விரித்துரைக்கப் படுகின்றது? தமிழ்த்தாயின் நோயற்ற மைந்தனுடைய வீர மன்றோ எடுத்தோதப்படுகின்றது.

"முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்" — நற். 355

"பேதை மையாற் பெருந்தகை கெழுமி
நோதகச் செய் தோன்றுடையேன் கொல்லே"
— குறுந். 230

"வலம்படு முரசின் சேரலாதன்
முந்நீரோட்டிக் கடம் பறுத்திமையத்து
முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து"
— அகம். 127

இந்த அடிகளிலும் சேரனுடைய புகழையே காணுகின்றோமே தவிர காதலின் நாடகத்தையா காண்கின்றோம்?

"இல்லது நோக்கி இளிவரவு கூறுமுன்
அல்லது வெஃகி வினை செய்வார்" — பரி. 87-88

இவைபோன்ற பிற அகத்துறை இலக்கியங்கள் யாவும் அகப் பொருட் கருத்துக்களைப் பாடியிருப்பினும், பொருள்கள் யாவும்

நீதி நெறி பிறழாமல் செல்லுகின்றன என்று உதாரணங்கள் வாயிலாகத் தெரிந்து கொண்டோம். சுற்றத்தைப் பேணுகின்ற பண்பு அகத்திணை இலக்கியங்களில் பரக்கக் காணலாம். அது நம்முடன் கூடப்பிறந்த பண்பு. இதோ அகநானூறு காட்டுகின்றது.

" நல்கு நர் ஒழித்த கூலிச் சில்பதம்
ஒடிவை இன்றி ஓம்பாது உண்டு ' — அகம். 301

அதியன் விண்ணத்தனுர் பாடிய பாட்டின் அடிகளாகிய இவை களிற்றுன் சுற்றம் பேணும் பண்பு எவ்வளவு உயர்ந்து காணப் படுகின்றது? இல்லென இரந்தோர்க்கு ஒன்றும் ஈயாமை இழிவு என்ற இப் பண்பன்றோ தலையாய பண்புகளுள் ஒன்று. " பண்டைத்தமிழ்ப் புலவர்களுக்கு அகப்பொருள் என்றால் காதல் ஒன்றே கண்ணிலும், கருத்திலும் தோன்றி யிருக்கிறது, என்ன ஆபாசம் " — என்பது திராவிட இயக்கங்களும் கத்தோலிக்கர் களும் என்ற புத்தக ஆசிரியரின் மற்றொரு புதிர். இவர்களைப் போன்றவர்களை நினைத்துத்தான்,

" அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளப்பின் "
— தொல். புறத். 1

அகப்பொருளை முறையாக உணராதவன் புறப் பொருளை நன்கு உணரமுடியாது என்று புறத்திணை இலக்கணம் கூற முனைந்த தொல்காப்பியனுர் காட்டுகின்றார். அகத்துறை இலக்கியங்களில் பலநீதிச் செய்யுள்கள் இருக்க, இதை ஆபாசம் எனக் கூறும் ஆசிரியரைப்பற்றி யாது கூறுவாம்? பழங்காலத்தில் குடும்ப வாழ்க்கை குலைந்திருந்தது என்பதும் ஆசிரியருடைய கொள்கை. இவர் கருத்துப்படி நோக்கின், பிசிராந்தையார் தம் இல்லக் கிழத்தியைப்பற்றிக்கூற முனைந்தவர்,

" மாண்ட என்மனைவியோடும் மக்களும் நிரம்பினர்
யான்கண்டனையர் என் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் " — புறம். 192

என எப்படிப் பாடியிருக்க முடியும்? பண்டை அரசர்கள் அறத்தின் வழியே அரசு ஓம்பினர் என்பது சங்க இலக்கியங்களில் பரக்க வழங்கிய செய்தி.

"அன்பும் அறனும் ஒழியாது காத்து"

— மதுரைக்காஞ்சி 497

"அறிநேறி பிழையா தாற்றின் ஒழுக்கி"

— மதுரைக் கலம்பகம் 500

"மாண்ட, அறநேறி முதற்றே அரசின் கோற்றம்"

— புற. 55

பிற்காலத்து வந்த (11ம் நூற்றுண்டு) சேக்கிழார் பேருமானும்,

"அரசியல் நேறியின் வந்த அறநேறி வழாமறகாத்து"

— மேய். 2

என்று கூறுகின்றுர். பேண்ணின் பேருமைகளைப் பேசும் இலக்கியங்களே அகத்துறை இலக்கியங்கள். பேருங்கோப் பேண்டு போன்ற அரசியர்; பேய்மகள், இளவேயினிபோன்ற வேட்டுவ மகளிர்; காவற் பேண்டுபோன்ற சேவிலித்தாயர்; வேண்ணிக் குயத்தியர் போன்ற தமிழ்த்தாயின் திருநிறைச் சேல்வியர் தமிழக மகளிர்களுக்கு அளப்பலா ஆகாயத்திற்குத் திங்கள் ஒளி சேய்துகோண்டு இருப்பது போல, பேண்மை அறத்திற்கு சிறந்த கருவூலமாகக் காட்சியளிக்கின்றுர்கள். இவைகளே அகத்துறை காட்டும் சேந்நேறி.

நிந்தாஸ்துதி

11. வருவாயோன் றில்லாதுன் பேரியமகன் குந்தி யுண்டு வறட்டிஞனே, கருதாதுன் னிளையமகன் கலியாண மிரண்டுசேய்து கடன்வைத் தானே, வோருவாதுன் மனைவியேனுன் கறஞ்சேய்து சேய்துசிறை யுணவிட்டாளோ, திருவாரூர்த் தியாகேசா நீயிரக்கப் புறப்பட்ட சேய்தி யேன்னே.

12. நிலந்தருவன் றிருமாலோ ரேருதுனக்குண் டேமன்பகடு நினக்கு மீவன், அலந்தருவன் பலராமன் விதைதருவ னிதிபதி கார்க் காகுஞ்சூலம், சலந்தருமுன் றலைமனைவி களைகளைவள் உழுமாடு தனையன் மேய்ப்பன், புலங்காப்பள் வள்ளி யையம்புகல் விட்டுப் பயிர்சேய்திருப் புகலூர்த் தேவே.

கருத்தும் எழுத்தும்

திருமதி. ம. ஸ. இரேவதி,

ஐந்தாம் படிவம், தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலயத்
தேவார வகுப்பு மாணவி, மதுரை.

சுருங்கச் சொல்லல் என்பது தமிழ் மொழியில் " நூலிற்கு அழகெனும் " பத்தில் முதன்மையாகக் கருதப்பட்டிருக்கிறது. பொருட் செலவில் ஆடவரிலும் மகளிரே சுருக்கமுடையவர். அதுபோன்று சொற்செலவிலும் மகளிரே சுருக்கமுடையவர் என்பதை ஒருவாறாகக் கூறலாம். இக்கூற்று தமிழ்க்கிழவியரான ஔவையாரின் அளவில் நன்கு பொருந்தும். ஏனெனில் திருக்குறளின் சிறப்பைக் காட்ட எண்ணிய இடைக்காடர்,

" கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள் "

(திருவள்ளுவமாலை)

என வரைந்தார். ஆனால் இதே திருக்குறளைக் கடுகு, எள் முதலியவற்றுக்கு ஒப்பிட விரும்பாமல், அவ்வம்மையார்,

" அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள் "

என வரைந்தார். ஈண்டு, பகுத்தற்காகாத அணுவுக்கே அந்த நூலை ஒப்பிட்டது குறிப்பிடத்தக்கது. ஔவையாரின் சுருங்கச் சொல்லல் என்பதின் கருத்துப்பற்றி இங்கு ' ஆறுவது சினம் ' என்னும் சொற்றொடரின் கருத்தைப்பற்றி ஆய்ந்தறிவோம்.

ஆறுவது சினம் என்னும் தொடர் ஆறும் தன்மையது சினம் என்று பொருள்படும். இப்பொருள் வெளிப்படையாகத் தெரியும் படி ஆறுவது சினம் என்று கூறியுள்ளார் ஔவையார். தானே ஆறும் தன்மையை உடைய சினத்தை ஆறவிடாமல் வெம்மை சேர வைத்திருத்தல் அறிவுடைமை ஆகாது என்னும் பொருள் படும்படி முன்றுரையரையனார் தம் பழமொழி நானூறு என்னும் நூலில் வரைந்துளது யாதெனில்,

"ஆருச் சினத்தன் அறிவிலன் மற்றவனை
மாறி ஒழுகல் தலையேன்ப—ஏறி
வளியால் திரையுலாம் வாங்குநீர்ச் சேர்ப்ப
தேளியானைத் தேறல் அரிது"

என்பதாம்.

இதே கருத்துக்களைக்கோண்ட நாலடியார் வேண்பா ஒன்று ஓர்தற்குரியது. அவ்வேண்பா,

"நேடுங்காலம் ஓடினும் நீசர் வேகுளி
கேடுங்காலம் இன்றிப் பரக்கும்—அடுங்காலை
நீர்கோண்ட வேப்பம்போல் தானே தணியுமே
சீர்கோண்ட சான்ருேர் சினம்"

என்பது. இச்சேய்யுளின் பிற்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உவமையில் ஒரு நுண்ணிய கருத்து அமைந்துள்ளது.

நீரைக் கோதிக்கவைக்கும்போது நீர் மேல்ல மேல்லவே வேப்பமடையும். ஆயின் ஆறுங்கால் விரைவில் ஆறிவிடும். அதுபோல் சான்ருேர் நேர்பாடுற்றபோது பையப்பையவே சினம் கோள்வர். எனினும் அச்சினம் விரைவில் தணியப்பேறுவர். கதம், வேகுளி, சீற்றம் முதலியன ஒரே போருளில் வருவன எனினும் விரைவில் ஆறும் தன்மையது சினம் என்பதால்தான் கிழவியார் சினம் என்பதை எடுத்தாண்டுள்ளார்.

நிந்தாஸ்துதி

13. தக்கபுகழ் மீனவிழித் தையலேன்ன தனைமணந்தா டகையோ வந்தச், சக்களத்தி யூரழிப்பே னெனக்கங்கை போங்கி வரத் தடுப்பேனென்று, சோக்கநீ யரைச்சோமன் றலைக்கணிந்து மண்சுமந்து சூடுண்டாக, மிக்கவடி பட்டதைக்கண் டுளம்வேருவிச் சினமோருவி மேலிவுற்ருளே.

14. பாடலணி மூவருக்கு மிலையேனச்சோல் லாதுசேம்போன் பயந்திளைத்தோ, கோடலுறு பத்திரனுக் கன்ருடந் திருடியும் போன் கோடுத்திளைத்தோ, ஈடறுநண் பனைக்கேட்ப தியைவலவேன் ருேவேற்ப திகழ்ச்சி யேன்ருே, கூடலணி வீதியிலே விறகுவிற்க வந்தனையேண் குணத்தேங் கோவே.

கந்தாநுபூதி

'சித்தாந்த சிரோமணி'

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் முருகக்கடவுளை வழிபட்டு வீடுபேற்றவருள் மிகச் சிறந்தவர்கள். அவர்களருளிய நூல்களுள் அநுபூதிவாய்ந்த பின்னர்ப் பாடியருளியது இக்கந்தாநுபூதி. இந்நூலை ஆராயும் முறையில் ஆசிரியர் பெருமையுணர்த்துவதே அடியேன் நோக்கம்.

இந்நூலில், மரபு பிறழாமல் உயிர்கள் உய்யுமாறுணர்த்திய பாக்களும் தாம் அடைந்த உண்மையை உணர்த்திய பாக்களும் விரவியுள்ளன. முதல் வகையைச் சார்ந்தவை சுவாமிகட்கும் ஏற்றவை எனக் கோள்ளல் போருந்தாது. அநுபூதி பேறுமுன் அவை அவர்க்கும் ஏற்றனவாயிருக்கலாம். பேற்றபின் ஏற்றுதல் பாவந்தரும்.

முதல்வகையிற் சேரும்பாக்கள் பின்வருமாறு பல பிரிவாலுணர்த்தப்படும். அவை இவை :-

(1) ஆசையருமைக்கு வருந்துதல், 4, 9, 16, 24, 25, 27, 29, 33, 39, 50.

(4) வளைபட்டகை மாதொடு மக்களெனுந் தளைபட்டழியத் தகுமோ? தகுமோ?

(9) மட்டூர் குழல் மங்கையர் மையல் வலைப்பட்டுசல்படும் பரிசென்றொழிவேன்?

(24) கூர்வேல் விழிமங்கையர் கொங்கையிலே சேர்வேனருள் சேரவுமெண்ணுமதோ? தகுதிகட்டிற்கு உண்மையும் வீட்டிற்கு இன்மையும் இது கூறுகின்றது.

(33) சிந்தாகுல இல்லொடு செல்வமெனும் விந்தாடவி என்று விடப்பெறுவேன்?

(16) பேராசையெனும் பிணியிற் பிணிபட்டு ஓராவினையே னுழலத்தகுமோ?

(25) மெய்யே என வெவ்வினை வாழ்வை உகந்து ஐயோ அடியேனலையத்தகுமோ?

(27) மின்னே நிகர்வாழ்வை விரும்பிய யான் என்னே விதியின் பயன் இங்கிதுவோ?

(29) இல்லே எனும் மாயையில் இட்டனை நீ பொல்லேன் அறியாமை பொறுத்தலையே!

(39) மாவேழ் சனனம்கெட மாயை விடா மூவேடணை என்று முடிந்திடுமோ?

(50) மதிகெட்டற வாடி மயங்கி, அறக்கதிகெட்டு, அவமே கெடவோ கடவேன்?

இவை நம் சுவாமிகளுக்கு இல்லை என்பதற்குத் தக்க சான்ருவன:-

(40) வினையோட விடுங்கதிர்வேல் மறவேன் (ஆகிய அடியேன்) மனையோடு தியங்கி மயங்கிடவோ? என்றதறிக.

(5) மகமாயை களைந்திட வல்லபிரான்
முகமாறு மொழிந்து மொழிந்திலனே
அகமாடை மடந்தைய ரேன்றயருஞ்
சகமாயையுள் நின்று தயங்குவதே.

என்றதால் அவர்க்கு உலகமாயை ஒழியவில்லை என்று நினைக்க லாம். அதற்கு நான்காவது பாட்டில்.

(8) அமரும் பதிகேள் அகமா மெனும் இப் பிமரங் கெட மெய்ப் பொருள் பேசியவா என்றதால் மெய்ப்பொருள் உபதேசம் பெற்றதும் அம்மாயை ஒழிந்தமை உணர்த்தப் படுகின்றதறிக. மூன்ருவது பாட்டில் ‘ எனையாண்ட இடந்தானே ’ என்று ஆண்ட உண்மை அருளப்பட்டது.

(43) தூசாமணி யுந்துகி லும் புனைவாள்
நேசாமுரு காநின தன்பருளால்
ஆசாநிக ளந்துக ளாயினபின்
பேசாஅநு பூதி பிறந்ததுவே. என்றவர் (50,ல்)

(50) "மதிகெட்டற வாடிமயங்கி அறக்கதிகெட்டு அவமே கெடவோ கடவேன்" என்றால், அந்நிலை சுவாமிகட்கு உரிய தேனல் நமக்குப் பாவத்தையன்றோ ஆக்கும்?

"குமரா சரணம் சரண மென்றண்டர் குழாந் துதிக்கும்
அமராவதியிற் பெருமாள் திருமுகம் ஆறுங்கண்ட
தமராகி வைகுந் தனியான ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்ட கடையேடு வந்தினி யென்செயுமே."

என்ற (87)

அலங்காரத்தில், சண்முக தரிசனம்பெற்ற குகபத்தராயும்: ஞான தபோதனராயும், எமனை வென்றவராயும் உள்ள இவர்.

(6) "திணியான மனோசிலை மீதுனதாள்
அணியா ரரவிந்தம் அரும்புமதோ."

என்றால், அவர்க்கோ! நமக்கோ! நோக்குங்கள்.

(102) "திருவடி யுந்தண்டை யுஞ்சிலம் பும்சிலம் பூடுருவப்
பொருவடி வேலுங் கடம்புந் தடம்புய மாறிரண்டு
மருவடி வான வதனங்க ளாறும் மலர்க்கண்களுங்
குருவடிவாய் வந்தென் உள்ளங் குளிரக்
குதிகொண்டவே"

(22) "காளைக்கும ரேச னெனக் கருதித்
தாளைப்பணி யத்தவ மெய்தியவா"

என்று திருவடியைச் சிந்தையிற் கொண்டவாற்றை உணர்த்திய சுவாமிகள், 'திணியான மனோசிலைமீது உனதாளணியாரரவிந்த மரும்புமதோ' என்றும்.

(23) "அடியைக்குறி யாதறி யாமையினுன்
முடியைக் கெட வோமுறை யோமுறையோ"

என்றும் அழ அன்றோ தூண்டுகின்றார்?

(2) இரக்கம் உணர்த்தும் வினக்கள் :- 4, 5, 6, 16, 23, 25, 27, 28, 31, 40, 45.

(4) அழியத்தகுமோ தகுமோ ?

(5) தயங்குவதே ஒழிந்திலனே ?

(6) அரவிந்தம் அரும்புமதோ ?

(16) உழலத் தகுமோ?

(23) நான் முடியக் கெடவோ முறையோ முறையோ ?

(25) ஐயோ அடியேன் அலையத்தகுமோ?

(27) என்னே விதியின் பயன் இங்கு இதுவோ?

(29) பொல்லேன் அறியாமை பொறுத்திலையே?

(31) பாழ் வாழ்வெனும் இப் படுமாயையிலே 'வீழ்வாய்' என 'என்னை' விதித்தனையே ? தாழ்வானவை செய்தன தாம் உளவோ ? 'வாழ்வாய்' இனி நீ மயில் வாகனனே !

(40) மனையோடு தியங்கி மயங்கிடவோ ?

(45) கரவாகிய கல்வியுளார்கடை சென்றிரவாவகை மெய்ப்பொருளீகுவையோ ? (இதனால், அவர்காலத்தில் இவ் வழக்கம் உண்மை அறியலாம்), இஃது

" யாமோதிய கல்வியும் எம் அறிவும்
தாமேபெற வேலவர் தந்ததனாற்
பூமேல் மயல் போயற மெய்ப் புணர்வீர்
நாம் ஏன் நடவீர் நடவீர் இனியே" (17)

என்றவர்க்கு இல்லை. நமக்கே எனல் நன்கு விளங்கும்.

(32) 'கலையே பதறிக் கதறித்தலையூடலையே படுமாறதுவாய் விடவோ' என்றதும் ஈண்டெண்ணுக. இதற்கு முன்பே

'மல்லேபுரி பன்னிரு வாகுவில் என்
சொல்லே புனையுஞ் சுடர் வேலவனே' (29)

என்றதும் உணர்க.

'பலபல பைம்பொற் பதக்கமாரமும்
அடிமை சொலுஞ் சொற்றமிழ்ப் பனீரோடு
பரிமளமிஞ்சக் கடப்பமாலையு மணிவோனே'

(3) வரங்கேட்கும் வகை யுணர்த்தல்

(அ) துயரறுக

(46) "எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந்தாகுல மானவை தீர்த்தெனையாள்
கந்தா கதிர் வேலவனே உமையாள்
மைந்தா குமரா மறை நாயகனே"

(ஆ) மயலறுக

(34) "சிங்கார மடந்தையர் தீ நெறிபோய்
மங்காமலெனக்கு வரந்தருவாய்

(இ) பயமறுக

(10) "கார்மாமிசை காலன் வரிற் கலபத்
தேர்மாமிசை வந்தெதிரப் படுவாய்
தார்மார்ப 'வலாரிதலாரியெனுஞ்
சூர்மா' மடியத்தொடு வேலவனே"

(வலாரி தலம் - தேவருலகு)

(41) "சாகாதெனையே சரணங்களிலே
காகா நமனார் கலகஞ் செயும்நாள்
வாகா முருகா மயில் வாகனனே
யோகாசிவ ஞானொப தேசிகனே"

இரண்டிலும் மயில் வாகனம் மரணபயத்தை யொழித்தலைக் குறித்தார்.

'மரணப்ரமாதம் நமக்கில்லையாம் என்றும் வாய்த்ததுணை கிரணக்கலாபியும் வேலுமுண்டே' (21) என்றதோடும் பொருத்தி யுணர்க. (ஒலையுங்........ சேவற் பதாகையும் தோகையும் வாகையுமே (27) படிக்குந் திருப்புகழ் மயிலேறு மிராவுத்தனே)

(50) 'வேட்டுங்கடாமிசை .... கலாப மயூரத்தனே' (65) (இசைந்த ஏறும் ... அசந்தபோதேன் துயர்கேட மாமயில் வர வேணும்) 1077

(ஈ) பாடப்பேறுக

(1) " ஆடும் பரிவேல் அணிசேவ லெனப்
பாடும் பணியேபணியா அருள்வாய் "

(உ) உருகப் பேறுக

(15) " முருகன் குமரன் குகன் என்றுமொழிந்
துருகுஞ் செயல் தந்துணர் வென்றருள்வாய்"

(ஊ) மேய்ப்பொருள் பேறுக

(45) "கரவாகிய கல்வியுளார் கடை சென்
றிரவாவகை மெய்ப்பொரு ளீகுவையோ "

(எ) குருவாய் வருதற்கு வேண்டுக

(51) "உருவாய் அருவா யுளதாயிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"

(ஏ) அக் குருவருள் பேறுக

(26) "ஆதார மிலேன் அருளைப் பெறவே
நீதானொரு சற்றும் நினைந் திலையே
வேதாகம ஞான விநோத மனோ
தீதா சுர லோக சிகாமணியே"

(ஐ) திருவருள் பேறுக

(21) "கருதா மறவா நெறிகாண எனக்
கிருதாள் வனசந்தர என்றிசைவாய்
வரதா! முருகா! மயில் வாகனனே!

(35) விரதா! சுர சூரவிபாடணனே விதிகாணுமுடம்பை
விடாவினையேன் கதிகாண மலர்க்கழல்
என்றருள்வாய்?

(ஒ) வீடு பேறுக

(47) "ஆருறையு நீத்ததன் மேனிலையைப்
பேரு அடியேன் பெறுமாறுளதோ
சீருவருசூர் சிதைவித்திமையோர்
கடனுவுலகங் குளிர்வித்தவனே"

இதில் பின்னீரடியில் பாச நீக்கமும் சிவப்பேறுங் குறிப்பாலுணர்த்தியவாறுணர்க.

இவற்றை நன்கு நோக்கின், இவை நமக்கே உணர்த்திய உபதேசங்கள் எனல் இனிது விளங்கும்.

(தொடரும்)

நிந்தாஸ்துதி

15. கருதரிய திருநீல கண்டன்மனை யோடோளித்த களவு நன்கு, பெருகுமமர் நீதியிடங் கோவணம் போக்கிய களவும் பேட்பாலாய, னுருவினிற்றன் னுயிரளித்தா னுடவோளித்த களவுமுமைக் கோருவனேநீ, இருவிசும்பி னதிமகளைச் சிரத்தோளித்த பேருங்களவுக் கிணையாகாதே.

16. மலரவனே தலையறுந்து சேயவாரா தவன்றேழிலை மறந்தே விட்டான், சுலவுபடைபோய் வலிபோய்த் தோழில் போய்ப் பாற்கடல் போய் மால் தூங்குகின்றன், உலவுமுருத் திரனே வுன்னுற்றல் கண்டு தன்றேழிலு முனக்கே தந்தான், குலவுறுமுத் தோழிலுநீ யலதேவர்சேய் பவர்தணிகைக் குமரவேளே.

17. பார்ப்பதிதா யானதுவும் பகிரதிபால் வளர்ந்ததுவும் பலம்பேற் றுள்ள, சூர்ப்பகையை விளித்ததுவும் சுரர்க்குநக ரளித்ததுவும் சுரர்கோன்றந்த, சீர்க்கோடியை மணந்ததுவும் திருத் தணிகை யமர்ந்ததுவுஞ் சிறப்பஃதேல்லாம், தோறபவனக் குரவர் குலத் தோகையைநீ மணந்ததேன்ன சோல்லுவாயே,

அந்தணர் என்போர் அறவோர்

திரு. ம. வெ. மு. நாகராஜ குருக்கள் அவர்கள்,
சிறுதையூர், லால்குடி.

எல்லா உயிர்களிடத்தும் கருணை பூண்டொழுகுபவரே அந்தணர் எனப்படுவர். கருணை எனும் பண்பு அன்பினிடத்துத் தோன்றியதாகும். உள்ளத்தின்கண் நிகழும் உவகையே அன்பு, ஆதலால் உள்ளத் தூய்மையில்லாவொருவன் பிறவுயிர்கள்பால் கருணை கொண்டிருக்க முடியாது. ''பிறர் செல்வாக்கு கண்டு பொருமைப்படுதல், கோபம் கொள்ளுதல், இழிவான வார்த்தைகளைப் பேசுதல், உள்ளொன்றுவைத்துப் புறமொன்று பேசுதல், எல்லா நலன்களையும் தான்மட்டும் அநுபவிக்க ஆசைப்படுதல், முதலிய துர்க்குணங்கள்'' உள்ளத்தூய்மை உடையாரிடம் காண முடியாது. காமம், வெகுளி, மயக்கமாகிய பகைகளை வென்று நான், எனதென்னும் செருக்கற்று, பிறர் துன்பத்தைத் தன் துன்பமாகப் பாவித்து, நீதிசாஸ்திரங்களில் கூறியவாறு ஒழுக்கத்தில் சிறந்து விளங்குபவரே அந்தணராம். இக்கருத்தை இதிகாசங்களிலொன்ருகிய மஹாபாரதத்தில் காணலாம்.

முன்னொரு காலத்தில் கௌசிகர் என்னும் பெயருடைய அந்தணர் ஒருவர் இருந்தார். ஒருநாள் அவர் வழக்கம்போல் ஓர் மரத்தடியில் தவத்திலிருக்கும்போது, அம்மரத்தின்மீதிருந்த ஓர் பெண் கொக்கு அவர்மேல் எச்சிமிட்டது. கௌசிகர் தலை நிமிர்ந்து பார்த்தமாத்திரத்தில் அக்கொக்கு எரிந்து சாம்பலாகி விட்டதைக்கண்டார். கண்டு தன்தவச்சிறப்பால் பக்ஷி இறந்தது பற்றி மனம் வருந்தினர். இது கழிந்த சில நாட்களுக்குப் பிறகு அத்தபோதனர் அருகிலிருந்த ஓர் கிராமத்துக்குச் சென்று பிக்ஷைபெறுவதற்காக ஓர் வேதியன் வீடேகினர். ''பவதி பிக்ஷாம்தேஹி'' என்று கேட்டவுடன் வீட்டு வேலையில் ஈடுபட்டிருந்த பெண்ணொருவள் ''சற்று பொருத்திருங்கள்'' என்று கூறிவிட்டு பூஜைக்குரிய பாத்திரங்களை சீக்கிரமாகத் துலக்க ஆரம்பித்தாள். கௌசிகர் பொறுத்திருந்தபொழுது, அங்கு அப்பெண்ணின் கணவன் வந்துவிடவே, அப்பெண் கணவனின் கால் கழுவி, புருஷனை உள்ளழைத்துச் சென்று உபசரிக்க ஆரம்பித்துவிட்டாள். இதையெல்லாம் அங்கிருந்து

கவனித்த கௌசிகர், மிகக்கோபங்கொண்டு "என் தவவலிமை யறியாத இப்பெண் என்னை இவ்வளவு காலம் காக்கவைத்து விட்டாளே" என நினைந்துபார்க்க, அங்கு வந்த அப்பெண்மணி "ஐயா, என்னையும் கொக்கென்று கருதினீரோ; இன்னும் சற்று நேரம் இருங்கள்; வருகிறேன்" என்று சொல்லியதைக்கேட்டு திடுக்கிட்டு நிர்மானுஷ்யமான மரத்தடியில் நடந்த செயலை இம்மாது அறிந்தது எப்படி? என்று ஆலோசனையிலாழ்ந்த காலத்து அம்மாது சிரோமணி பிக்ஷை கொண்டுவரவே, அம்மா, தாங்கள் இந்தக் காரியத்தை எப்படி அறிந்தீர்கள்; என்று கேட்கலாயினர்.

பதிவிரதாதர்மத்தால் அறிந்தேனென்று சொல்லியதுடன் இன்னும் அந்தணர்க்குரிய அறங்களையும் கூறலாயினள் அம்மகளிர். அம்மகளிர் கூறியதாக உள்ள சுலோகங்கள் மஹாபாரதம் ஆரண்ய பர்வாவில், தர்மவியாதோபாக்கி யானத்தில் காணப்படுகின்றன. பொதுவாக நல்லன இவை தீயன இவையென அறிந்து நல்லனவற்றை மனம், மொழி, மெய்களாற் கடைப்பிடிக்க விரும்புவோர்க்குப் பயன்படுமென நினைந்து சுலோகங்கள் சிலவற்றையும் அதன் பொருளையும் இங்கு எழுதுகிறேன்.

क्रोधःशत्रुशरीरस्थो मनुष्याणां द्विजोत्तम ।
यःक्रोधमोहौ त्यजति तं देवा ब्राह्मणं विदुः ॥

பிராமணனிற் சிறந்தவரே; மனிதர்களுக்குக் கோபம் என்பது சரீரத்திலுண்டாகிய சத்ரு (பகை) எவன் கோபம், மோஹம் இவைகளை விடுகின்றானோ அவனை தேவர்கள் பிராமணன் என்று அறிகிறார்கள்.

यो वेदेदिदसत्यानि गुरुं सन्तोषयेत च ?।
हिंसतिश्च न हिंसन्ति तं देवा ब्राह्मणं विदुः ॥

எவன் எப்பொழுதும் உண்மையான வார்த்தைகளையே பேசுவானோ, எவன் குருவை சந்தோஷிக்கச் செய்கிறானோ, பிறரால் தனக்கு தீங்கு நேர்ந்தவிடத்தும் தான் பிறருக்குத் தீங்கு செய்யாது நன்மையே செய்வானோ அவனே பிராமணன்.

जितेन्द्रियो धर्मपरःस्वाध्यायनिरतश्शुचिः ।
कामक्रोधवशे यस्य तं देवा ब्राह्मणं विदुः ॥

புலன்களை வென்றவனும், தர்மத்திலீடுபட்டவனும், வேத மோதினவனும், எப்போழுதும் பரிசுத்தனும், எவனுக்கு காமம் (ஆசை) கோபம் (சினம்) இவைகள் அடங்கியுள்ளனவோ அவனும், பிராமணன் என்று தேவர்கள் அறிகிறுர்கள்.

यस्य चात्मसमो लोको धर्मज्ञस्य मनस्विनः ।
सर्वधर्मेषु निरतःतं देवा ब्राह्मणं विदुः ॥

அறனறிந்த மனத்துடன் கூடிய எவனுக்குத், தானும் உலகமும் ஒப்ப இருக்கும் உளநிலை உளதோ, எவன், எல்லா தர்மங் களிலும் ஈடுபடுகிருனே, அவனை பிராமணன் என அறிகிறுர்கள் தேவர்கள்.

योऽध्यापयेदधीयीत यजेद्वा याजयेत वा ।
दद्याद्वापि यथाशक्ति तं देवा ब्राह्मणं विदुः ॥

எவன் (வேதங்களை) ஓதியும், பிறருக்கு ஓதுவித்தும், இருக் கிருனே, தான் யாகம் செய்தும் பிறருக்கு யாகம் செய்விக் கிருனே, அந்த பிராமணனை தேவர்கள் அறிகிறுர்கள்.

இன்னும் தொடர்கிறது அம்மகளிர்கூறிய உபதேசங்கள். இருப்பினும் இத்துடன் இது நிற்க, மேலே ஆராய்வோம். ஒருவாறு அந்தணர்க்கு வேண்டுவனவற்றை விளம்பிய அம்மங்கையர்திலகம், நீர் தர்மத்தை நன்கு அறிய விரும்பினுல் மிதிலைநகரில் வேடஜாதியிற் பிறந்த "தர்ம வியாத" னென்னும் பெயருடைய மஹான் ஒருவர் இருக்கிறுர்; அவரிடம் சென்று அறிந்துகொள்ளுங்கள் என்று தவவேதியரை அவ்வேடனிடம் அனுப்ப அவரும் அங்கு சென்று அவ்வேடனைக்கண்டு அவன் பெருமையறிந்தனர். அதன் பிறகு வேடனைப்பார்த்து கௌசிகர் கூறியதாக உள்ள சுலோகங்களும் மஹாபாரதத்திலுள்ளன. முன்னர்க் கூறிய சுலோகங்கள் தவச் செருக்குற்ற தவ வேதியராகிய கௌசிகருக்கு ஒரு மகளிரால் கூறப்பட்டன, சினமொழிந்து மெய்யுணர்வுபெற்ற கௌசிகரால் தம்முள்ளத் துணர்ச்சியை உள்ளவாறு வேடன்பால் மொழிந்தமையைக் கீழ்க்காணும் சுலோகங்களால் அறியலாம்.

सांप्रतं च मतो मेऽसि ब्राह्मणो नात्र संशयः ।
ब्राह्मणःपतनीयेषु वर्तमानो विकर्मसु ॥
दांभिको दुष्कृतःप्रायःशूद्रेण सदृशो भवेत् ।
यस्तु शूद्रो दमे सत्ये धर्मे च सततोत्थितः ।
तं ब्राह्मणमहंमन्ये वृत्तेन हि भवेद्द्विजः ॥

" இப்பொழுது நீ என் முன்னால் பிராமணனாகவே மதிக்கப் படுகிறாய்; இதில் சந்தேகமில்லை. அந்தணன் தம்முயர்ந்த நிலையைவிட்டு மிகவும் தாழ்ந்த நிலையடைவதுடன் ஆடம்பரமாக இருந்து செய்யக்கூடாத தீய காரியங்களைச் செய்வானேயாகில் சூத்திரனுக்கு ஒப்பாவான். எந்தச்சூத்திரன், பொறுமை, உண்மை, தர்மம் இவைகளால் உயர்ந்து விளங்குகிறானோ, அவனை நான் பிராமணனாக எண்ணுகிறேன். நல்ல செயல் களினாலே அந்தணனாகின்றானன்றோ !" என்று கூறிய கௌசிகர் உள்ளத்தின் உயர்வு நன்கு விளங்குகிறது. இதிலிருந்து " பொறுமை, அவாவின்மை, வாய்மை, குருபக்தி, கோல்லாமை. புலனடக்கம், தேகசுத்தி, உலகத்தோடொப்ப வாழ்தல், அறவுணர்வு, ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல் ஆகிய நற்பண்புகள் அந்தணர்க்கு வாய்ந்திருக்கவேண்டு மேன்பது பேறப்படும்.

" அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சோல்,
இன்னான் கினையும் ஒழிப்பதே "

அறமேன்பதை,

" அழுக்காறு அவா வெகுளி யின்னாச் சொன் னான்கு
மிழுக்கா வியன்ற தறம் "

என்னும் திருக்குறளாலும், கற்ற வேதத்தை மறந்தாலும் பின் அவ்வேதத்தை ஓதிக்கோள்ளலாம். ஆனால் தன் ஒழுக்கம் தவறாது பாதுகாக்கப்பட வேண்டுமேன்பதை,

" மறப்பினு மோத்துக் கோளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும். "

என்னும் குறளாலும் குறிக்கப்பட்டமை ஒப்புநோக்குதற்குரியது.

ஒழுக்கத்தின் உரு

வித்துவான், திரு. சு. கண்ணன் பி. ஏ., அவர்கள்,

குடந்தை.

இல்லறத் துறையில் இறங்கி வாழ்க்கை நடத்துவோருக்கு கற்பு அவசியம் வேண்டற்பாலது. கற்பென்பது மாதர்க்கணி கலம். கற்பெனும் கலங்கா நிலைமை, மனத்திண்மை பெண்ணிடம் ஏற்படவேண்டும். அவ்விதப் பெண்டிரைவிட உலகிலே சிறந்த பொருள் ஒன்றும் இல்லை என்று வள்ளுவர் கூறுகிறார்.

"பெண்ணின் பெருந்தக்க யாவுள? கற்பெனும்
திண்மை உண்டாகப் பெறின்."

பெண்டிர்கள் தமது மன உறுதியினால் தங்களது நிறையைக் காத்துக்கொள்ள வேண்டும். இன்றைய சமூகம் அவ்விதம் கற்பைக் காக்காது இழந்த மகளிரை மதிப்பதில்லை; சிறப்பு செய்வதில்லை. சீரழிந்த நிலையிலே வாழ்கின்றனர் அவர்கள்.

ஆனால் இந்த நீதி இன்று பெண்டிர்களுக்கு மட்டும் தான் இருக்கிறது. கற்பு பெண்டிற்கு மட்டும் தான் என்று கருதுகிறோம். நாம் கற்பு என்பதின் பொருளை நன்கு அறியாததின் தவறுதான் அது. கற்பு என்றால் ஒழுக்கம் என்பதுதான் பொருள். ஒழுக்கம் ஆடவருக்கு அவசியமில்லையா? எப்படி பெண்டிர் பிற ஆடவரை நினைத்தல் கூடாதோ, அதேபோன்று ஆடவரும் பிறர் மனைவியை நயத்தல் கூடாது. "கற்புடை மாதர் பிறர் நெஞ்சு புகார்" என்றால் அது பெண்டிரை மட்டும் தான் குறிக்குமா? எப்படி 'நஞ்சுண்டவன் சாவான்' என்றால் 'நஞ்சுண்டவளும் சாவாள்' என்பது அடங்கியிருக்கிறதோ, அதேபோன்று "கற்புடை மாதர் பிறர்நெஞ்சு புகார்" என்றால் 'கற்புடை ஆடவரும் பிற மகளிர் நெஞ்சு புகார்' என்பது அடங்கியுள்ளது.

ஆடவர் பிறர் மனைவியை விழையாததே அவரது கற்பாகும். பிறர் மனைவியை விழைபவர் அறிவிலிகள்; அவர் இறந்தவர்க்கே சமம் என்கிறார் வள்ளுவர்.

"விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்
றீமை புரிந்தொழுகு வார்."

அவனை பகை, பழி, பாவம், பயம் நான்கும் விட்டு நீங்காது. ஆகையால் பிறர் மனைவியைப் பார்க்காதவன்தான் அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை நடத்துபவன் ஆவன். அவனை எல்லோரும் போற்றுவர். உலகத்தின்கண்ணே எல்லா நன்மைகளையும் பெறுவன். தான் செய்யவேண்டிய பிற அறங்களைச் செய்யாவிட்டாலும்கூட, பிறர் மனைவியை விரும்பாதிருத்தல் அவனுக்குச் சிறப்பைக் கொடுக்கும். அவனிடத்தில்தான் ஒழுக்கத்தின் உயர்வைக் காணமுடியும். அவனே ஒழுக்கத்தின் உருவாக மதிக்கப்படுவான்.

இந்த ஒழுங்குநிலை பண்டைத் தமிழர்களிடத்தே இருந்தது. பிறர்மனைநோக்கா பெரியோர்களாக பண்டைத் தமிழ் மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள். இதற்குச் சான்று தமிழ் இலக்கியங்களில் பல கிடைக்கின்றன. அவற்றில் ஒன்றை மட்டும் தருகிறேன்.

* * * *

அரிவைப் பருவம் அடைந்துவிட்டாள் அவள். அழகொழுகும் அருமையான வடிவம்; உறுப்பு நலன் எல்லாம் நிரம்பிய ஓர் உருவம் அவள். மணப்பருவம் அடைந்த மங்கை.

அவனும் தக்க பருவம் அடைந்தவன்; அகன்ற நெற்றி; விரிந்த மார்பு; திரண்ட தோள். கண்டார் உடனே காதல் கொள்ளும் காளை.

இருவரும் ஊழ்வினையால் சந்தித்தனர். கண்கள் பேசின அன்புகொண்டனர். அன்றுமுதல் களவொழுக்கத்திலே வாழ்க்கை நடத்திவர ஆரம்பித்தனர்.

காலம் தன் வழியே ஓடியது. ஊரிலே அலர் பரவ ஆரம்பித்தது. இருமுது குரவரும் மகளுக்கு மணம் பேசத் தொடங்கினர். இதைப்பார்த்தாள் அத்தலைமகள். தான் எண்ணியவனை அடையமுடியாதோ என அஞ்சினாள். சிந்தித்தாள்; ஒரு வழி புலப்பட்டது. அதுதான் உடன்போக்கு. தான் காதல்கொண்ட கணவனோடு ஊரார் அறியாது வேறூர் சென்று மணம் புரிந்து

கொள்வது எனத் தீர்மானித்தாள். அதுபோன்று ஒரு இரவு தாய் தந்தையர்கூட அறியாது நள்ளிரவில் நாயகனேடு ஊர்விட்டுச் சென்றுவிட்டாள்.

பொழுது புலர்ந்தது. தாய் எழுந்து பார்த்தாள். மகளைக் காணவில்லை. கவலை அவளைச் சூழ்ந்துகொண்டது; சூழ்ந்திருந் தோரையும், பாங்கியரையும் வினவினள். பெற்ற மனம் அல்லவோ? பெரிதும் கலக்கமுற்ருள்; மகளைத்தேடிப் புறப்பட்டு விட்டாள்.

கொஞ்சதூரம் சென்றவுடன் இரண்டு உருவம் தென்பட்டது. சரி தன் மகள் தன் கணவனுடன்தான் வருகிருள் என்று எண் ணிற்று அத்தாயுள்ளம். இன்னும் கொஞ்சம் அண்மையில் சென்றவுடன் ஒரு ஆணும் பெண்ணும் வருவது தெளிவாகத் தெரிந்தது. தன் மகள்தான் என்று உறுதிசெய்துகொண்டாள். உள்ளத்தே உவகை கொண்டாள். மகிழ்ச்சியால் முகம் மலர்ந்தது. ஆனுல்.........

அவ்விருவரும் நெருங்கிவந்தனர். அன்னைக்கு அளவிலா ஏமாற்றம் ஏற்பட்டது. தன் மகளைப்போல ஒருவள் தான் விரும்பிய ஒருவனேடு தன்னூர்விட்டு ஓடிவருகிருள் எனத் தெரிந்தது. அவர்களை உற்றுநோக்கினுள் அன்னை.

“ என்ன பார்க்கிறீர்கள் ? தாங்கள் யார் ? ” என்ருன் அவ் இளைஞன்.

“ உங்கள் இருவரையும் பார்த்து என்மகளும் அவள் காதல னும்தான் வருகிருர்கள் என்று எண்ணி மகிழ்ந்தேன் ” என்ருள்.

“ ஏன் ? அவர்கள் எங்கே ? ”

“ உங்களைப்போல அவர்களும் எங்கோபோய்விட்டார்கள். அவ்விதம் இருவரும் முன்பு போவதை நீங்கள் வரும் வழியில் பார்த்தீர்களா ” என்று தாய் சோகம் கலந்த குரலில் கேட்டாள்.

“ ஆம் ! ஒரு ஆடவனைக் கண்டேன்; புலியூரிலிருந்து நம்மைக்காக்கும் பெருமானின் மலையிலிருக்கும் யாளியைப்போல வலிமைவாய்ந்த அழகுள்ள ஒரு ஆடவனை மட்டும் கண்டேன். ”

" அப்புறம் பக்கத்தில் " ஆவலோடு வினவினுள் அன்னே.

" அவனுடைய அருகில் நான் ஒருவரையும் பார்க்க வில்லையே " என்று கூறிவிட்டு தன் காதலியின் பக்கம் திரும்பினுன்.

" தூண்டா விளக்கனையாய் ! அன்னே என்னமோ கூறுகின்ருளே ! நீ பார்த்தாயா ? " என்று கேட்டான்.

" ஆம் ! ஒரு அழகின் உருவான ஆரணங்கு ஒன்றைக் கண்டேன். வேருருவரையும் காணவில்லையே " என்ருள்.

அந்த ஆடவன் தன்னுெத்த ஆடவன் ஒருவனேத்தான் பார்த்ததாகவும், அவன் அயலில் அவனது காதலியை கண்ணெடுத்தும் பார்க்கவில்லை என்றும் கூறுகிருன். அதுபோலவே அவளும் தன்னுெத்த மகள் ஒருத்தியை மட்டும் கண்டதாகக் கூறுகிருள். பிறர் மனைவியைப் பார்க்காத பெருமை அவனிடத்திலிருந்தது.

" பிறன்மனே நோக்காத பேராண்மை சான்ருேர்க்கு
அறனுென்ருே வான்ற ஒழுக்கு. "

என்ற வள்ளுவர் வாக்குக்கு இலக்கியமாகத் திகழ்கிருன். பிறன் மனே நோக்கா பேராண்மையாகிய அறத்தை அவன் கடைப்பிடித்தான். அதுவே சிறந்த ஒழுக்கமாக அமைந்தது அவனிடம். அவனே நமக்குக் காட்டும் பாடல் இதோ :-

" மீண்டா ரேனவு வந்தேன் கண்டு நும்மை யிம்மேதகவே
பூண்டா ரிருவர் முன் போயினரோ புலியூ ரெனேநின்
ருண்டானரு வரை யாளி யன்னுனே கண் டேனயலே
தூண்டா விளக் கனேயா யென்னேயோ வன்னே சொல்லியதே. "

(திருக்கோவையார்)

நிந்தாஸ்துதி

18. மேருமலே யமர்ந்தா ணம்மோருதாய் மற்ருேருதாயம் மேருமன் வாழ், வாருமலே யமர்ந்தா ணம்மையனுங் கைலாயமலே யமர்ந்தான் றம்பி, நேருமலே யனைத்துமிடம் பிடிக்கின்ரு னமக்கு மலே நேரா தேன்ருே, நீருமலே யமர்ந்ததுகாண் பரங்கிரிக் கைம் மலேமுகத்து நித்தனுரே.

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. கே. முத்துஜோதிடர் அவர்கள்,
திருவிடைமருதூர்.

(துன்முகிஞூ ஆடிமீ 1உ முதல் 31உ முடிய)

(16-7-56 முதல் 15-8-56 முடிய)

1. மேஷம். அசுபதி - பரணி - கார்த்திகை ¼

அசுவதி பிற்பாதி 3, 4 நன்மையைத்தரும். தொழில் கிட்டும் விவசாயம் ஓங்கும். அசுவதி 1, 2 பாதங்கள் அதிக விரயத்தையும், குடும்ப கஷ்டங்களையும் உண்டுபண்ணும். பரணி முதல் பாதம் சென்ற மாதம்போலவே இருக்கும் விசேஷமாக கௌரவ பட்டங்களும், சபா பிரவேசமும் ஏற்படும். 2-ம் பாதம் அதிக கவலையையும் கஷ்டத்தையும் உண்டுபண்ணும். பரணி 3-ம் பாதம் இடம் மாறலையும், அபவாதங்களையும், ஹித சத்துருக்களையும் விருத்தி பண்ணும். பரணி நாலாம் பாதம், மிசிரமாய் நடக்கும், கார்த்திகை முதல்பாதம் ஆரோக்கியத்தைத் தரும், விவசாயம் ஓங்கும், அதிக செலவினங்கள் ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீரிஷம் ½

விருஷப ராசி 9 பாதங்களும், மாதம் முற்பாதியில் சகல வசதிகளையும், லாபத்தையும் தரும். பிற்பாதியில் அதிக தொல்லைகளையும் குடும்ப சிரமங்களையும், கலகங்களையும், நஷ்டங்களையும் விவகார உற்பத்தியையும் தந்து, கவலையைக் கொடுக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்

3. மிதுனம். மிருகசீரிஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிருகசீரிஷம் 3, 4 பாதங்கள் சுபமிராது. தொழில் கவலை உண்டுபண்ணும். அதிக விரயம் ஏற்படும், திருவாதிரை 1, 2 பாதங்கள் சுபமாகவும் லாபகரத்தோடும் தொழில் மேன்மையோடும் சந்தோஷம் தரும். திருவாதிரை 3, 4 பாதங்கள்

வியாதியையும், சத்துரு பயத்தையும், கடனையும் உண்டுபண்ணும். எந்தக் காரியமும் காலத்தில் நடைபெருமல் தடுக்கும். புனர்பூசம் சென்ற மாதம்போலவே இருப்பதோடு, விவசாயத்தில் அதிக சிரமங்களையும், சத்துரு விருத்தியையும், குடும்பத் தொல்லைகளையும், கௌரவ ஹானியையும், உண்டுபண்ணும் சனி, செவ்வாய் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்.

புனர்பூசம் நாலாம்பாதம், மிசிர பலனைத்தரும் வியாதி பீடை உண்டுபண்ணும். பூசம் முதல்பாதம் மேலோர் விரோதத்தைத் தந்து தொழில் நஷ்டம் ஏற்படும். காரிய விக்னமாகும். பூசம் 2, 3, 4 பாதங்கள் அதிக சிரமங்களைப் பலவிதத்திலும் தந்து மனக்குழப்பம் உண்டுபண்ணும், விவகாரம் ஏற்படும், ஆயில்யம் நான்கு பாதங்களும் ஜயத்தைத் தரும். எதிர்பாராத லாபம் கிடைக்கும். சத்துருக்கள் சரண் அடைவார்கள். குடும்பம் ஓங்கும். புதன், வியாழன் சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திராடம் $\frac{1}{4}$

மகம் நான்குபாதங்களும் சுபமாகும். இடம்மாறி உத்தியோக லாபம் கிடைக்கும். மேலோர் பெரியோர் அன்புமிக ஏற்படும். நண்பர்களால் பல நன்மைகள் உண்டாகும். பூரம் நான்கு பாதங்களும் அரண்ய சஞ்சாரம்போல் நடைபெறும். அலைச்சலும் கவலைகளும் அதிகமாகும். உத்திரம் முதல் பாதம் சுபமாகவும் சந்தோஷகரமாகவும் நடக்கும். தொழில் ஓங்கும் விவசாயத்தில் தொல்லை விளைவிக்கும். அதிக செலவுகள் ஏற்படும். புதன், வெள்ளி சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3, 4 பாதங்கள் விருதா காரியங்களில் தலையிட்டுக்கொண்டு சிரமப்படச்செய்யும். அனுவசிய செலவுகள் அதிகமாகும். ஹஸ்தம் முதல் பாதம் ஜயத்தைத் தரும். பெரியோர் அன்புகிட்டும். அடிக்கடி சஞ்சாரம் ஏற்படும். குடும்பம்

சுகம் உண்டாகும். ஹஸ்தம் 2, 3 பாதங்கள் உலகப் பிரஸித்தியையும், இஷ்டார்த்த சித்திகளையும் தரும். ஹஸ்தம் நான்காம் பாதம் அதிக உழைப்பையும், சரீரத்திற்கு ஆரோக்கியக் குறைவையும் உண்டு பண்ணும். சித்திரை 1, 2 பாதங்கள் புத்திராதிகளால் சந்தோஷம் தரும். சத்துரு ஓடிப்போவான். நஷ்ட தனம் கிடைக்கும். சனி, செவ்வாய் சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

துலாம் ஒன்பது பாதங்களும் சுபமாகும். விவகார வெற்றியும் கீர்த்தியும் தரும். க்ஷேத்திராடனம் ஏற்படும். பெரியோர் அன்பு கிட்டும். எதிர்பாராதபடி தன லாபங்கள ஏற்படும். நினைத்த காரியம் சித்திக்கும். கீர்த்தியும் சந்தோஷமும் உண்டாகும். தொழில் ஓங்கும். சென்றவிடமெல்லாம் சிறப்பும், பூஜிதையும், லாபமும் ஏற்படும். விவசாயம் பலன் தரும். புதன், வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விசாகம் நாலாம் பாதம் சுபமிராது. கஷ்ட நஷ்டங்களே உண்டாகும். அனுஷம் நான்குபாதங்களும் மிசிரமாய் நடக்கும். அடிக்கடி இடம் மாறல் ஏற்படும். பெரியோர் மேலோர் வருத்தத்தை உண்டுபண்ணும். கேட்டை நான்கு பாதங்களும் சந்தோஷமாகும். இல்லற சுகம் ஓங்கும். ஆரோக்கியம் தரும். விவகாரம் ராஜியாகும். விவசாயம் பலன் தரும். புதன், வெள்ளி சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் நான்கு பாதங்களும் சுபத்தைத்தரும். அடிக்கடி சுப சமாசாரக் கேள்வியும், மங்கள காரியங்களும் நடைபெறும். பூராடம் நான்கு பாதங்களும் விவசாயத் தொழில்களை உண்டு பண்ணும். நினைத்த காரியம் வெற்றி ஏற்பட்டு சந்தோஷம் உண்டுபண்ணும். உத்திராடம் முதல் பாதம் ஆரோக்கியத்தையும் கிரஹசுகத்தையும் தந்து தேய்வபலத்தை உண்டுபண்ணும். புதன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

உத்திராடம் 2, 3, 4 பாதங்கள் வீண் அலைச்சலையும் தொழில் கஷ்டத்தையும் தந்து இடம் மாறச்செய்யும். திருவோணம் 1, 2 பாதங்கள் பூர்ணசுபமிராது. அதிகச் செலவும், வீண் அலைச்சலும் தரும். திருவோணம் 3, 4 பாதங்கள் ஸ்திரமான ஜீவனலாபத்தையும் மேலோர் அன்பினுல் உத்தியோகத்தில் உயர்பதவிகளையும் தரும். அவிட்டம் 1, 2 பாதங்கள் விவகார வெற்றி, உயர்பதவிகள், சத்துருபராஜயமடைதல், எங்கும் கீர்த்தி, ராஜசபாபிரவேசம் முதலிய சுபங்களைத்தந்து, குடும்பத் தொல்லைகளை மாத்திரம் அதிகப்படுத்தும். செவ்வாய், சனி சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

அவிட்டம் 3, 4 பாதங்களும் சதயம் நான்கு பாதங்களும் சுபத்தைத்தரும். கிரஹசுகம் விசேஷமாகும். பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள் வியாதியைத் தரும். தேவ கோபத்தை உண்டு பண்ணும். மனம் சாந்தியடையாது. வீண் மனஸ்தாபங்கள் உண்டு பண்ணும். வியாழன், சனி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

பூரட்டாதி நாலாம் பாதம், உத்திரட்டாதி நான்கு பாதங்கள், ரேவதி 1, 2 பாதங்கள் மேன்மை உண்டுபண்ணும். தூர பிரயாணமும், காரிய சித்தியும், தொழில் லாபமும் உண்டு பண்ணும். ரேவதி 3, 4 பாதங்கள் மிசிரமாய் நடக்கும். ரோகத்தை உண்டுபண்ணும். புதன், வெள்ளி சுபமாகும்.

நிந்தாஸ்துதி

19. வில்லடிப் பயமோ பிரம்படிப் பயமோ வேடுவன் மிதியடிப் பயமோ, கல்லடிப் பயமோ காப்படி நின்னைக் கருதுமால் கணையடிப் பயமோ, வல்லடி வழக்கிற் சொல்லடிப் பயமோ மற்றுமேத் தோல் லடிப் பயமோ, நல்லடி யுதவ நணுகிலை பயந்தீர் நானடி யேனுமா பதியே.

தொண்டரின் தொண்டு

தருமபுர ஆதீன சமயப் பிரசாரத் தொண்டர், திரு. கோ. சிவஞானம் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திருவருளால் தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் தோறும் சமயப் பிரசாரம் செய்துவருகிருர்கள்; இதற்கு அறநிலயப் பாதுகாப்புத் துறை ஆணையாளரும் முழு ஆதரவு தந்துள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. நமது சமயப்பிரசாரத் தொண்டரின் பிரசாரம் பின்வருமாறு :—

13-5-56 சுந்தரப்பெருமாள்கோயில் 'எம்மதமும் சம்மதம்' என்னும் பொருள். 14ந்தேதி கண்டியூர் 'ஆலய வழிபாடு'. 15ந்தேதி தஞ்சை சிறைப்பள்ளி 'திருமுறைச் சிறப்பு'. 17ந்தேதி பூண்டி 'திருநாவுக்கரசர்'. 18ந்தேதி மிலட்டூர் 'நமது சமயம்'. 19ந்தேதி கும்பகோணம் 'திருநாவுக்கரசர்'. 20ந்தேதி நீடா மங்கலம் 'அப்பர் அருள்நெறி'. 21ந்தேதி மன்னுர்குடி 'திருநாவுக்கரசர் தொண்டு'. 22ந்தேதி பாமணி 'ஆளுடைய பிள்ளை'. 23ந்தேதி திருமக்கோட்டை 'ஆலய வழிபாடு'. 24ந்தேதி திருக்குவளை 'புராணச் சிறப்பு'. 25ந்தேதி அய்யம் பேட்டை 'நரசிம்ம மகிமை'. 26ந்தேதி தஞ்சை சிறைப்பள்ளி 'கடவுள் வழிபாடு'. 28ந்தேதி பாபநாசம் 'ஆண்டாளும் - அரங்கனும்'. 30ந்தேதி தருமபுரம் 'குரு பக்தி'. 3—6—56 ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்குமேல் திருச்சக்கரப்பள்ளி ஸ்ரீ சக்கரவரகேசுவரசுவாமி தேவஸ்தான திருப்பணித் தொடக்க விழாவில் சென்னை மாநில இந்துமத அறநிலயப் பாதுகாப்பு ஆணையர், உயர்திரு. A. உத்தண்டராமப் பிள்ளை B.A., B.L., I.A.S. அவர்கள் தலைமையில் 'திருப்பணியின் அவசியம்' என்ற பொருள்பற்றிப் பேசினுர்கள். 14—6—56 திருச்சத்திமுற்றம் 'ஆளுடை அரசு'. பட்டீஸ்வரம் 'சம்பந்தரும் வாகீசரும்'. 21ந் தேதி ஆத்தானூர் 'அம்மையருள்'. 22ந்தேதி தஞ்சை சீர்திருத் தப்பள்ளியில் 'மாணிக்கவாசகரின் மாண்பு' என்பதைப்பற்றிப் பேசினுர்கள்.

செய்திகள்

ஆதீனப் புலவர்க்கு

தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரி பிரின்ஸ்பால். சித்தாந்த ரத்னாகரம், மதுரகவி, முதுபெரும் புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களுக்குத் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசி நிரம்ப உண்டு. அது செய்து வரும் நலங்கள் பலப்பல. அண்மையில் மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நிகழ்ந்த குருபூசை விழாவில், மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும் "சித்தாந்த சிரோமணி" என்ற பட்டம் நம் முதலியார் அவர்கட்கு வழங்கிச் சிறப்புச்செய்தருளினார்கள். குருவருள் வாழ்க. சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக.

சீகாழியில்

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி ஆலயத்தில் திருக்கோயில்கொண்டுள்ள திருஞானசம்பந்த சுவாமிக்கு 26-5-56 சனிக்கிழமையன்று விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்துவிக்கப்பெற்றன. அன்று இரவு திருமுறைப் பாராயணத்தோடு திருஞானசம்பந்த சுவாமி திருவீதியுலாவும் நிகழ்ந்தது.

அன்று மாலை சிறந்த அறிஞர்களைக்கொண்டு சமயச் சொற்பொழிவுகளும், திருமுறைப் பாராயணமும் நடத்தப் பெற்றன.

முதுபெரும் புலவர், மதுரகவி, சித்தாந்த-ரத்னாகரம், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் (பிரின்ஸ்பால், தருமை ஆதீனக் கல்லூரி, தருமபுரம்.) "ஞானசம்பந்தரின் அரும் செயல்கள்" என்பது பற்றியும், வித்துவான், திரு. வி. சபேசன் அவர்கள் (தமிழாசிரியர், தருமை ஆதீனக் கீழைக் கலை உயர்பள்ளி) "ஞானசம்பந்தரும் - இயற்கை நலமும்" என்பது பற்றியும், திரு. சா. ஞானப்பிரகாசம் அவர்கள் (தருமை ஆதீனக்கல்லூரி) "ஞானசம்பந்தர் தேவாரத்தில் அகப்பொருட் சுவை" என்பது பற்றியும் மிகச் சிறந்த முறையில் பேசினார்கள்.

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி திருக்கோவிலில் திருக்கோயில் கொண்டுள்ள திருஞான சம்பந்தருக்குத் தை - அமாவாசை, பங்குனி, சித்திரை - திருவாதிரை, வைகாசி - மூலம், ஆனி - உரோகிணி, ஆவணி, ஐப்பசி - சதயம் ஆகிய ஏழு நாட்களில் சிறப்பு வழிபாடு நிகழ்த்திப் பங்குனிச் சதயத்தில் கொடியேற்றி, மிருகசீரிஷத்தில் தேர்த் திருவிழா நடத்தித் திருவாதிரையில் பிரம தீர்த்தத்தில் தீர்த்தம் கொடுத்தருளுங்கால் எல்லோரும் அதில் முழுகி அளவிலாப் பேறு எல்லாம் அடைக என்றருளினர் தோணியப்பர். அவ்வாறே அமரர் அனைவரும் வழிபட்டு வந்தனர். (சீகாழிப்புராணம் திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருவவதார அத்தியாயம் பா-81, 82)

அவ்வழிபாடு சீகாழியில் முன்னே நடந்து கொண்டிருந்தது. இப்போது தருமையாதீனம் 25-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் இவ்வழிபாட்டைத் தொடங்கி நடத்திவர அருளாணையிட்டிருக்கிறார்கள்.

அவ்வண்ணம், நிகழும் துன்முகி ஆண்டு ஆனித் திங்கள் உரோகிணி நாளில் (வியாழக்கிழமை 5—7—56) திருஞான சம்பந்தப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் தேவார பாராயணம் சொற்பொழிவுகள் முதலியன நிகழ்ந்தன.

மாலை 5 மணி முதல் வித்துவான் திரு. வி. சா. குருசாமி அவர்கள், (தமிழ்ப் பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்) "ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர்" என்ற தலைப்பிலும். வித்துவான் திரு. சோ. சிங்காரவேலனார் அவர்கள், (தமிழ்ப் பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்) "தாளம் வந்த தகைமை" என்ற தலைப்பிலும், திரு. ப. முத்துக்குமாரசுவாமி, மாணவர், (ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்) "அருந்தமிழ்" என்ற தலைப்பிலும் பேசினார்கள்.

இன்னிசைவாணர்களால் இடையிடையே திருமுறைப் பாராயணமும் நிகழ்த்தப்பெற்றது.

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி ஆலயத்தில் திருக்கோயில் கொண்டுள்ள திருஞானசம்பந்தருக்கு துன்முகி ஆண்டு வைகாசித்திங்கள் 31-ஆம் நாள் (13—6—56) புதன்கிழமையன்று

மாலை 5 மணிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்துவிக்கப்பெற்றது. அன்று திருஞானசம்பந்தருக்கு வெள்ளியால் புதிதாகச் செய்யப்பெற்ற மஞ்சம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவ்விசேடத்தை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் ஆலயத்திற்கு எழுந்தருளி வழிபாடியற்றியருளினூர்கள். வழிபாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டில் கலந்து கொண்டவர்கள் எல்லோருக்கும் "அக்காரவடிசில்" பிரசாதம் வழங்கப் பெற்றது.

ஸ்ரீ காசிமடத்துத் தருமம்

திருவாதவூரில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் ஆனி மக நன்னாளை முன்னிட்டு அன்னம் பாலிப்பு நடைபெறும். (திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் அளிக்கப்பெற்ற தரும நிதியைக்கொண்டு ஸ்ரீ வைகுண்டம் குமரகுருபரன் சங்கத்தின் நிர்வாகத் தலைவர் ஸ்ரீ T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்களால் இத்தருமம் நிறுவப்பெற்றது.

திருவாசகத்தேனை உலகுய்யத் தந்தருளிய ஸ்ரீ மாணிக்க வாசகப் பெருமானின் திருவவதாரத்தலமாகிய திருவாதவூரில் மாணிக்கவாசகப் பெருமானின் திருநக்ஷத்திரமாகிய ஆனி மக நாளன்று, நாளது துன்முகி ஆண்டு ஆனித் திங்கள் 28ம் நாள் (11—7—56) புதன்கிழமை திருவாதவூர் மதுரை வகையரு தேவஸ்தானத்தைச் சேர்ந்த மாணிக்கவாசக சுவாமிகள் சன்னதியில், திருவாசகப் பாராயணமும் அன்னம் பாலிப்பும் நடைபெறும்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருமுறைவளர்ச்சி, கல்வி அபிவிருத்தி, சைவசித்தாந்தம் பரப்புதல், அன்னதானம், வைத்தியம், முதலிய பல வசதிகள் செய்ய, பல லக்ஷக் கணக்கான ரூபாய்கள் மூலம் தனம்வைத்து நடத்தச் செய்து உள்ளார்கள். இத்தர்மங்கள் தற்போது சிவதர்ம பாஸ்கர, ம. க. சுந்தரேசபட்டர், (பிரதம நிர்வாகஸ்தானீகம், திருவாதவூர் & மதுரைக்கோயில் காசிமடம் ஆசிரிதம்) அவர்கள் மேற்பார்வையின்கீழ் நடைபெறுகிறது. 11-7-56 அன்று சிறந்த இன்னிசை வாணர்களால் இன்னிசைப் பாராயணமும், சிறந்த சொற்பொழிவுகளும் சிறந்த முறையில் நடைபெறும்.